## தாகூரின்

# ஐம்பெருங் கட்டுரைகள்

தமிழாக்கம் :

சி. சுப்பிரமணிய பாரதியார்

பதிப்பாசிரியர் :

பெ. தூரன்

இன்ப நிலையம்

மயிலாப்பூர் :: சென்னை-4.

முதற் பதிப்பு, நவம்பர், 1962.
உரிமை பதிவுற்றது.

விலை ரூபாய் இரண்டரை

மாருதி பிரஸ், 83, பீட்டர்ஸ் ரோடு, சென்னை—14.

# முன்னுரை

ஒரு சிறந்த கலைஞனுடைய பெருமையை மற்றொரு சிறந்த கலைஞனைப்போல் வேறொருவர் அறிந்துகொள்ள இயலாது. அழுக்காறு என்ற அழுக்குப் படியாத காலத்தில் இந்த உண்மை மிக நன்றாக வெளிப்படும். பாரதியார் ஒரு மிகச் சிறந்த கவிஞர். அவர் உள்ளத்திலே மாசில்லை. அதனால் நம் நாட்டிலே தோன்றிய மற்றொரு சிறந்த கவிஞரின் பெருமையை நன்கு உணர்ந்திருக்கிறார். உணர்ந்ததோடு மட்டுமல்லாமல் அவருக்குத் தமது எழுத்தின் மூலம் பாராட்டுதலையும் சிறந்த முறையில் தெரிவித்திருக்கிறார். ஸ்ரீ ரவீந்திரர் திக் விஜயம் என்ற பாரதியாரின் கட்டுரை இதற்கு நிலையான சான்றாக அமைந்துள்ளது. இக்கட்டுரை சுதேசமித்திரனில் 1921-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 25-ஆம் தேதியன்று வெளியாகியிருக்கிறது. பாரதியார் எழுதியவற்றுள் இதுவே நமக்குக் கிடைத்த இறுதிக் கட்டுரை. இதற்கு மேலே பாரதியார் வேறு எதுவும் எழுதியதாகத் தெரியவில்லை.

இக் கட்டுரை எழுதியபின் பாரதியார் ஒரு சில நாட்களே இவ்வுலகில் வாழ்ந்திருக்கிறார். ஆகஸ்ட் 25-ல் இக் கட்டுரை வெளியானதல்லவா? அடுத்த செப்டம்பர் 11-ஆம் தேதியில் பாரதியாரின் பூத உடல் ஒய்ந்துவிடுகிறது. உலகப் புகழ் பெற்ற ஒரு கவிஞருக்கு மற்றொரு சிறந்த கவிஞர் தமது இறுதி அஞ்சலியைச் செலுத்திவிட்டு விடை பெற்றுக் கொள்கிறார்.

ரவீந்திரநாத தாகூரிடம் பாரதியாருக்கு எவ்வளவு மதிப்பும் அன்பும் இருந்தன என்பதற்கு பாரதியார் எழுதிய வேறொரு குறிப்பையும் எடுத்துக் காட்டலாம். 1920, டிசம்பர் 10–ஆம் தேதியன்றும் பாரதியார் சுதேச மித்திரனில் 'விசேஷக் குறிப்புக்கள்' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். அதில் தாகூரின் நாடகம் ஜெர்மனி நாட்டில் அரங்கேறியதை முதன்மையாகக் குறிப்பிடுகிறார்.

பாரதியார் எழுதியுள்ளதாவது: "ஜெர்மனியில் மெய்ன் நதிக் கரையிலுள்ள ப்ராங்க்போர்ட் நகரத்தில் சென்ற நவம்பர் 27–ஆம் தேதியன்று ஸ்ரீமான் ரவீந்த்ர நாத டாகுரின் புதிய நாடகமாகிய 'இருட்டறை வேந்தன்' என்பது ஜெர்மானிய பாஷையில் நடித்துக் காட்டப்பட்டது. இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் ஏற்கெனவே டாகுரின் நாடகங்கள் சில முறை நடித்துக் காட்டப்பட்டிருக்கின்றன. ஆனால் ஐரோப்பாவில் இது தான் முதல் முறையென்று தெரிவிக்கப்படுகிறது. இந்தியாவின் நாகரிகம் உலகத்தில் பரவுவதற்குத் தொழில் புரியும் நமது காலத் தொழிலாளிகளில் ரவீந்த்ர பாபுவை முன்னணியில் சேர்க்க வேண்டும்."

ரவீந்திர நாத தாகூரின் வாக்கிலே பாரதியாருக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு என்பதை வேறொரு வகையாகவும் காணலாம். தாகூரின் சிறந்த கவிதைகள், கதைகள், கட்டுரைகள் சிலவற்றைப் பாரதியார் தமிழாக்கம் செய்துள்ளார். 'வளர் பிறை' குழந்தைக் கதை என்ற கட்டுரையிலே தாகூரின் சில பாடல்களையும், தனியாக 'நாட்டுக் கல்வி' என்ற பாடலையும் மொழி பெயர்த்திருக்கிறார். தாகூரின் சிறுகதைகள் சில வெளியான காலத்திலேயே பாரதியார் அவற்றைத் தமிழில் தந்திருக்

கிறார். தாகூர் எழுதிய ஐந்து சிறந்த கட்டுரைகளை இவர் தமிழில் பெயர்த்தது ஒரு சிறந்த பணியாகும். இக்கட்டுரைகள் 'தாகூரின் பஞ்சவியாசங்கள்' என்ற தலைப்புடன் பல ஆண்டுகளுக்கு முன் வெளியாயிற்று. அந் நூலின் பிரதிகள் இப்பொழுது கிடைப்பதில்லை. திரு. பி.ஸ்ரீ. அவர்கள் அருமையாகப் பாதுகாத்து வைத்திருந்த பிரதியொன்றை எனக்கு அன்புடன் உதவினார்கள். அதில் கடைசிப் பக்கம் மட்டும் இல்லை. அவருக்கு என் நன்றி உரியது.

தாகூர் எழுதிய ஐந்து கட்டுரைகளும் 'மாடர்ன் ரெவியூ' என்ற பத்திரிகையில் கீழ்க்கண்ட தேதிகளில் வெளியாகியுள்ளன.

1. ஜப்பானுடைய ஜீவன் (The Spirit of Japan) 1917 ஜூன்.
2. ஜாதி (The Nation) 1917 ஜூலை.
3. அடங்கி நட (Thau Shalt Obey) 1917 செப்டம்பர்.
4. கல்வி கற்பிக்கும் பாஷை (The Medium of Education) 1917 அக்டோபர்.
5. சிறிதும் பெரிதும் (The Smalc And the Gread) 1917 டிசம்பர்.

இவற்றில் ஜப்பானுடைய ஜீவன், ஜாதி என்பவை தாகூரால் ஆங்கிலத்திலேயே எழுதப் பெற்றவை. மற்றவை மூன்றையும் வங்காளி மொழியில் அவர் எழுதினார். ரவீந்திர தாகூரின் உடன் பிறந்தார் மைந்தரான திரு. சுரேந்திரநாத தாகூர் என்பார் அவற்றை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்திருக்கிறார். இந்த விவரங்களை ரவீந்திரநாத தாகூரின் மைந்தர் ரதீந்திரநாத தாகூர் எனக்குத் தெரிவித்ததோடு இக்கட்டுரை

ஸன் கேட்ட அன்புடன் அனுமதியும் தந்தார்கள்; மாக்மில்லன் கம்பெனியாரும் அனுமதியளித்தார்கள். அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

தாகூரின் கட்டுரைகள் ஆழ்ந்த, பரந்த கருத்துக்களைத் தாங்கி நிற்கின்றன. அவை என்றும் நமது நினைவில் இருக்கத் தக்கவை. நாட்டு விடுதலையோடு, எண்ணத்திலும் விடுதலை வேண்டும், கட்டுப்பாடு கூடாது என்பதை அடங்கி நட என்ற கட்டுரை நன்கு வற்புறுத்துகின்றது. சிறிதும் பெரிதும் என்ற கட்டுரையும் இதையே வேறு வகையில் நோக்குகின்றது. அதில் தாகூரின் மனவிரிவைக் கண்டு வியப்பெய்தாமலிருக்க முடியாது. தேசியம் எவ்வாறு ஒரு குறுகலான நெறியை வகுத்துக் கொண்டு மக்களினத்திற்குத் தீங்காக நிற்கிறது என்பதை ஜாதி என்ற கட்டுரை தெளிவாகக் காட்டுகிறது. ஜப்பானுடைய ஜீவன் என்ற கட்டுரை தாகூர் ஜப்பானில் செய்த சொற்பொழிவாகும். 1917-லேயே அவர் ஜப்பானுக்குச் செய்த எச்சரிக்கை தீர்க்க தரிசனம் நிறைந்ததாகும். இந்த எச்சரிக்கையை அந்நாடு அன்று கவனித்திருந்தால் இரண்டாம் உலக யுத்தத்தில் அதன் நிலை சீர் குலைந்திருக்காது. இக் கட்டுரையில் கண்டுள்ள உபதேசத்தை ஜப்பான் மட்டுமல்ல, எல்லா நாடுகளும் பின்பற்றினால் அவற்றிற்கு நிலையான நலனுண்டாகும். கல்வி கற்பிக்கப்பட வேண்டிய போதனா மொழி பற்றி இன்று பல விதமான கருத்துக்கள் நிலவி வருகின்றன. தாய் மொழியைப் போல வேறு எந்த மொழியும் கல்வி கற்பிக்க அதற்கிணையாக முடியாது என்பது அறிஞர்களின் ஒருமனப்பட்ட முடிபாகும். தாய் மொழியிலேயே உயர்தரக் கல்வியனைத்தையும் புகட்டவேண்டும் என்று கல்வி கற்பிக்கும் பாஷை என்ற கட்டுரையில்

ரவீந்திரர் 1917-லேயே தெளிவாகக் கூறியுள்ளார். பாரதியாரும் இதே கருத்தைப் பல இடங்களில் எழுதியிருக்கிறார். இந்த இரண்டு கவிஞர்களின் வாக்கு விரைவில் நிறைவேற வேண்டும்.

தாகூரின் உரை நடை பலவிடங்களில் கவிதைத் தன்மை வாய்ந்தது. அதன் சுவை குன்றாமலும், மொழி பெயர்ப்பு என்று தோன்றாமலும் பாரதியார் இக்கட்டுரைகளைத் தமிழில் தந்துள்ளார். நடையிலே வடமொழிச் சொற்கள் மிகுந்துள்ளது என்பது மெய்தான். ஆனால் புதியதொரு தமிழ் நடையை உருவாக்கிய பெருமை பாரதியாருடையது. கருத்துத் தெளிவும், ஏற்ற சொற்களைப் பயன்படுத்தும் தன்மையும் அதில் சிறப்பாக அமைந்துள்ளன. வேறு இடங்களிலே பாரதியாரின் உரைநடை மிக எளிமையோடு விளங்குகிறது. மொழி பெயர்ப்புக்காக அவர் சற்று வேறான நடையைக் கையாண்டிருப்பதை நாம் காணலாம். வளம்பட்டு வளர்ந்துள்ள ஆங்கில உரை நடையின் பொருள் நுட்பம், தெளிவு, குழைவு, அழுத்தம் முதலிய எல்லா அம்சங்களையும் தமிழிலே பாரதியார் கொண்டு வந்திருப்பது ஒரு சிறந்த பணியாகும்.

பாரதியார் தமிழ் உரைநடைக்குச் செய்துள்ள அரிய பணியை நாம் இன்னும் சரியான முறையில் புரிந்து கொள்ளவில்லை. அவர் உரைநடையில் இரண்டு வெவ்வேறு விதமான போக்கைக் கையாண்டிருக்கிறார். எளிமையும் வளைவு சுழிவின்றி நேராக விஷயத்தை உள்ளத்தில் தைக்கும்படி சொல்லுவதில் அவர் தனித்திறமை கொண்டிருக்கிறார். எளிமையும், பேச்சு மொழியும் அதிலே முதன்மை வகிக்கின்றன. அந்த நடைக்கு அத்தனை வலிமையும் அழகும் இருப்பதை பாரதியார்

எழுதும் வரை யாரும் நன்றாக உணரவில்லையென்று கூறலாம்.

பாரதியாரின் ஒருவகை உரைநடைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக அவருடைய ஞானரதம் என்ற நூல் விளங்குகிறது. அவருடைய கடிதங்களிலும், வருணனை விளக்கங்களிலும் சிறுசிறு வாக்கியங்களின் அழகைக் காணலாம். மாலைப் பொழுதிலே கதிரவனின் அற்புத எழிலை அவர் மிக அழகாக எடுத்துக் காட்டுவதைப் பாஞ்சாலி சபதத்தின் விளக்கக் குறிப்பொன்றில் நன்கு காணலாம். அக்குறிப்பின் ஒரு பகுதியை இங்கு பார்ப்போம்.

"பார்! ஸூர்யனைச் சுற்றி மேகங்களெல்லாம் தீப்பட்டெரிவது போலத் தோன்றுகிறது! ஆஹா! என்ன வர்ணங்கள்! எத்தனைவித வடிவங்கள்! எத்தனை ஆயிர விதமான கலப்புக்கள்! அக்கினிக் குழம்பு! தங்கம் காய்ச்சிவிட்ட ஓடைகள்! எரிகின்ற தங்கத் தீவுகள்!

நீல ஏரிகள்! கரும் பூதங்கள்! எத்தனைவகை நீலம்! எத்தனைவிதச் செம்மை! எத்தனை வகைப் பசுமை! எத்தனை வகைக் கருமை! நீல ஏரியின்மீது மிதக்கும் தங்கத் தோணிகள்! எரிகின்ற தங்க ஜரிகைக் கரை போட்ட கரிய சிகரங்கள்! தங்கத் திமிங்கிலங்கள் மிதக்கும் கருங்கடல்! எங்கு பார்த்தாலும் ஒளித்திரள், வர்ணக் களஞ்சியம். போ, போ, என்றால் அதை வர்ணிக்க முடியாது."

பாரதியாருடைய மற்றொரு வகை நடையை அவருடைய மொழிபெயர்ப்பு இலக்கியத்தில் காண்கிறோம். அதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு இந்த நூலேயாகும். வடமொழிச் சொற்களைக் கையாளுவதில் பாரதியார் என்றும் தயங்கவில்லை. மொழிபெயர்ப்பில்

தான் அவர் தமிழிலே வழக்கிலில்லாத பல வட சொற்களையும் அவற்றின் பொருத்தம் நோக்கிப் பயன்படுத்துகிருர். ஒற்ற சொல்லால் தாகூரின் ஆழ்ந்த கருத்துக்களை அவர் நமக்குக் கொடுப்பதையே முக்கியமான நோக்கமாகக் கொண்டிருக்கிருர். எழுத்தின் பயனே அதுதானே?

பாரதியார் எவ்வாறு எழுத்துக்களைக் கூட்டிச் சொற்களை அமைத்தாரோ அவ்வாறே இப்பதிப்பில் அவை தரப்பட்டுள்ளன. இந்த உரைநடையின் சிறப்பையும், செறிவையும், நுணுக்கத்தையும் கருத்தூன்றிப் படித்து உணர்ந்து இன்புறலாகும்.

பெ. தூரன்

# ஸ்ரீ ரவீந்திர திக் விஜயம்

''—மன்னற்குத் தன் தேச மல்லாற் சிறப்பில்லை;
கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு.''

ஆஹா, மனிதராகப் பிறந்தோரில் கீர்த்தி பெற்றால் மாத்திரம் என்ன ப்ரயோஜனம்? என் நண்பர் பெயர் சொல்லப்படாத ஒருவருக்குக்கூட ஓரிடத்தில், ஒரு கூட்டத்தினிடையே ஒரு கக்ஷியாருக்குள் ஒருவிதமான கீர்த்தி ஏற்பட்டிருக்கிறது.

நாளை அந்தக் கக்ஷி புகையாய்விடும். அந்தக் கூட்டம் இருந்த இடம் தெரியாமல் போய்விடும். அந்தக் கீர்த்தி, ''பொய்யாய்ப் பழங் கதையாய்க் கனவாய் மெல்லப் போய்விடுமே.''

கீர்த்தியடைந்தால், மஹான் ரவீந்த்ரரைப் போலே அடைய வேண்டும். வங்காளத்தில் மாத்திரமா? இந்தியா முழுமையுமா? ஆசியா முழுதுமா? ஜெர்மனி, ஆஸ்த்ரியா, பிரான்ஸ் பூமண்டல முழுமையும் பரவின கீர்த்தி. இத்தனைக்கும் அவர் பாடிய பாட்டுக்களோ வங்க பாஷையிலே உள்ளன. வெறும் மொழிபெயர்ப்புகளைத்தான் உலகம் பார்த்திருக்கிறது. அதற்குத்தான் இந்தக் கீர்த்தி.

ஜெர்மனியிலே, இவருடைய அறுபதாம் வருஷக் கொண்டாட்டம் சில தினங்களின் முன்பு கொண்டாடப்பட்டது. அப்போது (பி) பெர்ன்ஸ்தாப் (எப்)

முதலிய மஹா பிரமுகர்கள் கூடி ஒரு ஸமிதி சமைத்துக்கொண்டு, இக்காலத்தில் ஜெர்மன் பாஷையில் எழுதப்பட்டிருக்கும் மிக முக்யமான காவ்யங்களும், சாஸ்த்ர க்ரந்தங்களும், பிற நூல்களும் அடங்கிய மிக விலையுயர்ந்த புஸ்தகத் தொகுதியொன்று டாகுருக்கு ஸம்மானம் செய்தார்கள்.

ஜெர்மனி தேசம் இன்றைக்கும் ஐரோப்பாக் கண்டத்தின் வித்யா ராஜதானியாக விளங்குகிறது. ஜெர்மனியில் நமது பாரத ரவீந்த்ரராகிய நவீந்த்ரருக்கு நடத்தப்பட்ட உபசாரங்களெல்லாம் அவருக்குச் சேரமாட்டா. பாரதமாதாவின் பாத கமலங்களுக்கே சேரும். ஜெர்மனியில் உபசாரம் நடந்த மாத்திரத்திலே, அதைப் பின்பற்றி மற்ற முக்யமான ஐரோப்பிய தேசங்களெல்லாம் அவருக்குப் பூஜை நடத்துமென்பது சொல்லாமலே விளங்கும். அங்ஙனமே நடத்தியுமிருக்கின்றன என்பதைக் கீழே நன்கு விவரணம் புரிவோம்.

1921-ம் வருஷம், மே மாஸம், 21-ந் தேதியன்று, "ஹம்புர் கெர் ஜெய்துங்க" என்ற பத்திரிகையில் ஒருவர் எழுதியிருக்கும் நிருபத்தில் ஸ்ரீமான் டாகுரைப் பற்றிய பின்வரும் வசனங்கள் கவனிக்கத் தக்கன: "ஸ்ரீமான் ரவீந்த்ரநாத டாகுர் ஸபைக்குள் வந்து பிரவேசித்த மாத்திரத்தில் எங்கள் அறிவுக் கெட்டாத ஒரு சக்தி வந்து புகுந்தது போலிருந்தது. இந்த மனிதருடைய வாழ்க்கையில் ஒற்றை க்ஷணமாவது இவர் எல்லையில்லாத ஜகத்துடன் லயப்பட்டு நில்லாத க்ஷணம் கிடையாதென்பது

தெளிவாகப் புலப்பட்டது. அவருடைய ஆரம்ப கானங்களே மிகவும் வியக்கத்தக்கனவாக இருந்தன. கீழ்த்திசைக்கும் மேற்றிசைக்கும் நிகழ்ந்திருக்கும் சந்திப்பே இந்த நூற்றாண்டின் மிகப் பெரிய ஸம்பவமென்று ரவீந்த்ரர் தம்முடைய முதல் வாக்யமாகக் கூறினர். ஆசியா ஐரோப்பாவிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டிய உண்மைகள், ஆசியா ஐரோப்பாவிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டிய சக்திகள் பல இருக்கின்றன என்பதை ரவீந்திரர் மறுக்கவில்லை. இதனை மேற்றிசை உபந்யாஸங்களினிடையே அவர் பன்முறை அங்கீகாரம் செய்திருக்கிறார். இந்தியாவுக்கு வந்தபின்னர் சில ஆங்கிலோ இந்தியப் பத்திராதிபர்களுக்குப் பேரானந்தம் விளையும்படி மிகவும் அழுத்தமான பாஷையில் வற்புறுத்தியிருக்கிறார். ஆனால் இஃதன்று அவருடைய முக்யோபதேசம். நாம் மேற்றிசையாரிடம் கற்றுக் கொள்ள வேண்டிய அம்சங்களைக் காட்டிலும், அவர்கள் நம்மிடம் கற்றுக்கொள்ள வேண்டிய அம்சங்கள் அதிகமென்பதே அவருடைய மதம். ஆசியாவையும் ஐரோப்பாவையும் ஒற்றுமைப் படுத்தினலன்றி, உலகத்தில் யுத்தங்கள் நிற்கப் போவதில்லை. ஆசியாவும் ஐரோப்பாவும் ஸமத்வம், ஸஹோதரத்வம், அன்பு என்றதளைகளாலே கட்டப்பட்டாலன்றி, உலகத்தில் ஸமாதானத்துக் கிடமில்லை. ஸமாதானமேயில்லாமல், மனிதர் பரஸ்பரம் மிருகங்களைப் போலே கொலை செய்து கொண்டு வருமளவும், மனிதருக்குள்ளே நாகரிக வளர்ச்சியைப் பற்றிப் பேசுதல் வெற்றுரையேயாகு

மென்று கூறி விடுக்க. ஆசியாவையும் ஐரோப்பாவையும் இங்ஙனம் ஒற்றுமைப்படுத்துதற்குரிய பல புதிய உண்மைகளையும் அறங்களையும், தம்முடைய அற்புதமான நூல்களாலும், உபந்யாஸங்களாலும் தெளிவுபடுத்தி மஹான் டாகுர் இந்த பூமண்டலத்தையே தமக்குக் கடன்படுமாறு செய்துவிட்டார். இதனை ஜெர்மனி முற்றிலும் நன்குக உணர்ந்துகொண்டு, அதன் பொருட்டாக நம் ரவீந்த்ரரிடம் அளவிறந்த மதிப்புச் செலுத்துவதுமன்றி அபாரமான நன்றியும் செலுத்துகிறது.

ஆஸ்த்ரியா தேசத்தில் பாரத கவிராஜ ரவீந்த்ரருக்கு நடந்த உபசாரங்கள் வர்ணிக்கத் தக்கன அல்ல. 1921 ஜூன் 26-ஆந் தேதியன்று, லண்டன் "அப்ஸர்வர்" பத்திரிகையின் வியென்நா நிருபர் எழுதிய கடிதமொன்றில் பின்வருமாறு கூறுகிறார்:—

"வியென்நா நகரத்துப் பொதுஜனங்களாலும் பத்திராதிபர்களாலும், ஒருங்கே இத்தனை ஆழ்ந்த பக்தி சிரத்தைகளுடனே, இத்தனை ஒருமனமான புகழ்ச்சி வந்தனைகளுடனே நல்வரவேற்கப்பட்டோர், வேறெவரும் கவிகளிடையேயுமில்லை, பெரிய பெரிய ராஜ்ய தந்த்ரிகளிடையேயுமில்லை, வீர ஸேனாதிபதிகளிடையேயு மில்லை; மன்னர்களிடையேயு மில்லை" என. ஆஹா! இஃதன்றோ கீர்த்தி. இதனைக் குறிப்பிட்டன்றோ, முன்பு திருவள்ளுவனாரும், "தோன்றிற் புகழொடு தோன்றுக" என்றார்.

தன் பொருட்டாகச் சேகரிக்கப்படும் கீர்த்தியொரு கீர்த்தியாகுமோ? ஒரு தேச முழுமைக்கும்

கீர்த்தி சேகரித்துக் கொடுப்போனுடைய புகழே புகழ். ரவீந்த்ரநாதர் இந்தியாவை பூலோக குரு வென்று பூமண்டலத்தார் கண் முன்னே நிலைநாட்டிக் கொடுத்தார். அவருடைய திருவடி மலர்கள் வாழ்க.

இந்தியாவின் ஞானோபதேசமாகிய அமிர்தத்துக்கு, ஐரோப்பாவில் உயர்ந்த தரத்து மேதாவிகள் எத்தனை வேட்கையுடன் காத்திருந்தன ரென்பது மேலே கூறிய ஆஸ்த்ரிய நிருபரின் கடிதத்திலே மற்றொரு பகுதியில் பின்வரும் வசனத்தாலே நன்கு விளக்கப்படுகின்றது :—"இந்த நூற்றாண்டின் சிதறுபட்ட குழந்தைகளாகிய நாம் (ஐரோப்பியர் இப்போது ஒற்றுமையை நாடித் தவிப்பது போல் இதுவரை எப்போதும் தவித்தது கிடையாது.) நரகவாதனைப் படுகிற நாம் இன்னும் எதிர்காலத்தில் இந்த மண்மீது தேவலோக அனுபவங்களெய்துவோம் என்று கனவுகள் காண்பதை விடவில்லை. இப்படியிருந்த எங்கள் முன்னே மற்றொரு லோகத்திலிருந்தொரு மனிதன் வந்தது போலே டாகுர் வந்தார். அவரை நல்வரவு கூறி உபசரிப்பதற்கு இப்போது நாம் தகுதி பெற்றிருப்பதுபோல் இதுவரை எப்போது மிருந்ததில்லை. இப்போது ஆயத்தமாக இருப்பது போல், இதுவரை எப்போதும் ஆயத்தமாக இருந்தது கிடையாது. இஃது நேற்று அவருக்கு நடந்த உபசாரங்களாலே நன்கு விளங்கிற்று" என்று அந் நிருபர் கூறுகிறார்.

இனி பிரான்ஸ் முதலிய மற்ற தேசங்களில் இந்தக் கவீசுவரருக்கு நடந்த உபசாரங்களைப் பற்றிப்

பேசு முன்னர், இவர் இந்தியாவின் எந்த உண்மையைத் தெரிவித்தபடியாலே இங்ஙனம் பாரத பூமிக்கு பூலோக குருத்தன்மை ஏற்படுத்திக் கொடுக்க வல்லோர் ஆயினர் என்பதைச் சற்றே ஆராய்ச்சி புரிவோம் :—

அந்த பழைய வேத உண்மை; எல்லாப் பொருள்களும் ஒரே வஸ்துவாகக் காண்பவன் ஒருவனுக்கு மருட்சியேது? துயரமேது? எல்லாம் ஒரே பொருளென்று கண்டவன் எதனிடத்தும் கூச்சமேனும், வெறுப்பேனும், அச்சமேனும் எய்தமாட்டான். அவன் எல்லாப் பொருள்களிடத்தும் அன்பும், ஆதரவும், ஸந்துஷ்டியும், பக்தியும் செலுத்துவான். எல்லாப் பொருளிலும் திருப்தி பெறுவோன் எப்போதும் திருப்தியிலிருப்பான். இங்ஙனம் மாறுத சந்தோஷ நிலையே முக்தி நிலையென்றும் அமர பதமென்றும் கூறப்படுவது. இதனை மனிதன் அப்யாஸத்தாலும் நம்பிக்கையாலும் இந்த உலகத்தில் எய்திவிட முடியும். இதுவே வேதரஹஸ்யம்.

இந்த ஆத்ம ஐக்கியமான பரம தத்துவத்தை மிக இனிய தெளிந்த வசனங்களாலே ஐரோப்பாவுக்கு எடுத்துக் கூறியது பற்றியே ரவீந்த்ர கவிச் சக்ரவர்த்திக்கு ஐரோப்பா இங்ஙனம் அற்புத வழிபாடு செலுத்திற்று.

— சி. சுப்பிரமணிய பாரதியார்

---

குறிப்பு : இக்கட்டுரை சுதேசமித்திரனில் 1921 ஆகஸ்டு 25-ஆம் தேதியன்று வெளியாயிற்று.

## கட்டுரைகள்


1. அடங்கி நட ... 17
2. ஜாதி ... 49
3. சிறிதும் பெரிதும் ... 61
4. ஜப்பானுடைய ஜீவன் ... 99
5. கல்வி கற்பிக்கும் பாஷை ... 130

# அடங்கி நட

மழை கொஞ்சம் தூற ஆரம்பித்தால், எங்கள் சந்திலும், அது போய்ச் சேரும். சித்பூர் ரஸ்தாவிலும் நீர் வெள்ளமாய் விடுகிறது. நான் தலை நரைத்த கிழவனாய்விட்டேன். சிறு பிராய முதல் இதுவரை, ஒரு முறைகூடத் தவறாமல் வருஷந்தோறும் இப்படி நடப்பதைப் பார்க்கும்போது, இவ்வுலக வாழ்க்கையில் நீரில் பாதி, நிலத்தில் பாதி குடியிருக்கும் ஜந்துக்களுக்குள்ள யோக்யதைதான் நமக்கும் இருக்கிறதென்ற எண்ணம் என் மனதில் அடிக்கடி உதிப்பதுண்டு.

இங்ஙனம் அறுபது வருஷங்கள் ஆய்விட்டன. இதற்கிடையே உலகத்தில் நடந்த மாறுதல்கள் பல. கலியுகத்தின் குதிரையாக இருந்த நீராவியை இப்போது மின்சார சக்தி கண்டு நகைக்கிறது. கண்ணுக் கெட்டாதிருந்தது பரமாணு. இப்போது மனதுக் கெட்டாதிருந்த சித்தாந்தம் உண்டாயிருக்கிறது. சாகப்போகிற எறும்பைப்போல் மனிதன் சிறகு முளைத்துப் பறக்கிறான். 'வானத்தில் இடம், உனக்கா எனக்கா' என்று நீதிஸ்தலத்திற்கு வியாஜ்யங்கள்

விரைவாக வரக்கூடிய காலத்தை வக்கீல்கள் எதிர்பார்க்கிறார்கள். ஒரே நாள் இரவில் சீனர் எல்லோரும் 'பன்றிக் குடுமி'யை நறுக்கி எறிந்தனர். ஐந்நூறு வருஷத் தாவுதலை ஜப்பான் ஐம்பது வருஷத்தில் தாவிவிட்டது. ஆனால், இந்தச் சித்பூர் ரஸ்தாவில் மழை பெய்தால் சேறு உண்டாகாமற் செய்ய வழியில்லை. அதன் ஸ்திதிக்கு மாறுதல் இல்லை. காங்கிரஸ் என்ற பெயர் உண்டாவதற்கு முன்பு நமது ஜாதிப்பாட்டு எத்தனை சோகமாயிருந்ததோ, அத்தனை சோகமாகத்தான் இப்போது ஸ்வராஜ்யம் நெருங்கிவரும் தருணத்திலும் இருக்கிறது.

குழந்தைப் பிராயமுதலாகவே நாம் பழகிவிட்டபடியால், இதெல்லாம் நமக்கு ஆச்சரியமாகத் தோன்றவில்லை. ஆகவே, கவலை ஏற்படவில்லை. தண்ணீர் தங்கி ஓயாமல் செப்பனிட்ட ட்ராம் தண்டவாளத்தில் என்னுடைய வண்டிச் சக்கரம் போகும் போது, எனக்கு மறதி தெளிந்து ஜனங்களின் போக்குக்கும், நீரோட்டத்துக்கும் சண்டை உண்டாய் அதிலிருந்து அழுக்குத் தண்ணீர் என்மேல் வந்து தெறிக்கும் செய்தியிலே புத்தி செல்லுகிறது. 'இதை நாம் ஏன் பொறுக்கிறோம்?' என்று சிறிது காலமாக எனக்கொரு யோசனை உண்டாய் வருகிறது.

இதைப் பொறுக்க வேண்டுமென்று கட்டாயமில்லை. பொறுக்கக் கூடாதென்று தீர்மானிப்பதால் அனுகூலமுண்டு: அதற்கு ஐரோப்பியர்கள் வாஸம் செய்கிற 'சௌரிங்கி' ரஸ்தா சாக்ஷி. அந்த ரஸ்தாவில் முக்கால் பங்குக்கு மேலே ட்ராம் தண்டவாளத்தைப் போட்டு, அதில் முடிவில்லாமல் 'யானை நடை'யில் செப்பனிட்டுக் கொண்டிருந்தால் அந்த வீதியார் ட்ராம்வே அதிகாரிகளுக்கு ஊணுறக்கம் இல்லாதபடிச் செய்துவிடுவார்கள். நாமோ, கீழ்ப்படிதலாகிய குணமே வடிவெடுத்து வந்திருப்பதால்,

எதையும் திருத்த முடியுமென்பதை நம்மால் நம்ப முடியவில்லை. இதனால் நமது கன்னத்தில் கண்ணீர்ப் பெருக்கும் நமது வீதியில் ஜலதாரைப் பெருக்கும் தீர இடமில்லை. இது ஸாமான்ய விஷயமன்று. எதிலுமே 'நமக்கு நாம் நாயகர்' என்ற எண்ணம் நமக்கு ஏற்படவில்லை.

கண்ணாடி மூடிக்குள்ளே தண்ணீர் விட்டு அதில் வளர்க்கப்பட்ட பொன்னிற மீன்கள், கண்ணாடியைத் தண்ணீர் என்று நினைத்து அதில் வந்து மோதிக் கொள்ளுமாம்; பிறகு பெரிய தொட்டியில் கொண்டு போட்டாலும் தண்ணீரைக் கண்ணாடி என்று நினைத்துப் பயந்து பழைய எல்லைக்குள்ளே சுற்று மாம். 'அதுபோல தலை உடைந்துபோமோ' என்கிற பயம் நம்முடைய எலும்புக்குள் ஊறிக் கிடக்கிறது.

மஹாபாரதத்தில், அபிமன்யு பகைவரின் வ்யூகத்துக்குள் நுழையக் கற்று மீளுவதைக் கற்காமல் மாண்டதுபோல, நாமும் பிறவி முதல் கட்டுப் படக் கற்று அவிழ்க்கக் கல்லாமல், நமக்கு நேரிடும் சகல விபரீதங்களுக்கும் தலை குனிகிறோம்.

மனிதருக்கும், நூல்களுக்கும், திசைகளுக்கும் எல்லைகளுக்கும், கற்பனைத் தடைகளுக்கும் தலை குனிந்து பல தலை முறையாய் வழக்கமாய்விட்டபடி யால், எந்தத் துறையிலும் 'நாமாக ஒன்று செய்ய முடியும்' என்கிற உண்மை நம் முகத்தின் முன்னே நின்றாலும், கண்ணுக்குத் தெரியாமல் போகிறது. ஐரோப்பிய மூக்குக் கண்ணாடி போட்டுக்கொண் டாலும் நமக்குத் தெளிவுண்டாகவில்லை.

தனக்குத்தானே நாயகனாயிருக்கும் உரிமை எல்லா மனித உரிமைகளிலும் பெரிது. ஆனால் இந் நாட்டிலே இவ்வுரிமை நூல் வசனங்களாலும், பழ மொழிகளாலும், கிரியை சடங்குகளாலும் மறுக்கப்

பட்டிருக்கிறது. இந்தத் தேசத்தில் மனிதனுடைய புத்தி வழி தவறிப் போகாமலிருக்க, கிரியைகளாலும் சாஸ்திரங்களாலும் கையையும் காலையும் கட்டிப் போட்டிருக்கிறார்கள். அடிகோணமுந் தாக்குமாறு, பாதைகளை அழித்து விட்டார்கள். தெய்வத்தின் பெயர் சொல்லி மனிதனை மனிதன் கீழ்ப்படுத்தி அவமதிக்கும்படிச் செய்துவிட்டார்கள். இப்படிப் பட்ட தேசம் அடிமைகளைச் செய்வதற்கு நல்ல தொழிற்சாலையாயிற்று.

ஸர்க்கார் அதிகாரிகளும் அப்படியே சொல்லுகிறார்கள்:—“நீங்கள் பிழை செய்யக்கூடும். ஆதலால் சுய சிந்தையும், சுய காரியமும் உங்களுக்குத் தகாது” என்கிறார்கள். இங்ஙனம், மனு பராசராதிகளுடைய பல்லவியை இங்கிலீஷ்காரர் பாடும்போது நமக்குச் செவி கூசுகிறது. இங்கிலீஷ்காரரிடம் அவர்களுடைய கொள்கைக்கிணங்கப் பின்வரும் மறுமொழி சொல்லுகிறோம்: “பிழை செய்தால் பெரிய ஆபத்தில்லை. தனக்குத்தானே நாயகனாயில்லாதிருத்தல் பெரிய ஆபத்து. நம்பிக்கைப்படி இடறி நடந்து பழகினாலொழிய நாம் உண்மைக்கு வந்து நிலைபெற முடியாது” என்கிறோம். மேலும் சொல்லுகிறோம்: “நம்மை ஆளுவோர் இப்போது ‘ஜனாதிகாரம்’ என்ற மோட்டார் வண்டியில் ஏறிப் போகிறார்கள். ஆனால் இவர்களுடைய பழைய பார்லிமெண்ட் சபையாகிய வண்டி இரவில் பயணந்தொடங்கிய காலத்தில் ஒரு வழக்கத்திலிருந்து மற்றொரு வழக்கத்திற்கு மாறின போது அதன் இரைச்சல் வெற்றித் தேர் போலே கேட்கவில்லை. ஒருவேளை ராஜாவின் சார்பு; பின்பு கோயிற் கக்ஷி; பின் ஜமீன்தார் கக்ஷி; பிறகு சாராயம் வடிப்போர் கக்ஷி; இங்ஙனம் கக்ஷி பேதமும், லஞ்சம் வாங்குதலும், கூச்சலும், சச்சரவும் உடையதாய், அந்த வண்டி பக்கத்துக்குப் பக்கம் சரிந்து

சரிந்து நடந்தது. ஒரு காலத்தில் அந்தச் சபை 'மெம்பர்கள்கூட்டத்துக்கு வராவிட்டால் தண்டனை' உண்டென்று பயமுறுத்தி அழைக்க நேரிட்டதன்றோ? பிழைகளைக் குறித்துப் பேசுமிடத்தில், 'பார்லி மெண்ட் சபைகளின் தாய்' என்று சொல்லப்படும் பிரிட்டிஷ் பார்லிமெண்ட் சபை முன்பு அமெரிக்கா விலும், ஐர்லாந்திலும் செய்த பிழைகள் முதலாக, நேற்று 'டார்டனெல்ஸ்,' 'மெஸொபொட்டேமியா' விஷயமாக எத்தனைபோ பிழைகள் செய்யவில்லையா? இந்தியாவில் செய்திருக்கும் பிழைகள் கொஞ்சமா? மேலும் அமெரிக்கா ராஜ்யத்தில் பொருளாளிகள் நுழைந்து செய்யும் அக்கிரமங்கள் கொஞ்சமில்லை. 'த்ரெய்புஸ்' என்றவர்மேல் ஏற்பட்ட விசாரணை யிலே, பிரான்ஸ் தேசத்து ராணுவ ஊழல்கள் வெளிப்பட்டன. ஆயினும், ஸ்வராஜ்யமென்கிற ஜீவ நதியானது எந்த வேகத்தால் பிழையாகிற குழியிற் போய் விழுகிறதோ அதே வேகத்தால் அங்கிருந்து கிளம்பித் தனக்கேற்படும் இடறுகளைத் தானே நீக்கிக்கொள்ளும் என்ற விஷயத்திலும் அத் தேசங்களிலேயுள்ள ஜனங்கள் சந்தேகப்பட வில்லையே.''

நாம் வற்புறுத்தி மேலும் சொல்லத்தக்க தொன்றுண்டு: ''ஸ்வராஜ்யத்திலிருந்து ஸாமர்த் தியமும், பார புத்தியும் உண்டாவதுடன் உயிருக்கே அதிக பலமுண்டாகும். ஒரு கிராமம் அல்லது வகுப் பின் எல்லைக்குள் புத்தியைக் கட்டுப்படுத்தியிருப் போர் இங்ஙனம் இல்லாமல் பெரிய ராஜ்ய சிந்தனை யும், அதற்குத் தக்க செய்கையும் பெறுவாரானால், மானுஷிகத்தைப் பற்றி அவர்களுக்கு விரிந்த உணர்ச்சியுண்டாகிறது. இந்த ஸௌகரியம் இல் லாமையால் இந்நாட்டில் ஒவ்வொருவனும் அரை மனிதனாகவேயிருக்கிறான். அவனுடைய யோசனை

களும், சக்திகளும், ஆசைகளும், முயற்சிகளும் அற்பமாகவேயிருக்கின்றன. இங்ஙனம் வலிய வந்திருக்கும் உள்ளச் சிறுமை உயிர்ச்சேதத்திலும் பெரிய கேடாகும். ஆதலால் தவறுதல் நேரிடக்கூடும் என்பதைப் பொருட்டாக்காமல் நாம் சுயராஜ்யம் பெறக் கடவோம். பாதையில் இடறுதல்களை மாத்திரம் கருதி, எங்கள் முன்னேற்றத்தைத் தடுக்கலாகாது. இதுவே உண்மையான உத்திரம்.''

இந்த மறுமொழியை ஒருவன் அதிகாரிகளிடம் சோர்வில்லாமல், மீட்டு மீட்டும் சொல்லித் தொல்லைப்படுத்தினால், அவனை அதிகாரிகள் 'பந்தோபஸ்த்' பண்ணி வைக்கிறார்கள். ஆனால், அவனுக்கு ஸ்வதேசத்தாரின் மதிப்பு உண்டாகிறது. ஆயின் இதே மாதிரி ஜவாப்பை ஜாதிப் புரோஹிதரிடம் சொல்லப்போய், ''ஐயரே, இது கலியுகமென்றும், மனிதனுடைய எளிய புத்தியைச் சுயேச்சைப்படி விட்டால் கெட்டுப்போகும் என்றும், ஆதலால் மூளையை உழைப்பதிலும் தலையைச் சாஸ்திரங்களுக்கு வணங்குதலே சிறந்ததென்றும் சொல்லுகிறீர். இந்த அவமான வார்த்தைக்கு நாங்கள் அடங்கமாட்டோம்'' என்று சொன்னால், அவர்களுடைய கண் சிவந்துபோய் உடனே ஜாதியை விட்டுத் தள்ளும்படி உத்திரவு போடுகிறார்கள். ராஜாங்க விஷயமானால் வானத்தில் பறக்கும்படியாகவும், ஜாதியாசாரமானால் கட்டையில் காலைக் கட்டிப் போடும்படியாகவும் இவர்கள் விரும்புகின்றனர். வலப்புறம் திருப்பவும், இடப்புறம் திருப்பவும் தோணியிலே சுக்கான் ஒன்றுதான் உண்டு. அதுபோல, மனிதன் ராஜ்ய விஷயத்திலும், ஜாதியாசார விஷயத்திலும்—இரண்டிலும் உண்மை நிலை பெற வேண்டுமானால், அதற்கு ஒரே வழிதான் உண்டு. இந்த விதியின் அனுசரணையிலேதான்

சித்பூர் ரஸ்தாவுக்கும் சௌரிங்கி ரஸ்தாவிற்கும் உள்ள பேதம் தோன்றுகிறது. "எல்லாம் அதிகாரி கையில் இருக்கிறது. நம்முடைய கையைக் கட்டிக் கொண்டு நடப்பதே சரி" என்கிறது சித்பூர் ரஸ்தா. சௌரிங்கி ரஸ்தாவோ, "எமது கைக்குள் காரியங்கள் அடங்கி நடக்காவிட்டால், நமக்குக் கையிருந்து பயன் என்ன?" என்று கேட்கிறது. தனது கைக்கும் தெய்வத்தின் கைக்கும் சம்பந்தம் உண்டென்று தெரிந்துகொண்டபடியால், 'சௌரிங்கி' உலக முழுதையும் வசப்படுத்திக்கொண்டது. இந்த நம்பிக்கையை இழந்துவிட்டபடியால், 'சித்பூர்' உலகத்தை இழந்துவிட்டது; அரைக் கண் மூடி மவுனியாய், நிஷ்டையின்பங்களை நாடுகிறது.

கண்ணை மூடிக்கொண்டால் ஒழிய, நம்முடைய அற்புதமான ஆசாரங்களைத் தவறாமல் அனுசரிப்பது ஸாத்யமில்லை. கண்ணைத் திறந்தாலோ, உலக முழுவதையும் ஆளுகிற பொதுவான லோகவிதி நமக்குத் தென்படாமல் இராது. ஒரு கூட்டத்தாரேனும், ஒரு மனிதனேனும், இந்தப் பெருவிதியை வசப்படுத்தினால், அதிலிருந்து அதிகாரம், செல்வம், விடுதலை என்ற பரிசுகள் கிடைக்கும். இந்த விதியை உறுதியான அஸ்திவாரமாகக் கொண்டு ஐரோப்பிய நவீன நாகரிகம் நிலைபெற்றிருக்கிறது. இதில் நம்பிக்கையிருப்பதனால், அது பெரிய விடுதலை பெற்று நிற்கிறது. நாமோ கையைப் பிசைந்துகொண்டு, யஜமான் ஆக்கினைக்குக்காத்திருக்கிறோம். வீட்டிலே மூத்தவன், போலீஸ், தலையாரி, கோயில் குருக்கள் முதலியவர்களில் யாரேனும் ஒருவரைப் பூஜைபண்ணி நம்முடைய சொந்த யோசனையையும், சொந்தச் செய்கையின் திறமையையும் ஆயிரம் தூளாகஉடைத்து நான்கு பக்கத்துக் காற்றிலும் வீசி எறிந்து விடுகிறோம்.

இதற்கொரு காலேஜ் மாணாக்கன், "நாங்கள் இந்தக் கதையை எல்லாம் நம்புவது கிடையாது. வைசூரிக்குப் பால் குத்திக் கொள்ளுகிறோம். பேதிக்கு உப்புக் கொடுக்கிறோம். விஷஜ்வரம், கொசு வாயில் சுமந்து வரும் கண்ணுக்குத் தெரியாத பூச்சியால் உண்டாவதை அறிவோம். இவற்றை எல்லாம் தெய்வங்களின் கூட்டத்திற் சேர்க்கவில்லை" என்று சொல்லக்கூடும். கொள்கை மாறக்கூடும். ஆனால் நாம் நமக்கு நாயகராகாமல், புறத்தே ஓரதிகாரத்தை எப்போதும் உறுதியாக நம்பித் தொங்கும் குணம் நம்முடைய ஊக்கத்தை வேரறுக்கிறது. இப்படி எங்கும் சூழ்ந்த பயமானது நம் அறிவையும், உள்ளத்தையும் வசப்படுத்தியிருப்பதால், நமது மனம் கோழைப்பட்டிருக்கிறது. இதன் காரணம் என்னவென்றால், உலக முழுவதும் தழுவிய மாற்றொணாத சர்வவிதியை நாம் நம்புவதில்லை. ஐயப்படுதலும், 'எது வந்துவிடுமோ, நாம் எப்படி ஒன்றைத் துணிவாகச் செய்யலாம்' என்று திகைப்பதும் பயத்தின் குணங்களாகும். நமது ராஜாங்கத்தாரிடத்திலேகூட இந்தக் குணம் சில சமயங்களில் காணப்படுகிறது. ராஜாங்க யந்திரத்திலே எப்போதேனும் ஓட்டை யுண்டாகி, அதன் வழியே பயம் நுழைந்து, அதனால் அவர்கள் தமக்கினிய வாகிய ஸ்வதர்மங்களை மறந்து தம் ஆட்சியை உறுதியாகத் தாங்கும் வேர்க்கொள்கையைக் கோடாரியால் வெட்டுகிறார்கள். அப்போது தர்மம், நீதியும் ஒதுங்கிப்போய், கௌரவத்தைக் காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணம் முன்னே நிற்கிறது. தெய்வ விதியை மீறி, அழுகைக் கண்ணீரை அந்தமான் தீவில் மறைத்துவிட்டால் கசப்பு இனிப்பாய் விடும் என்று நினைக்கிறார்கள். 'ஸகல ரோக நிவாரணி' என்றுதான் ஒரு மருந்தைப் பாவனை செய்துகொண்டு, உலகப் பொது விதியைச் சிலர்

உல்லங்கனம் செய்வதற்கு இஃதொரு திருஷ்டாந்தம். இதற்கெல்லாம் உட்காரணம் அற்பத்தனமான பயமும் தன்னலம் வேண்டலும்; அல்லது, அற்பத்தனமான ஆதினால் நேர்வழியைவிட்டு விலக முயலுதல். இங்ஙனம் நாம் என்னத் தெரியாத அதிகாரங்களுக்குப் பூஜை நைவேத்தியம் பண்ணிக் குருட்டு அச்சத்தால், மானுஷிக உரிமைகளைப் புறக்கணிக்கிறோம். பௌதிக சாஸ்திரத்திலும், ராஜ்ய சாஸ்திரத்திலும் நாம் எத்தனை உயர்வாகப் பரீக்ஷை தேறிய போதிலும், பிறர் உத்திரவுக்குக் காத்திருப்பதாகிய ஊறின வழக்கத்தை நம்மால் விடமுடியவில்லை. தற்கால வழியை அனுசரித்து நாம் ஜனாதிகார சபைகள் ஏற்படுத்தினால் அவற்றிலும் எவனாவது ஒருவன் நாயகனாகி மற்றவர்களை மேய்க்கும் தன்மை உண்டாகிறது. இதன் காரணம் யாதெனில், பொது ஜனங்கள் தம்மை மறந்திருத்தல், தூங்குதல், உண்ணுதல், குடித்தல், கல்யாணம் பண்ணுதல், பாடை பெறுதல் முதலிய சகல காரியங்களையும் பிறருடைய ஆணைப்படியே செய்து வழக்கப்பட்டிருக்கிறார்கள்.

பிராமணன் ஒருவன் குடத்தில் கொண்டுவரும் ஜலம் அழுக்காக இருப்பதால் குடிக்கத் தகாதென்றும், சண்டாளன் ஒருவன் சுத்தமாகக் காய்ச்சி வடிகட்டிக் கொண்டுவந்த நீர் சுத்தமாக இருப்பதால் குடிக்கத் தகும் என்றும் நான் சொன்னால் வெறுமே குயுக்தி பேசுகிறான் என்று சொல்லி என்னைக் கண்டிப்பார்கள். ஏனெனில், எனது கொள்கை யஜமான் உத்தரவுடன் ஒட்டவில்லை.

'ஒட்டாவிட்டால் என்ன குடி கெட்டுப் போயிற்று?' என்று நான் கேட்டால் உடனே என்னை ஜாதியிலிருந்து தள்ளி விடுவார்கள். என்னை விருந்துக்குக் கூப்பிடமாட்டார்கள். நான் செத்துப்

போனால், சாவுக் கிரியைகளுக்குக் கூட வரமாட்டார்கள்.

இப்படி உலக வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் குரூரமான கொடுங்கோன்மை நடப்பதனால் ஜனங்களுக்கு நன்மையென்று நம்புவோர் ராஜாங்கத்தில் கூசாமல் பரிபூரண விடுதலை கேட்பது மிகுந்த வியப்புக்கிடமாகிறது.

முன்பு, நமது தேசத்திலே, உபநிஷத்துக்காரர் தெய்வத்தின் விதியைக் குறித்துப் பேசும்போது சொல்லுகிறார், 'தெய்வத்தின் விதியை மாற்ற முடியாது. அது எங்கும் எப்போதும் இசையும்' என்று. இதை நமது முன்னோர் கண்டிருந்தனர். அந்த விதி நித்யமானது, க்ஷணிகம் அன்று. ஆனால் அதை நாம் அறிந்துகொண்டு செய்கையில் பயன்படுத்தவில்லை. எத்தனைக்கெத்தனை அவ்விதியை நாம் ஸ்வீகரிக்கிறோமோ, அத்தனைக்கத்தனை நமது பாதையில் உள்ள தடைகள் விலகும். இந்த விதியின் ஞானமே இயற்கை நூல் (ஸயன்ஸ்) என்று சொல்லப்படும். இந்த 'ஸயன்ஸ்' வலிமையாலன்றோ ஐரோப்பா தற்காலத்தில், "பூமியில் விஷக்காய்ச்சல் இல்லாமல் செய்துவிடுவேன். மனிதரின் வீடுகளில் சோற்றுப் பஞ்சமும், கல்விப் பஞ்சமும் இல்லாமல் செய்துவிடுவேன். ராஜ்யத்தின் பொது நன்மைக்கும் மனுஷ்யனுடைய ஸ்வதந்திரத்திற்கும் முரண்படாமல் செய்வேன்'' என்று துணிவுடன் கூறுகிறது?

'அறியாமையால் கட்டும், அறிவினால் விடுதலையும் கைகூடும் என்பதை முன்னோர் அறிவார். பொய் எது? தன்னை ஸர்வத்திலிருந்து பிரிவாகக் காணுதல். உலகமும் தானும் ஒன்றெனக் காண்பதே உண்மையறிவு. 'இத்தனை பெரிய உண்மையை அக்காலத்தில் எப்படிக் கண்டு பிடித்

தார்கள்?' என்பதை இப்போது நினைக்கவியப்புண்டாகிறது. பிறகு அரண்ய ரிஷிகளின் காலம் மாறி பௌத்த சந்நியாசிகளின் காலம் வந்தது. மேற் கூறிய மகத்தான ஞானத்தை உலகத்திலிருந்து பிரித்து 'உலகத்தைத் துறப்பதே முக்தி' என்று சொல்லத் தொடங்கி விட்டார்கள். இங்ஙனம் உண்மைக்கும் பொய்க்கும் ஒப்பந்தமுண்டாய் இடையே பாகச்சுவர் போடப்பட்டது. ஆகவே, இக்காலத்தில் ஜாதியாசாரங்களில் எத்தனை திருகுதலும், அநாகரிகமும், மடமையும் இருந்தபோதிலும் உண்மை கண்டவரின் சார்பிலிருந்து யாதொரு ஆட்சேபமும் பிறக்கவில்லை. உண்மைப் பக்கத்தார் இதற்கெல்லாம் இடங்கொடுத்தே பேசுகிறார்கள்: மரத்தின் கீழ் இருந்து சந்நியாசி சொல்லுகிறான்—'தன்னிடம் உலகத்தையும், உலகத்தினிடம் தன்னையும் காண்பவனே உண்மை காண்பான்' என்று. அது கேட்ட சம்சாரி தன்னிடம் உள்ள சிறந்த வஸ்துகளைச் சந்நியாசியின் திரு ஓட்டுக்குள்ளே போட்டுவிடுகிறான். ஆனால், தெய்வத்தின் பொது விதிக்கு அடங்கி நடப்போருடைய வீட்டிற்கு வண்ணான், அம்பட்டன் போகக்கூடாதென்று சம்சாரி விதி போடும்போது, சந்நியாசி அதனை முகமலர்ச்சியுடன் ஏற்றுத் தனது த்ருஷ்டி மண் சாத்தி ஆசீர்வதிக்கிறான். இப்படித்தான் நமது ஜாதி வழக்கே கெட்டுப் போயிற்று. உண்மைக்குப் பரிந்து பேசுவோர் யாரும் இல்லாமலே போய்விட்டது. இதனால் பல நூற்றாண்டுகளில் நேர்ந்த அவமானத்தையெல்லாம் நாம் பொறுத்துக் கொண்டு அழுதுகொண்டிருக்கும்படி நேரிட்டது.

ஐரோப்பாவில் அப்படி இல்லை. அங்கே உண்மையை மனத்திற்குள் மறைக்காமல் வழக்கத்தில் காட்டுகிறார்கள். ஜனக்கட்டிலும் ராஜ்யத்

திலும் ஏதேனும் குற்றம் வெளிப்பட்டால், அதைப் பொது ஜனங்கள் உண்மை வழிக்காகச் சோதித்துத் திருத்த வழியுண்டு. இதனால் கிடைக்கும் சக்தியும் விடுதலையும் எல்லோருக்கும் பயன்பட்டு நம்பிக்கையையும் தைரியத்தையும் உண்டாக்குகின்றன. இந்த உண்மை மாயமந்திர இருளில் மறைந்து கிடக்கவில்லை. திறந்த வெளியில், எல்லோரும் காணும்படி, தானும் வளர்ந்து பிறரும் வளரும்படிச் செய்கிறது.

பல நூற்றாண்டு நாம் வாயை மூடிக்கொண்டு அவமானப்பட்டதெல்லாம் ஒன்று சேர்ந்து கடைசியில் அந்நிய ராஜ்யமாகப் பரிணமித்தது. ஈ எப்போதும் உடம்பில் நோயுள்ள இடத்தைப் போய்த் தின்னுவது போலவே நம்முடைய கருத்து முழுவதும் நம்மை ஆளும் வேற்றுத் தேசியாருடைய ராஜ்ய நெறியில் செலுத்துகிறது. மற்றதை எல்லாம் மறந்து, 'எங்களுடைய இஷ்டத்தைச் சற்று கவனித்து எங்களாட்சி நடக்கவிட வேண்டும். வேண்டினாலும் வேண்டாவிட்டாலும், புறத்திலிருந்து விதிநியமங்கள் எங்கள் தலைமேல் பொழியாது இருக்கவேண்டும். ராஜ்ய பாரம் முழுவதும் எங்களுக்குச் சுமையாகாதபடி, சக்கரங்கள் போட்ட யந்திரமாக்கி அதை உங்களுடன் நாங்களும் சேர்ந்து தள்ள இடம் கொடுக்க வேண்டும். பொறுப்பில்லாத அன்னியரின் ஆட்சியிலிருந்து விடுதலை பெற வேண்டும்' என்ற பிரார்த்தனை இப்போதும் உலகத்தில் எல்லாத் திசைகளிலும் எழுகிறது. கால சக்தியின் தூண்டுதலால், இந்தப் பிரார்த்தனையில் நம்முடைய வார்த்தையும் சேர்ந்தது நன்றாயிற்று. அப்படியன்றி இப்போதும் வழக்கம் போல 'யஜமானன் உத்திரவை' ஒப்புக்கொண்டு நடந்தால், அது நமக்குத் தீராத அவமானமாக முடிந்திருக்கும்.

இதனால் நம்முன் உண்மையின் ஒரு கிரணம் நுழையக் கூடிய துளை இன்னும் ஏதோ மிஞ்சி இருப்பதாகத் தெரிகிறது. நாம் பார்த்தது உண்மையின் கிரணம் ஆனபடியாலேதான், நம்மை யசையாதபடி பலி மிருகம் போலக் கட்டிப் போட்டிருந்த வின் தற்புகழ்ச்சியை நான் நம்பிக்கையுடன் பழிக்கின்றேன். ராஜாங்கத்தாரை நோக்கி 'ஸாம்ராஜ்ய சபைகளில் எங்களுக்கு ஸ்தானம் வேண்டும்' என்று கேட்பதும், ஜனங்களை நோக்கி, 'ஜாதி யாசாரங்களிலும் சொந்தக் காரியங்களிலும்கூட எஜமான் போட்ட கோட்டை மீறி நடக்காதே' என்று சொல்வதும் ஒரேவித கர்வத்தால் உண்டாவது விநோதமன்றோ?

இதற்குப் பெயர் 'ஸநாதன தர்ம புனர் உத்தாரணம்' என்கிறோம். ஸநாதன கக்ஷித் தலைவர் நாம் ஒரு கண்ணால் உறங்கி மற்றொரு கண்ணால் விழித்திருக்கும்படி அஸாத்ய உத்தரவு போடுகிறார்கள்.

கடவுளுடைய கோபமாகிய கழி நம் முதுகின் மேல் அடிக்கும் போதும், தேசாபிமானத்தால் மனம் புண்ணாகி, "மூங்கில் காடுகளை எல்லாம் வெட்டிப் போடுவோம்" என்று கூவுகிறோம். நாம் எத்தனை வெட்டினாலும் மூங்கில்காடு உலகத்தில் மிஞ்சி இருக்கத்தான் செய்யும். காடென்ன செய்யும்? குற்றம் நமது. அது யாதெனில்: நாம் உண்மையைவிட அதிகாரம் மேல் என்று மதிக்கிறோம். கண்ணைக் காட்டிலும் [illegible] மேல் என்று நினைக்கிறோம். நாம் இந்தக் குணத்தை தீர்க்கும் வரை, ஏதேனும் ஒரு காட்டிலிருந்து நம்மை அடிக்க யாதேனும் ஒரு கழி மிஞ்சி இருக்கத்தான் செய்யும். இராமாயணத்தில் [illegible] காலத்தில் எல்லா விஷயங்களிலும் [illegible] அதிகாரம் முக்கியமாய் நடந்தது. எங்கும் [illegible]

இருந்த பாதிரி வலையை அறுத்த பிறகுதான். ஐரோப்பிய ஜனங்கள் ஸ்வராஜ்யப் பாதையிலே கால் வைக்க இடம் உண்டாயிற்று. இங்கிலாந்து மாத்திரம் தீவானபடியாலும் கோயிலின் ராஜ தானியாகிய ரோமாபுரியிலிருந்து மிகத் தூரம் ஆனபடியாலும் பிழைத்தது. இங்கிலாந்திலும் கோயில் (சர்ச்) அதிகாரம் முற்றிலும் நசித்துவிட வில்லை. 'இங்கிலீஷ் கோயில்' பாட்டியைப்போல முன் நடத்திய ஸர்வாதிகாரம் நீங்கி, இப்போது இரக்கத்தால் அதுவும் இருந்து போகட்டுமென்று விடப்பட்டிருக்கிறது.

இங்ஙனம் 'மாமூல் கிழவி'யை இங்கிலாந்து தேசத்தார் அசைத்தது போலவே, ஸ்பெயின் தேசத்தார் செய்யக்கூடவில்லை. முன்னொருகாலத்தில் ஸ்பெயின் தேசத்தார் பாடு மிக்க கொண்டாட்ட மாக இருந்தது. அந்த அனுகூலத்தை அவர்கள் ஏன் இழந்தார்கள்? 'மாமூல் கிழவி'க்கு மணியம் கொடுத் தமையால்தான்.

ஸ்பெயின் தேசத்து பிலிப் ராஜா இங்கி லாந்தின்மீது சண்டை தொடுத்த காலத்தில், ஸ்பெயின் தேசத்துக் கப்பற்படை விவகாரங்களும் கோயில் விவகாரங்களைப் போலவே வலிய தளை களுக்கு உட்பட்டிருந்தமை வெளியாயிற்று. இங்கிலீஷ் கப்பற் படையோ மிகச் சிறந்த சேனாதி பதிகளின் கீழே, தான் மிதக்கும் கடலலைகள் எப்படி விடுதலை கொண்டு வீசும் காற்றுக்கு ஒத்துச் செல்லுமோ அதுபோலத் தானும் சென்றது. ஸ்பானியக் கப்பற்படையில் ஜாதி மரபுப்படி அதி காரம் வகுத்திருந்தது. அது அசையாத மாமூலின் இரும்புப் பிடியினின்று விலக வழியில்லாமற் போ யிற்று. இங்ஙனம் ஐரோப்பாவில் கோயிற்கட்டுக்குக் குருட்டுத்தனமாகக் கீழ்ப்பட்டிருந்த தளையை

வெட்டித் தன்மதிப்பைக் காக்கச் சுற்ற ஜாதியாரே தலை தூக்குவது இயல்பாயிற்று. ருஷ்யாவில் அவ்வாறு செய்யாதபடியால், அங்கே உத்தியோகஸ்தர் காடாகப் பறந்து, ஜனங்கள் மிகச் சிறிய சர்க்கார் அதிகாரிக்கும் மிகவும் அற்பமான பழஞ் சாஸ்திரக் கட்டளைக்கும் முழந்தாள்படியிட்டு ஆண்மை இழந்து போகின்றனர்.

ஸமயம் (மதம்) வேறு; குருக்கள் கட்டுப்பாடு வேறு என்பதை மறக்கலாகாது. அவை ஒன்றுக் கொன்று தீயும் சாம்பரும் போலாம். மதத்தை மீறி, கட்டுப்பாடு செல்லும்போது நதியை மணல் மூடுவதுபோல் ஆகிறது. அங்கு நீர் கெட்டுப் பாலைவனம்போல் தோன்றும். 'இந்த நிலையைக் கண்டு மகிழ்ச்சி அடைவோர் மிகக் கேடு கெட்டவர்கள்' என்பது வெளிப்படை.

ஒருவன் மற்றொருவனைக் கஷ்டப்படுத்தினால், இருவருக்கும் கெடுதி என்று (சமயம்) மதம் சொல்லுகிறது.

மகள் விதவையாகிப் பட்டினி கிடக்கும்போது, 'இன்ன திதியில் அவளுக்குத் தாகத்துக்கு ஜலம் கொடுத்தால் பெற்றோர்களுக்குப் பாவம்' என்று குருக்களின் கட்டுப்பாடு சொல்லுகிறது. 'பச்சாத்தாபத்தாலும் ஒருவன் பாபத்தைக் கழுவலாம்' என்று ஸமயம் சொல்லுகிறது. 'கிரகணத்தன்று ஒருவன் இன்ன நீரில் முழுகினால்தான் பாவம் தீர்வதுடன் பதினான்கு தலைமுறை பிதிர்கள் செய்த பாவமும் தீரும்' என்று கட்டுப்பாடு சொல்லுகிறது. 'மலைகளையும் கடல்களையும் கடந்துபோய், இவ்வழகிய உலகத்தின் வியப்புகளைக் கண்டு களிக்க வேண்டும்' என்று ஸமயம் சொல்லுகிறது. 'கடலைக் கடந்தவன் மண்ணிற் புரண்டு பிராயச்சித்தம் பண்ணவேண்டும்' என்று கட்டுப்பாடு சொல்லு

கிறது. 'எக்குடிப் பிறந்தாலும், உண்மையுடையவன் தொழத் தக்கவன்' என்று ஸமயம் சொல்லுகிறது. "பிராமணனாகப் பிறந்தவன் அயோக்கியனாக இருந்த போதிலும் அவன் பாத தூளைப் பிறர் சிரத்தில் தரிக்கலாம்' என்று கட்டுப்பாடு சொல்லுகிறது. சுருக்கிச் சொன்னால், ஸமயம் விடுதலை போதிக்கிறது; குருக்கள் கட்டுப்பாடு அடிமை நிலையைப் புகழ்ந்து கீர்த்தனம் பாடுகிறது.

பக்தி குருட்டுப் பக்தியாக இருந்தாலும் அதி லொரு வெளி அழகுண்டு. இவ்வழகை நமது நாட்டில் யாத்திரை செய்யும் அன்னியர் சிலர் கண்டு மெச்சுகிறார்கள்: சித்திரக்காரன் ஒருவன் இடிந்த வீட்டின் புராதன அழகுகளைப் பார்த்து மயங்கி, 'அதில் குடி இருக்க யோக்யதை இல்லை' என்பதை மறந்துவிடுவதுபோல கங்கா ஸ்நானத் துக்குத் திருவிழாக் காலத்தில் பாரிஸால் நகரத்தி லிருந்து ஆயிரக் கணக்கான யாத்திரைக்காரர்—பெரும்பகுதி ஸ்திரீகள்—வருவதைப் பார்த்திருக் கிறேன்; அடடா! புகைத் தோணியிலிருந்து புகை வண்டிக்கும், புகை வண்டியிலிருந்து புகைத் தோணிக்கும் மாறுகிற கூட்டங்களில் எல்லாம் அவர்கள் படும் கஷ்டத்துக்கும் அவமானத்துக்கும் ஓய்வில்லை. அவர்களுடைய பரிதாபத்துக்கிடமான பொறுமையிலும் ஒருவித அழகு இருக்கத்தான் செய்கிறது. அவர்களுடைய துயரங்கள் எப்போதும் அழகு பெறுகின்றன. வீண் கிரியைச் சடங்குகளுக்கு இடையே அவர்கள் வளர்க்கும் பிள்ளைகள் இவ்வுலக இன்பங்களுக்குப் பல்லைக் காட்டியிருந்து பரலோக நிழல்களைக் கண்டு நடுங்குகிறார்கள். தாம் நடக்கும் பாதையில் எவ்வளவுதூரம் தாமே தடைகள் கட்டுவது அவர்களுடைய வாழ்க்கையின் ஒரே தொழிலாகக் காணப்படுகிறது; அத்தடை உயர் வைராக்ய அபிவிருத்தி என்று கருதுகிறார்கள்.

இப்படி அவர்கள் தண்டனை அடையும் காரணம் யாதெனில்: ஈசன் மனிதனுக்குக் கிடைத்த பேறுகளில் சிறந்த பேறாகிய தியாக சக்தியை இவர்கள் துர்விநியோகம் செய்கிறார்கள். கணக்குக் காட்டும் காலம் வரும்போது இவர்களால் நஷ்டக் கணக்குத்தான் காட்ட முடியும். இன்னும் ஓர் இடத்தில் லக்ஷக் கணக்கான ஜனங்கள், ஆணும் பெண்ணுமாக ஸ்தல தரிசனம் செய்து புண்ணியம் தேடப் போயினர். பாதையோரத்தில் ஒருவன் சாகக் கிடந்தான். அவனுடைய ஜாதி இன்னதென்று தெரியாத காரணத்தால், அவனுக்கு யாரும் தாகத்துக்கு ஜலம் கொடுப்பாரில்லை. பெருஞ் செலவு செய்து புண்ணியம் தேடப் போகும் இவர்களுடைய குருட்டுப் பக்தி எத்தனை அழகாகத் தோன்றியபோதிலும் இவருடைய காருண்யம் எத்தனை பயங்கரமானது பார்த்தீர்களா! ஒரு தண்ணீரில் அனைவரும் சேர்ந்து விழும்படித் தூண்டுகிற குருட்டுத் தன்மைதான் இனம் தெரியாத மனிதர் கஷ்டப்படும்போதும் இரக்கமுண்டாகாமல் செய்துவிடுகிறது. தான் கொடுத்த சிறந்த வரத்தை இவர்கள் இங்ஙனம் துர்விநியோகம் செய்வதில் ஈசனுக்குத் திருப்தியில்லை.

படிப்பு, பக்தி, ஒழுக்கம் மூன்றும் இல்லாத கோவில் குருக்களுடைய காலில், ஸ்திரீகள் பணத்தைக் கொட்டுவதை நான் பார்த்திருக்கிறேன். இங்ஙனம் செய்யும் வன்மையால் இவர்கள் உண்மைக்கும் கருணைக்கும் அருகே ஓர் அடியாவேனும் நெருங்கி வந்தனரா? இல்லை.

இந்த ஞானியும் சொல்லலாம்: "குரு புண்ணிய அதிபர் என்று நம்பித்தான் பணம் கொடுத்தார்கள். இந்த நம்பிக்கை அவர்களுக்கில்லா

விட்டால் மேற்படிப் பணத்தைச் செலவின்றி வைத்திருப்பார்கள். அல்லது சொந்தச் செலவுக்குச் செலவிட்டிருப்பார்கள். குருவின் கையில் கொடுத்தது விசேஷந்தானே?" என்று கேட்கலாம். தனக்காகச் செலவிட்டால் பணத்தில் பயனுவது கண்டிருப்பார்கள். தெய்வ பக்தியினுல் செய்தோமென்ற பொய் மயக்கத்துக்கு அடிமைப்பட்டிருக்கமாட்டார்கள்.

வெளியே ஒரு நாயகனுடைய ஆக்கினைக்கு அஞ்சித் தன் உயிரை இழக்கத் துணிபவன் தனக்குத் தானே நாயகனுகும்போது, தர்மத்துக்காக உயிர் கொடுக்காமல் போகிருன்.

இங்ஙனம் நமது கிராமங்களில், ஆரோக்யம். கல்வி, உயிரின்பம்—யாவும் வற்றிப் போய்விட்டன. கிராமத்தார் தம்முடைய சக்திகளைத் தாம் அறியும்படிச் செய்தாலொழிய அவர்களைக் காப்பாற்ற வேறு வழியில்லை என்று கருதி நான் ஒரு கிராமத்தில் பிரயத்னம் செய்தேன். அந்தக் கிராமத்தில் ஒரு பக்கத்துக்கு ஜலம் ஒரு துளிகூடக் கிடையாது. தீ பிடித்தெரிந்தது. தழல் வீசி எரிகையிலே, கிராமத்தார் கூடியழுவதை யொழிய வேறொன்றும் செய்யமாட்டாமற் போயினர். நான் அவர்களிடம் சொன்னேன்—"நீங்கள் பிரயாசை கொண்டு கிணறு தோண்ட இணங்கினுல் கல், சுண்ணும்புக் கிரயம் நான் கொடுக்கிறேன்" என்றேன். கஷ்டத்தில் பாதி அவர்களுடையதாகவும் புண்ணியம் முழுவதையும் நான் கொள்ளையிட விரும்பிய தந்திரத்தை மெச்சித் தங்களால் முடியாதென்று சொல்லிவிட்டார்கள். அந்தக் கிணறு இன்னும் தோண்டியாகவில்லை. தண்ணீர்ப் பஞ்சம் அங்கே தீராமலேதான் இருக்கிறது. அக்நி உத்ஸவம் அடிக்கடி நடந்து வருகிறது.

ஆகவே நமது கிராமக் கஷ்டங்கள் தீராமல் இருப்பதன் காரணம் யாதெனில், ஒரு காரியம் செய்வதற்கு மோக்ஷ புண்ணியத்தை விரும்பிச் செய்தாலொழிய வேறு வழியில்லை. ஆகவே, ஒவ்வொரு குறையும் தெய்வம் தானே வந்து தீர்க்க வேண்டும்; அல்லது மோக்ஷத்தை வேண்டி யாராவது செய்தாலுண்டு. மற்றபடித் தாகத்துக்கு ஜலம் இல்லாமல் செத்தாலும் சாவார்களே யன்றி, கிராமத்தார் தாமாக ஒரு கிணறு தோண்டிக் கொள்ளமாட்டார்கள். இதற்குக் கிராமத்தாரைக் குறைகூறுவதில் பயனில்லை. 'மாமூல் கிழவி' அபினி கொடுத்து அவர்களைப் பாதித் தூக்கத்தில் வைத்திருக்கிறாள். ஆனால் படித்த பிள்ளைகள் அந்தக் கிழவியின் ஸ்துதியைப் பாடக் கேட்கும்போது, எனக்கு ஆச்சர்ய மிகுதியால் பேச முடியாமல் போகிறது. "ஆஹா, இந்தக் கிழவி எத்தனை நல்ல மருத்துவச்சி; இவள் கைக்குள் நமது தேசம் இருப்பது மஹிமையன்றோ! இவள் மடியிலிருந்தபடியே நமக்கு ஸ்வராஜ்யச் செங்கோலும் கிடைத்து விட்டால், எத்தனை நன்றாக இருக்கும்" என்கிறார்கள்.

பட்டினி, தொத்து வியாதி, பஞ்சம், இவை தலைதூக்கி ஆடுகின்றன. நம்மைப் புலியும் திருடரும் அடிக்காமற் காத்துகொள்ளத் துப்பாக்கி வைத்துக் கொள்ளும்படி ராஜாங்கத்தார் அனுமதி கொடுக்காமல் இருப்பது போலவே, மேற்கூறிய துன்பங்களைத் தடுப்பதற்குரிய உபாயங்களைத் தேடவொட்டாமல் ஜாதியாசாரத் தலைவர் தடுக்கிறார்கள். ஆனால் இவர்கள் நம்மிடம், "தற்காப்புக்கு நீங்கள் கருவிகள் தேடலாமே. நீங்கள் ஸயன்ஸ் படித்து அதைத் தற்காப்புக்கு உபயோகப் படுத்தக்கூடாதென்று யாவரும் தடுப்பாரில்லையே" என்று கூறலாம். உண்மைதான்.

'தற்காப்புக்குரிய ஆயுதங்கள் நமக்குக் கிடைக்கவொட்டாமல் செய்துவிட்டார்கள்' எனில் அதிசயோக்தியாகும். ஆனால் அவற்றில் பயிற்சி பெற இடமில்லாமல் செய்வதற்கு வேண்டிய முன் ஜாக்கிரதை எத்தனை உண்டோ அத்தனையும் பண்ணி வைத்திருக்கிறார்கள். நமது தேசத்தார் ஒருபக்கம், ராஜாங்கத்தார் ஒரு பக்கமாக, நம்மைச் சூழ ஏற்படுத்தி இருக்கும் எண்ணற்ற விதிகளைக் கடக்கக்கூடாதென்ற பயத்தினால் நாம் சக்தி இழந்து, நம்மிடம் துப்பாக்கி இருந்தால், திருடரால் ஏற்படும் விபத்தைக் காட்டிலும் துப்பாக்கியால் அதிக விபத்து நமக்கே உண்டாகும்போல் இருக்கிறது.

இந்தக் கஷ்டதசையில் நாம் இருப்பதற்கு அன்னியர் அரசாட்சியே காரணம் என்று சொல்லும் கட்சியை இப்போது ஆராய்ச்சி செய்வோம். பிரிட்டிஷ் ராஜ்யத்தின் கொள்கை யாதெனில் 'ஜனங்கள் ஆட்சியில் கலக்க வேண்டும்' என்பதேயாம். அன்னியர் யாரும் பொறுப்பின்றி அரசு செய்யும் முறைமையை அக்கொள்கை கண்டிக்கிறது. நம்மிடம் இந்த விஷயத்தை அவர்கள் மறைக்கவில்லை. ஸர்க்கார் பள்ளிக்கூடங்களில் இதை நமக்குப் பகிரங்கமாகக் கற்றுக் கொடுக்கிறார்கள். இதைப் பரீக்ஷைக்கு உருப் போடுகிறோம். இந்த அறிவை இனி நம்மிடமிருந்து பறிக்க இடமில்லை. நம்முடைய காங்கிரஸ் சபைகளும் சங்கங்களும் இக் கொள்கையை ஆதாரமாக உடையவையே. ஐரோப்பிய ஸயன்ஸ் தன் இயற்கையாலேயே எல்லோருக்கும் கிடைக்கத் தக்கதாக இருப்பதுபோல, மேற்படி பிரிட்டிஷ் ராஜ்யக் கொள்கையும் தன் இயற்கையாலேயே யாதொரு தேசத்து ஜனங்களின் அதிகாரத்தை வளர்க்கிறது. இந்து தேசத்துப் பிள்ளைகளுக்கு ஐரோப்பிய ஸயன்ஸ்

கற்றுக் கொடுக்கக்கூடாதென்று சொல்லும் ஆங்கிலேயர், ஒருவர் அல்லது பத்து, அல்லது ஐந்நூறு பேர் இருக்கக்கூடும். ஆனால், அந்த ஸயன்ஸ் சாஸ்திரமோ பிறப்பிடத்தையும் நிறத்தையும் பொருட்டாக்காமல் எல்லோரும் வந்து தன்னைப் படித்துப் பயன்பெறும்படிக் கூவியழைத்து அவ்வாங்கிலேயரை அவமானப்படுத்தும். அதுபோல், ஐந்நூறு அல்லது ஐயாயிரம் ஆங்கிலேயர் பிரசங்கங்களிலும் பத்திரிகைகளிலும் ஹிந்து தேசத்தார் ஸ்வராஜ்யம் பெறுவதைத் தடுக்க வேண்டுமென்று உபந்நியஸித்தாலும், பிரிட்டிஷ் ராஜ்யக் கொள்கையானது பிறப்பிடத்தையும் நிறத்தையும் பொருட்டாக்காமல் எல்லோரும் தன் பக்கம் சேரும்படிக் கூவி அவ்வாயிரக் கணக்கான ஆங்கிலேயர் சொல்லும் வார்த்தையை இகழ்ச்சிக்கு இடமாக்குகிறது. 'பிரிட்டிஷ் கொள்கைகள் நம்போல்வார்க்குத் தகுதியில்லை' என்று அநாகரிகமான மறுமொழி சொல்லக் கூடும். பிரம்ம ஞானமும் விரிந்த வாழ்வும் சூத்திரனுக்குக் கிடையாது என்று முன்பு பிராமணர் விதி போட்டது போலேதான்.

ஆனால், பிராமணன் தனது ஸ்தானத்தை முன் ஜாக்கிரதையாலே கெட்டிப்படுத்திக் கொண்டான். புறத்தை ஒடுக்குமுன்பு ஜனங்களின் அறிவை ஒடுக்கி விட்டான். அறிவின் வேர்களைச் சூத்திரனிடமிருந்து பறித்துவிட்டபடியால் இவன் ஸ்வதந்த்ர காரியம் செய்ய ஸாத்தியப்படவில்லை. பிறகு சூத்திரனுடைய தலை பிராமணனுடைய பாதத்தூளியிலே ஈடுபட்டிருப்பதை ஸாவதானமாகக் காக்க வேறு சிரமம் வேண்டியதில்லை ஆயிற்று. ஆனால் நம்முடைய பிரிட்டிஷ் ராஜாங்கத்தார் [illegible] வழிகாட்டும் அறிவுக் கதவை முற்றிலும் அடைத்துவிடவில்லை. அதிகாரிகளுக்குப் பக்ஷபாதம் உண்டாய், இங்

கொரு கதவை அடைப்பதாகிய முயற்சியை மிகத் தாமஸமாகக் கைக் கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும், 'சுகத்தை உத்தேசித்துத் தர்மத்தைக் கைவிடுதல் ஆத்மசக்திக்கு வழியில்லை' என்பதை அவர்களாலேகூட மறக்கலாவதில்லை.

பிரிட்டிஷாருடைய உட்குணத்தில் நம் ஸ்வதந்திரங்கள் புதைந்து கிடக்கின்றன. இந்த ஸந்தோஷகரமான உண்மையை நமது முழு வலிமையுடன் புத்தியில் நிறுத்திக் கொண்டோமானால், அது நிறைவேறுவதற்காக, நாம் கஷ்ட நஷ்டங்களுக்கு உட்படுதல் எளிதாகும். பழைய சாத்திரப்படி "அடங்கி நடப்பதைக்" கைப்பிடித்தோமானால், நமக்கு மகத்தான ஆசாபங்கம் நேரிடும். இரண்டு வகைகளில் ஏற்கனவே இது வெளிப்பட்டு நிற்கிறது. ரஹஸ்யக் கூட்டத்தாரின் கொடுஞ் செயல்கள் ஒருவகை. நம்முடைய கூட்டத்து ராஜ தந்திரிகள் தர்க்கம் பண்ணுகிற வியர்த்தம் மற்றொருவகை. "இந்த வைஸ்ராய் நல்லவரா? அந்த வைஸ்ராய் நல்லவரா? 'மார்லி' வந்தால் நமக்கு நிறையச் சீர்திருத்தம் கிடைக்குமா கிடைக்காதா? வீட்டுப் பூனை காட்டுக்குப் போனால், காட்டுப் பூனைபோலக் காட்டுத்தனமாய் விடுமோ, ஆய்விடாதா?"

இருந்த போதிலும், நாம் மனுஷ்ய ஜாதியினிடம் அவநம்பிக்கை கொள்ளக் கூடாது. பிரிட்டிஷ் ராஜ்யத்தின் வலிமை ஒன்று மாத்திரமே பெரியதன்று. அதன் அஸ்திவாரக் கொள்கைகள் அதனிலும் பெரியன என்பதை நாம் மனதார ஒப்புக்கொள்ளுகிறோம். அடிக்கடி இதற்கு விரோதமாக நடக்கக்கூடும். "லோபம், அதிகார விருப்பம், கோபம், பயம், கர்வம் இவை எல்லாம் தொழில் செய்வதை நாம் பார்க்கலாம்" என்பது மெய்தான். மஹிமையும், தீரமும், விரோதமும்,

பக்தி விசுவாசங்களும் உடையவராகிய ராஜ ஜாதியாரிடத்தில் உள்ள நல்ல அம்சங்களுடன் நாம் ஒட்டலாம். அங்கே சத்ருக்கள் நம்மை எங்ஙனம் தாக்கியபோதிலும், நாம் வெற்றி பெறுவோம். நினைத்த பொழுதெல்லாம், புற வெற்றி கிடைக்காவிடினும், அகவெற்றி நிச்சயம். நாம் அற்பர்களாய்ப் பயம் கொண்டிருந்தால், நம்மை ஆள்வோரின் பெரிய கொள்கைகளை யெல்லாம் நமது மட்டம் ஆக்கி விடுவோம். அவர்களுடைய கெட்ட குணங்களே தலைதூக்க இடம் கொடுப்போம். பிராமணன் தன்னைக் கீழ்ஜாதி என்பதைச் சூத்திரன் எப்பொழுது ஒப்புக் கொண்டானோ, அப்பொழுது பிராமணனுக்குப் பள்ளம் தோண்டியாய்விட்டது. எளியவன் வலியவனுக்குச் செய்யும் தீமை வலியவன் எளியவனுக்குச் செய்யும் பகைமைக்கு நிகராகக் கூடும்.

ஒருமுறை உயர்ந்த ஸர்க்கார் உத்தியோகஸ்தர் என்னிடம், "போலீஸ் கொடுமையைப் பற்றி எப்போதும் முறையிடுகிறீர். என் மட்டில், நீங்கள் சொல்வதை நம்பக்கூடாதென்ற எண்ணமில்லை. ஆனால், பெயர்வழி, விஷயம் எல்லாம் கொண்டு வந்து ருஜுப்படுத்தும்'' என்றார். உண்மைதான். எல்லா அநியாயங்களையும் பஹிரங்கமாகத் தூற்றி உலகறிய மீண்டும் மீண்டும் முறையிடத் தக்க தைரியவான்கள் சிலரேனும் நமது தேசத்துக்கு வேண்டும். ஆனால் அற்பப் போலீஸ் சேவகனாக இருந்தபோதிலும் அவன் பின்னே பூதாகாரமான ராஜ்யாதிகாரம் ஒன்றிருக்கிறது. அவன் மேல் குற்றஞ் சாராதபடி காப்பாற்றுவதற்காகப் பொதுப் பணத்திலிருந்து ஆயிரக் கணக்காகச் செலவு செய்யக் கூடுமென்ற பீதியை மறுக்க முடியாது. நம்மை நசுக்கினால் பொறுத்துக் கொண்டிருப்பதே நம்

உடம்புக்கு நல்லதென்று சில அதிகாரிகள் சொல்லுவது நல்ல மாதிரிதானே? இல்லாவிட்டால் அதிகாரிகளுடைய "ப்ரெஸ்டிஜ்" (கௌரவம்) குறைந்து போகாதோ? "ப்ரெஸ்டிஜ்" நம்மைப் பயமுறுத்தின பழம் பூச்சாண்டி; எப்பொழுதும் நம்முடைய செவியைப் பிடித்துக் கொண்டிருக்கும் நாய்கள்; பேஹிலா காவியத்திற்குரிய மாநஸா : வீ சங்கனுடைய சண்டி; அதன் பூசைக்குப் போகையில் தர்ம நியாயங்களை அவமதித்து இடறிக்கொண்டு போகவேண்டும்; இல்லாவிட்டால் அது நம்மை இடறும். எனவே, "ப்ரெஸ்டிஜ்" தேவதைகளுக்கு நமஸ்காரம் போடு.

யா தேவி ராஜ்யசாஸனே
'ப்ரெஸ்டிஜ்' ரூபனே ஸமஸ்திதா
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை
நமஸ்தஸ்யை நமோ நம:

ஆனல் இது வெறும் அவித்தை; மாயை தவிர வேறொன்றும் இல்லை. நம்முடைய புறக் கண்ணுக்குத் தோன்றிய போதிலும் நாம் அதை நம்பக் கூடாது. உண்மை அதன் பின்னே நிற்கிறது. அது யாதெனில், "நம்முடைய ஆட்சி, நம்முடைய விவகாரம்". இந்த உண்மையிலேதான் பிரிட்டிஷ் ராஜ்யத்துக்கு வலிமை உண்டாகிறது. இதுவே நமக்குப் பலம்; பிரிட்டிஷ் கொள்கைகளை நாம் தைரியமாக நம்பாவிட்டால், போலீஸ் நம்மை நசுக்கிக் கொண்டேதான் இருக்கும். மாஜிஸ்ட்ரேட்டால் நம்மைக் காக்கவும் முடியாது; "ப்ரெஸ்டிஜ் தேவதை மனுஷ்ய பலி கேட்டுக் கொண்டே இருக்கும்". இங்குச் சிலர்—"பலத்தைக் காட்டிலும் தர்மம் பெரிதன்று; பரமார்த்திகமாகப் பேசலாமே யொழிய, நடையில் வெளியிட்டால் ஆபத்து வரும்" என்று கூறி ஆக்ஷேபிக்கலாம். ஸங்கடம் வரக்கூடும்; இருந்தாலும், நாம் நம்பிக்கைப்படிச் செய்ய

வேண்டும். "ஸ்வதேசத்தாரே லஞ்சம் வாங்கிக் கொண்டும் பயந்தும் உமக்கு விரோதமாக ஸாக்ஷி சொல்வார்களே!" என்று சொல்லக்கூடும்; இருந்தாலும், உண்மையென்று கண்டு கொண்டதை வெளியிட்டுச் சொல்லவேண்டும். "ஸ்வதேசத்தாரே உம்மை மறைந்து நின்று தலையில் அடிப்பார்களே", லஞ்சத்தையும் ஸ்துதியையும் வேண்டிச் செய்யலாம்; எனினும், நாம் உண்மையை நம்பவேண்டும். "அவ்வளவு தூரம் நம்பலாமா?" சரியாக, அவ்வளவும் நம்பியாக வேண்டும்; துளி குறைந்தாலும் போதாது.

ராஜாங்கத்தாரிடம் பெரிய விஷயங்கள் கேட்கிறோம். ஜனங்களுக்குப் பெரிய வரங்கள் தர வேண்டும். இல்லாவிட்டால், ராஜாங்கத்தாரிடம் செய்யும் பிரார்த்தனை பயன்படாது.

'எல்லோருமே வீரர் அல்லர்; பயந்தவர்கள் உலகத்தில் உண்டு' என்பதை நான் அறிவேன். இருந்தாலும், எல்லாத் தேசங்களிலும், எல்லாக் காலங்களிலும் சிலர் தமது ஜாதியின் இயற்கைப் பிரதிநிதிகளாகப் பிறந்து, தேசத்தின் கஷ்டங்களைத் தாம் பொறுக்கிறார்கள். எதிர்ப்பை எல்லாம் வெட்டிப் பாதை போட்டு, மற்றவர் பின் வருவதை எளிதாக்குகிறார்கள்; மனுஷ்ய ஜாதிகளின் வெளி நடைகளில் எத்தனை விபரீதங்கள் இருப்பினும், அவற்றைப் பொருட்டாக்காமல் அதனிடம் நம்பிக்கை செலுத்துகிறார்கள்; நிஜாந்தகாரத்திலுடைய கண் விழித்து உதயம் வருமென்று காத்திருக்கிறார்கள்; கோழைகளின் பயத்தை நகைத்து,

ஸ்வல்ப மப்யஸ்ய தர்மஸ்ய
த்ராயதே மஹதோ பயாத்

அதாவது, "இந்தத் தர்மத்தில் சிறிதளவு பெரிய பயத்தினின்றும் காப்பாற்றுகிறது" என்ற வாக்கி

யத்தை உரைக்கிறார்கள். ராஜ்யத்தில் உண்மை அம்சம் உண்டானால் அதை வணங்குவோம்; பாபத்தை வணங்கோம், பயத்தை வணங்கோம்.

ஒருவனுடைய குழந்தைக்கு உடம்பு சொஸ்தமில்லை; ஐரோப்பிய டாக்டருக்குப் பெரிய தொகை கொடுத்து வரவழைத்தான்; டாக்டரும் நாட்டு மந்திரவாதியைப் போல் உச்சாடனங்கள் செய்யத் தொடங்கினான்; "சிகிச்சை செய்யும்; இந்தக் காரியத்துக்கு உம்மை அழைக்கவில்லை" என்று இவன் சொன்னான்; டாக்டர் கோபத்துடன், 'உனக்கென்ன தெரியும்? நான் வைத்தியன்; நான் எது செய்தாலும் அதுவே வைத்தியம்' என்றான். அப்போது இவன், 'உன்னைக் காட்டிலும் உன் தொழிலே பெரிது; நான் பணம் கொடுத்தது தொழிலைக் கருதி' என்கிறான். டாக்டர் இவனை அடித்துக் கீழே தள்ளிப் பணத்தை இடுப்பில் சொருகிக்கொண்டு போவதாக பாவனை செய்துகொள்வோம். அவன் வண்டி ஸவாரி செய்துகொண்டு வீட்டுக்குப் போகையில் அவன் மனமே அவனைச் சீயென்று சொல்லாதா? அது போல, இப்போது பிரிட்டிஷ் அதிகாரிகளின் உத்தரவுகளுக்கு உட்படாமல், பிரிட்டிஷ் ஜாதியின் ராஜ்யக் கொள்கைகளை நான் அங்கீகாரம் செய்வதை உத்தேசித்து ஒருவேளை இன்று என்னை அதிகாரிகள் கஷ்டப்படுத்தலாகும்; ஆனாலும், எனக்கு நாளை வெற்றியுண்டாகும்.

நூற்றைம்பது வருஷம் பிரிட்டிஷ் ஆட்சி நடந்த பிறகு இன்று சென்னை மாகாணத்தாரின் கஷ்டங்களுக்கு வங்காளத்தார் இரக்கப்படக் கூடாதென்று கட்டளை போடுகிறார்கள். பிரிட்டிஷ் ராஜ்யத்தின் முதலாவது நன்மை என்னவென்றால், 'அதனால் பம்பாயும், சென்னைப்பட்டணமும், வங்காளமும்,

பஞ்சாபும் ஐக்கியப்பட்டு வருகின்றன' என்று சொல்லக் கேள்வியுண்டு. மேற்குக் கண்டத்தில் பிரிட்டிஷார் பெல்ஜியத்துக்காகவும் பிரான்ஸுக்காகவும் இரத்தத்தைச் சிந்தி யமனை எதிர்க்கிறார்கள் என்றும் வதந்தி. அதே மூச்சிலே, சென்னைப்பட்டணத்தாரின் சுகதுக்கங்களை வங்காளத்தார் கவனிக்கக் கூடாதென்று சொல்லலாமா? அதை எத்தனை உரக்கக் கூறிய போதிலும், மனத்திற்குள்ளே வெட்கம் உண்டாகாதோ?

அதிகாரிகளின் ரஹஸ்ய லஜ்ஜைக்கும் நம்முடைய பஹிரங்க உல்லங்கனத்துக்கும் இடையே ஒரு பாலம் போடவேண்டும். இங்கிலீஷார் இந்தியாவிற்குக் கொடுத்த வாக்கினால் கட்டுப்பட்டிருக்கிறார்கள். ஐரோப்பிய நாகரிகத்தின் பிரதிநிதியாகிய இங்கிலாந்து இந்தியாவிற்கு வந்தது. பிரதிநிதியாகிய இங்கிலாந்து கொடுத்த வாக்குறுதியே மேற்படி ஐரோப்பிய நாகரிகத்தின் ஞான மந்திரம்; இதுவே அவர்களுடைய ராஜ்யத்துக்குப் பலம்; இதை மஹிமைப் படுத்துவோம். 'இந்தியாவை நசுக்கும் பொருட்டு ஆங்கிலேயர் இங்கு வரவில்லை' என்பதை அவர்கள் மறக்க நாம் இடங்கொடுக்கமாட்டோம்.

ஏதேனும் ஒரு பெரிய ஜாதியாருக்குப் பெரிய அனுபூதி உண்டாயின், அது பிறர்க்கும் கொடுக்கத் தக்கது. லோபத்தினால் தனக்கு நஷ்டம் உண்டாகும்; ஸயன்ஸும் மனுஷ்ய உரிமைகளும் ஐரோப்பாவின் அனுபவப் பயன். இந்தச் செல்வத்தை நமக்குக் கொடுக்கும் பொருட்டாகத் தெய்வம் இங்கிலாந்தை நம்முடைய கரைகளில் கொண்டுவந்து சேர்த்தது; இந்தக் கடமையை நிறைவேற்றும்படி அவர்களை வற்புறுத்துவது நம்முடைய கடமை. ஒருபாலார்

தம்முடைய கடமையைச் செய்யாவிட்டால், இரு பாலாருக்கும் மறதியும் வீழ்ச்சியும் உண்டாகும்.

இங்கிலீஷ்காரர் தம்முடைய தேச சரித்திரத்தை திருஷ்டாந்தமாகக் காட்டி, "நாங்கள் நெடுங்காலம் போராடி உழைத்ததன் பயனாக மிகவும் தாமத மாகவே எங்களுக்கு ஸ்வராஜ்யம் கிடைத்தது" என்று சொல்லக்கூடும். இருக்கலாம்! வழிகாட்டுகிற ஜாதிக்குக் கஷ்டம். பின்னே வருகிற ஜாதிக்குச் சுலபம். திருஷ்டாந்தமாக, அமெரிக்காவில் வங்காளி மாணாக்கர்கள் தாமே யந்திரங்கள் செய்கிறார்கள். இதற்காக ஆதி காலத்தில் அடுப்புச் சட்டியிலிருந்து நீராவிக் கருவி தோன்றிய நாள் முதல் இன்று வரையில் படிப்படியாக வந்து நூறு ஆண்டுக் காலம் இன்னும் படித்துக்கொண்டு வரவில்லை. ஐரோப் பாவில் பல காலம் வளர்ந்த பயிரை ஜப்பான் ஒரு க்ஷணத்தில் கொண்டுபோய் வைத்து நேரே பயிரிட்டு வருகிறது. ஸாமர்த்தியம் குறைவென்றால், அதற்கு விரைவாகவே ஸ்வராஜ்ய வழக்கத்தைக் கைக் கொள்ள வேண்டும். 'ஒருவனிடம் ஒரு திறமை இல்லை' யென்று நாம் முன்னதாகவே தீர்மானம் செய்தால், அப்படி இல்லாமற் போகும்; அவன் திறமை நம்முடைய கண்ணுக்குத் தெரியாமலே போகும். நம்மவரை நாமே இகழ்ந்து, அவர்களிடம் நன்மை பிறப்பதை நாம் தடுத்து அவர்களை உலகம் இகழவைத்தால், அதைவிடப் பெரிய குற்றம் வேறொன்றும் இல்லை.

சரித்திரத்தில் ஸூர்யோதய மாகிறபோது கிழக்கே ஒளி ஊர்ந்தூர்ந்து வராது; பாய்ந்து வரும். எட்டுத் திசையும் உடனே நிரம்பச் செய்யும்; 'உலகத்து ஜாதியார் அங்குலத்தின்மேல் அங்குலமாக மேன்மைக்கு நகர்ந்துதான் செல்லவேண்டும்' என்று

விதி போட்டால் எந்த ஜாதி யாருக்கும் மேன்மை நேரிடாது; தகுதி உண்டான பின்புதான் விடுதலையை விரும்பலாம் என்று விதி போட்டால், எந்த ஜாதிக்கும் விடுதலை உண்டாயிராது.

ஐரோப்பியர் தம்முள் ஜனாதிகாரம் உண்டென்று புகழ்ச்சி சொல்லிக் கொள்ளுகிறார்கள்; ஐரோப்பியர் அமெரிக்கர் வெளி டம்பத்துக்குள் மறைந்து கிடக்கும் அழுகற் சேற்றைக் கிற விருப்பமில்லை; இவர்களுக்குத் தலை அதிகாரமாக ஒன்றை நாட்டி, மேற்படி சேறு முழுதும் கழுவின பிறகுதான், ஜனாதிகாரம் நடத்தலாமென்று விதி போட்டால், சேறும் நீங்காது; நீங்குமென்ற நம்பிக்கைக்கும் இடமிராது.

இப்படி நமது ஜாதியாசாரங்களிலும், தனி நாட்டங்களிலும் பிழைகள் இருக்கத்தான் செய்கின்றன; அவற்றை நான் மறைக்க விரும்பினாலும் என்னால் முடியாது. எப்படிக்கும் நம்மை நாமே ஆளவேண்டும்; ஒரு விளக்கு மங்கினதைக் குறித்து, மற்றொரு விளக்கை ஏற்றாமல் தவிர்க்கவிடலாகாது. மனுஷ்ய ஜாதி மொத்தத்துக்கே பெரிய திருவிழா நடக்கிறது. எல்லா நாட்டு விளக்குகளும் எல்லா விஷயங்களிலும் ஒரே மாதிரியாக இருந்தாலும், ஊர் கோலம் முன்னே செல்லுகிறது. நம்முடைய விளக்குச் சற்றே அவிந்தால் இங்கிலாந்தின் விளக்கில் சற்றுப் பற்றவைத்துக் கொள்ளலாகாதோ? இதற்கேன் கோபம்? இதனால் பிரிட்டிஷ் ஒளி குறையாது. உலகத்தின் ஒளி அதிகப்படும்.

திருவிழாவில் தெய்வம் நம்மைக் கூப்பிடுகிறது; பூசாரி தடுக்க நாம் இடம் கொடுக்கலாமா? சிறு பணக்காரர் வந்தால் பூசாரி பல்லைக் காட்டுவான். ஆஸ்திரேலியாவும், கனடாவும் வந்தால் எதிர்

கொண்டெழுந்து நல்லாய்வு சொல்லுவான். திருவிழாக் கடவுளுக்குக் கண் குருடில்லை; இப்படிப்பட்ட வேற்றுமைகளை அவர் பொறுக்கமாட்டார். உள்ளத்திலே பாவம் வெட்கமாக வந்து சுடாவிட்டால், வெளியே தெய்வக் கோலமாக வந்து சுடுகின்றது.

பிரிட்டிஷாரும் நாமும் கலந்து இக்காரியம் செய்யவேண்டும். வங்காளிகளிடம் எனக்கு நம்பிக்கைதான்; வாலிபர் கிழ வேஷம் போட்டுக்கொண்டு கீழ்ப்பார்வை பார்க்கக்கூடாது. ஆங்கிலேயருக்குள் சில மஹாத்மாக்கள் தோன்றி இங்கிலாந்தின் சரித்திரப் பயனை நாமும் அனுபவிக்கும்படிப் பேசிச் சில ஜனங்களிடம் அவமானப்படுகிறார்கள்.

இந்தியாவிலும் பிறர் சினத்தையும் தமர் நகைப்பையுங் கருதாமல், தோல்விக்கஞ்சாமல், ஆண்மை காட்டும் ஆண் மக்கள் வேண்டும்.

நமது தேசத்தின் குலதெய்வம், என்றும் விழித்திருக்கும் நித்யதேவன், நம்முடைய ஜீவன் இப்பொழுது வெளியதிகாரிகளுக்குப் பயந்து குருட்டாசாரம் என்ற தளைபூண்டுப் புழுதியில் கிடப்பதை நீக்கி, அதன் ஸஹஜ நிராகர நித்ய ஜயாமிர்த ரூபமான ஆத்ம ரூபத்தில் சேரும்படி அந்த ஈசன் கூறுகிறான். அடிமேல் அடியடித்து "ஆத்மா நம் வித்து", "தன்னை அறி" என்கிறான்.

காலத்துக்கு முந்தியே கிழவனாகி, குருட்டு நம்பிக்கை என்ற மூடச் சுமையால் முதுகு வளைந்து போய்த் தன்னைத்தான் நம்பாத கோழையே, கேள்!

நமக்குள்ளே சில்லரைச் சண்டை, அற்பப்பகை, அற்பப் பொறாமைகளுக்கெல்லாம் இதுவன்று காலம், கஞ்சிக்குப் பிச்சைக்காரர் சண்டையிடுவதுபோல், சிறு தயவுகளை விரும்பி நமக்குள்ளே சண்டை

போடும் காலம் சென்றது. இருட்டு மூலைக்குள் உட்கார்ந்து கொண்டு, நம்மை 'நாமே மஹான்கள்' என்று பாவனை செய்வதில் பயனில்லை; உலகத்தாரின் சபைகளில் நம்முடைய கர்வம் சிறுமைப் படுகிறது. சக்தியீனர் போல நாம் பிறரைக் குற்றங் கூறுதல் கூடாது; பல நூற்றாண்டு செய்த பாவம் பெருஞ் சுமையாய், நமதாண்மையை நசுக்கி நம் அறிவை மயக்கிவிட்டது. அவற்றின் பெருஞ் சுமையைத் தள்ளி எறிய ஒரு பெரிய முயற்சி செய்யக் காலம் இதுவேயாம். நாம் முன்னே போகவொட்டாமல் இந்தச் சுமை பின்னே இழுக்கிறது; சென்றது வருவதை வசியவித்தை போலே கலங்கச் செய்கிறது; சென்ற காலப் புழுதியுஞ் சருகும் புதிய உதயத்தை மறைக்கின்றன; நம்முடைய புதிய இளமைத் தொழிலை அவை மூடுபனி போலே மறைக்கின்றன; நிஷ்பிரயோஜனம் என்ற அவமானத்திலிருந்து தப்ப விரும்பினால், இந்தச் சுமையைக் கூசாமல் வீசி எறிந்துவிட வேண்டும்; மனுஷ்ய ஜாதி எப்போதும் முன்னே நோக்கிச் செல்லுகிறது; எப்போதும் விழிப்புடன் புது நிலங்களைத் தேடி மரணத்தை வெல்லுகிறது; ஜகத்தின் பெரிய சிற்பிக்கு வலக்கை போன்றது. உண்மையைக் கெஞ்சி அறிவுச் சுடர் கொளுத்திய வீதி வழியே செல்லும்பொழுது, யுகத்துக்கு யுகம் வெற்றி கொண்டு முன்னேறும் போது, உலகம் முழுவதும் எதிரொலி கேட்கத் தனி ஆரவாரம் உண்டாகிறது; இந்த மனுஷ்ய ஜாதியுடன் நாம் சம நடையாகச் செல்ல விரும்பினால், இந்த முதுகுச் சுமையைக் கூச்சப்படாமல் வீசி எறிந்துவிட வேண்டும்.

புறத்திலிருந்து நம்மீது இடைவிடாமல் அவமானமும் கஷ்டமும் பட்டுப்பட்டுத் தீண்டலாயிருப்பதைச் சுத்தி பண்ணித் தீர்க்கவேண்டும். 'தானாக

விரும்பித் தான் உழைத்தல்' என்னும் ஹோமத்தைச் செய்து, சுத்தி பண்ணவேண்டும்; அந்த யாகத் தீயில் நம்முடைய பாவங்கள் வெந்துபோம்; அஞ்ஞானப் புகை விலகும்; சோம்பற் குணம் சாம்பராகும்.

பெரிய தீ தேவா! நீ தீரன், தேவன்; எம்மிடத்தே மஹத்தாயும், துஷ்கரஹிதமாயும், நாசரஹிதமாயும், நாயகமாயும் அமரமாயும் உள்ள அம் சத்துக்கு நீ நாதன்.

அதனை உனது ராஜ ஸிம்ஹாஸனத்துக்கு வலக் கையாக அழைக்கிறாய்; நம்முடைய சோர்வும், அறியாமையும் பழியுற்று, நமதடிமைக் குணம் தண்டனைப்பட்டு நம்மினின்றும் பிரிந்து செல்க; நன்மை வளர்க.

# ஜாதி

[மொழி பெயர்த்தவரின் குறிப்பு :—இதில் ஆசிரியர் ஜனப் பிரிவுகளை 'ஜனம்', 'ஜாதி' என இரண்டு வகையாக நோக்குகிறார். நிலம், பாஷை முதலியவற்றால் ஏற்படும் இயற்கைப் பிரிவுக்கு "ஜனம்" என்ற பெயர் சொல்லுகிறார். அதற்குத் திருஷ்டாந்தம் ஆரிய ஜனம்; நீக்ரோவ ஜனம். ராஜ பேதத்தால் கற்பிக்கப்படும் பிரிவுக்கு ஜாதி என்று பெயர் சொல்லுகிறார். திருஷ்டாந்தம் : ருஷிய ஜாதி, ஜெர்மன் ஜாதி. இந்த விசேஷப் பொருளை ஞாபகத்தில் வைத்துக் கொண்டு படிக்க வேண்டும்.]

ஜனவகுப்புக்கள் தனித்தனி சுபாவங்களுடைய வெவ்வேறு ஜீவன்களாம். ஆனால் "ஜாதி"கள் வெறுமே வலிமைக்காகச் சேர்ந்த கூட்டங்களைத் தவிர வேறில்லை. அதுபற்றியே இவற்றின் உட்குணங்களும் புறச் செய்கைகளும் எங்கும் ஒரே சந்தமாக, ஒரே மாதிரியாக இருக்கின்றன. இவற்றுள்ளே வேற்றுமைகளிருந்தாலும் அவை தொழில் வலிமையைப் பற்றின வேற்றுமைகளே யன்றி குண பேதங்களல்ல. நவீன உலகத்தில் ஜனத்தின் ஜீவ

சக்திக்கும், ஜாதியின் நிபந்தனைகளுக்கும் போர் நடக்கிறது.

ஆசியாக் கண்டத்தின் மத்தியில் முன்பு மனிதர் குடியிருந்த நாட்டுக்கும், அதன்மேல் இடைவிடாமல் ஏறிக்கொண்டு வந்த பாலைவனத்து மணலுக்கும் சண்டை நடந்தது. உயிரும் அழகும் கொண்ட நாட்டை மணல் அழித்து விட்டது. அதுபோல் ஜாதி ஜனத்தை அழிக்கிறது. மனுஷ்யப் பொது ஜன உத்தம லக்ஷணங்களைப் பரவச் செய்தல் முக்ய மில்லை என்ற எண்ணத்திலிருந்து ஜாதியின் திறமை வளர்ப்பதாகிய கல்நெஞ்ச ஸம்ப்ரதாயம் பலமடைகிறது. ஸான்ப்ரான்ஸிஸ்கோ நகரத்தி லிருந்து லண்டன்வரை, லண்டனிலிருந்து டோக்யோ வரை ஜாதியெண்ணம் ஆதிக்கம் பெற்றிருக்கும் நகரங்களனைத்திலும் ஒரேமாதிரியான இயல்பைக் காணலாம். அவற்றின் முகங்களைக் காட்டுவதில்லை; முகமூடிகளையே காண்பிக்கின்றன. ஜனம் ஜீவ னுதலால் அதற்கு ஆத்மப் பிரகாசம் வேண்டும். அது ஸ்ருஷ்டி செய்யும்-கல்வி, கலை, கோயில் முதலி யன ஜனத்தின் ஸ்ருஷ்டிகளாம். இவை ஒரே விருந்தில் பலவித உணவுகள் போலே உண்மையை அறிந்து இன்பமடைவதில் வெவ்வேறு சுவை தரு கின்றன. மனுஷ்ய லோகத்தை உயிர் வளமுடைய தாக்கிப் பலவிதங்களில் அழகு படுத்துகின்றன. ஆனால் ஜாதிகள் ஸ்ருஷ்டி செய்வதில்லை. அவை பெருக்குகின்றன, அழிக்கின்றன; பெருக்குதலாவது சோறு துணி சேர்த்தல் போன்ற தொழில்வகை. பெருக்கும் கூட்டங்கள் அவசியமே. அழிக்குங் கூட் டங்களும் அவசியமாக இருக்கக்கூடும். ஆனால் இவை பேராசையும், விரோதமும் சேரும்போது, மனுஷ்ய ஜீவனை ஒரு மூலையில் ஒதுக்கிவிடுகின்றன. இதனால் இசை தவறுகிறது. ஜனங்களின் சரித்

திரம் அழிவை நோக்கிக் கழுத்தொடியும் வேகத்துடன் செல்லுகிறது.

மனுஷ்ய ஜாதி உயிருடனிருக்குமிடத்தே ஆதர்சங்களை, உத்தம தர்மங்களைப் பின்பற்றுகிறது. செத்த கட்டுப்பாடாகிவிடும் போது ஆதர்சங்களுக்கு இடங் கொடுப்பதில்லை. அதன் கட்டட மெல்லாம் புறத் தொழிலாகவே நடைபெறுகிறது. உள்ளிருக்கும் தர்மக் காட்சிக்கு அதன் உத்தரம் நேரில்லை. பல வளையாத முரட்டுத் தடைகளைக் கடந்து செல்ல வேண்டியதாகிறது.

மனுஷ்ய ஜீவனுக்குத் தனிமைக் குணமொன்றிருக்கிறது. தனிமையாகிய களத்திலேதான் அவனுடைய ஆத்மா தன்னைப் பிரகாசப்படுத்திக் கொள்ளவும் வளரவும் ஸ்வாதீன மடைகிறது. மனிதன் பொது நிலைமையைவிட்டு ஒரு 'தொழிலாளி' அதாவது யாதேனுமோர் வியாபாரம், அல்லது விவகாரத்தால் கட்டுப்பட்டவன் ஆகும்போது அவனைச் சுற்றி இறுகலான ஓடு தோன்றுகிறது இந்தத் தொழிலாளித் தனம் என்ற களத்திலே மனிதர் தத்தம் அறிவுக்குத் தனி வழிகள் காட்டித் தமது பலத்தை ஒருமுகமாக்கித் தாம் தாம் முற்படவேண்டுமென்று பரஸ்பரம் முழங்கைகளால் எற்றித் தள்ளுகிறார்கள். தொழிலாளித்தனம் அவசியந்தான். ஆனால் அதை ஆரோக்கிய வரம்புகடந்து செல்லவிடக் கூடாது. அது மனிதனை அடிமைப்படுத்தவும், குறுக்கவும், கடினமாக்கவும், ஆதர்சங்களில் நம்பிக்கையிழந்து லௌகிக லாபந் தேடுவோனாகச் செய்யவும் இடங் கொடுக்கக் கூடாது.

புராதன ஹிந்து தேசத்தில் ஸ்மிருதியால் தொழில்கள் வரம்புகடவாமல் நிறுத்தப்பட்டன. அவை முதலாவது ஜனங்களின் பொதுத் தேவைகளாகவும், பிறகு அவரவருக்கு ஜீவனோபாயங்களாக

வும் கருதப்பட்டன. எனவே எல்லையில்லாத போட்டியின் தூண்டுதலுக்குட்படாமல், தனித்தனி தனது பரிபூரணத் தன்மையைப் பரிக்ஷை செய்ய நேரமிருந்தது.

ஜனங்களுடைய பொதுவான தொழிலாளித் தனத்துக்கு ஜாதியென்று பெயர். அது ஜனங்க ளுக்குப் பெரிய விபத்தாய்க் கொண்டு வருகிறது. ஏனெனில் அதில் மிகுந்த லாபமுண்டாகிறது; எனவே உயர்ந்த ஆதர்ஸங்களின் நியதிகளிலே மனிதருக்குப் பொறுமையில்லாது போகிறது. லாபம் எவ்வளவு அதிகமாகிறதோ அவ்வளவு ஸ்வார்த்தம், பொருமை, விரோதம், இவற்றின் அல்லல் பலமடைகிறது. இவை மனிதர்களின் மனதில் லாபத்தால் விளைகின்றன.

உயிருள்ள ஜனங்கள் ஜாதிகளாக இறுகுதல் மேன்மேலும் அவசியமாகிறது. ஜாதியக் கொள்கை யின் வளர்ச்சியால் மனிதனுக்கு மனிதன் பெரிய விபத்தாய் விட்டான். அக்கொள்கை தீராத பயத்தை விளைவிப்பதனால், மேன்மேலும் பெரிய ஆபத்தாக மூண்டு வருகிறது.

கூட்டத்தின் புத்தி ஒரு குருட்டு சக்தி. நீராவி முதலிய பூத சக்திகளைப் போலவே அதையும் பிரமாண்டமான பலம் சேர்க்க உபயோகப்படுத்த லாம். ஆதலால் லோபத்தாலும் பயத்தாலும் தமது ஜனங்களை வலிமைக் கருவிகளாக்க விரும்பும் அரசர் இந்தக் கூட்டப் புத்தியைத் தமக்கு வேண் டிய வழியில் பயிற்சி செய்கிறார்கள். ஜனங்களுடைய மனதில் எங்கும் பயமும், ஸ்வஜாதிக் கர்வமும்; பிற ஜாதிகளிடம் விரோதமும் வளர்த்தல் கடமை யென்று நினைக்கிறார்கள். பத்திரிகைகளையும் பள்ளிக் கூடப் புஸ்தகங்களையும் கோயில் ஆராதனைகளையுங் கூட இந்த நோக்கத்துக்குப் பயன்படுத்துகிறார்கள்.

தெய்வ விரோதமான இந்தக் குருட்டுக் கொள்கையைத் தைரியத்துடன் எதிர்த்துப் பேசுவோரை நியாயஸ்தலங்களில் தண்டிக்கிறார்கள்; அல்லது கூட்டத்திலிருந்து விலக்குகிறார்கள்.

தனி மனிதன் (லோபதாப முதலிய) உணர்ச்சிகளின் சமயத்திலும் யோசனை பண்ணுவதுண்டு. ஆனால் ஒரு கூட்டத்தின் உணர்ச்சியுடன் கலக்கும்போது யோசனை செய்வதில்லை. அதனுடைய தர்மப்புலன் மழுங்கிப் போகிறது. கூட்ட மனங்களில் மனிதத் தன்மையை நசுக்கிவிடுவதனால் மிகுந்த பலமுண்டாகிறது. ஏனென்றால் கூட்டப் புத்தி இயல்பில் அநாகரிகமானது. அதன் சக்திகள் பூத சக்திகளைப் போன்றன. இருளின் பெரிய வலியை ஜாதி தனக்குப் பயன்படுத்திக் கொள்வதால் ஜாக்கிரதையாக இருக்கிறது.

சங்கட காலங்களில் ஒரு ஜனத்தின் தற்காப்புச் சிந்தையை அதிக்க முடையதாகச் செய்தல் அவசியமே. அப்போது அதன் ஒற்றுமையுணர்ச்சி கடுமையான விழிப்பெய்துகிறது. இந்த மிகையுணர்ச்சி ஜாதியில் எப்போதும் சாகாதபடி செயற்கை யுபாயங்களால் காக்கப்படுகிறது. ஒருவனுடைய வீட்டைத் திருடர் வந்து கொள்ளையிடும் போது அவன் போலீஸ் சேவகனுடைய தொழிலை மேற்கொள்ள வேண்டும். ஆனால் அவனுடைய சாதாரண ஸ்திதியே அப்படியாய்விட்டால் அவனுடைய வீட்டுச் சிந்தை மிகையாகி வீட்டருகே போவோர் வருவோர் மேலெல்லாம் பாய்ந்து விழும்படி செய்கிறது.

இந்த மிகையுணர்ச்சி ஒருவன் கர்வப்படத்தக்க உடைமையன்று. இது மெய்யாகவே ஆரோக்கியத்துக்கு லக்ஷணமன்று. அதுபோலவே ஒரு ஜாதியின்

திராத தற்போதமும் ஜனங்களுக்கு மிகுந்த தீங்கு விளைவிக்கும். அதனால் தற்காலத்துக்குப் பயன் உண்டாவது போலே தோன்றினாலும் மனிதனுடைய நித்ய ஜீவனுக்கு நஷ்டமுண்டாகும்.

ஒரு கூட்டம் சேர்ந்து யாதேனுமொரு குறுகிய நோக்கத்துக்குத் தம்மைப் பயிற்சி செய்துகொள்ளுமாயின், பிறகு அதையே தளராமல் காத்து அதற்கு மரியாதை செலுத்த வேண்டுமென்று போதனை செய்தல் அந்தக் கூட்டத்திற்கு லாபகரமாகிறது.

ஒரு ஜன முழுமையும் குறுகின ஆதர்ஸப்படி பயிற்சி செய்வதே ஜாதியக் கொள்கை. அது ஜனங்களுடைய உள்ளத்தைக் கவரும்போது தர்மக் குறையையும் குருட்டறிவையும் விளைப்பது நிச்சயம். இந்த ஜாதியக் கொள்கையின் காலம் பிரம்மாண்டமான ஸ்வார்த்தமும் செருக்கும் தலைப்பட்ட காலம். இது நாகரிகத்தில் அசாசுவதமான ஓரிடைக் காலமேயன்றி வேறில்லையென்ற நம்பிக்கையை நாம் உறுதியாகப் பற்றி நிற்போம்.

மனித சரித்திரத்தின் இந்த அசாசுவதமான குணத்தைத் திருப்தி செய்யும் பொருட்டு சாசுவதமான வேலை செய்வோர் இனி வரப்போகிற உண்மையான விடுதலைக் காலத்துக்குத் தகுதியில்லாது போவார்கள்.

ஜாதியக் கொள்கை தடையின்றி வளர்வதனால் மனுஷ்ய நாகரிகத்தின் ஆதார நீதி தன்னையறியாமலே மாறுபடுகிறது. சமூகத்து மனுஷ்யனுடைய உத்தம லக்ஷ்யம் பிறர் நலம். ஆனால் ஜாதி தொழிலாளித்தனம் உடையதாகையால் அதற்குத் தக்கபடியே அதன் உத்தம லக்ஷ்யம் தன் நலம். இதனாலேயே தனி மனுஷ்யன் தனக்குத் தனக்கென்ற அவா உடையவனாக இருந்தால் பழிக்கப்படுகிறான். ஒரு

ஜாதி அப்படியிருந்தால் புகழப்படுகிறது. இதனுல் ஏக்கத்துக்கிடமான நீதிக் குருட்டுத்தனம் உண்டாகிறது. அது ஜனத்தின் மதத்தை ஜாதியின் மதத்தோடு ஒன்றுகப் போட்டுக் குழப்புகிறது. இதனுலே தான் உலகத்தின் பெரும்பகுதியை கிறிஸ்தவ ஜாதியார் ஆளுவதனுலே கிறிஸ்து மதந்தான் உயர்ந்ததென்று சொல்லுவோர் சிலர் இருப்பதாகக் காண்கிறேம். இது ஒரு திருடன் களவு செய்த சொத்தை அளவிட்டு அவன் மதக் கொள்கையை ஆதரிப்பதொக்கும். ஜாதிகள் தாம் பிற மனிதரை யதேஷ்டமாகக் கொன்று முடித்தது பற்றி ஆலயங்களில் விசேஷங் கொண்டாடுகின்றன. "டக" ஜாதிக் கள்வர்கூட்டத் தமது கொள்கையை நிறைவேற்றியது தாம் வணங்கிய தேவியின் கிருபையென்று நினைத்தார்கள் என்பதை மேற்படி ஜாதிகள் மறந்து விடுகின்றன. "டக" ஜாதியார் விஷயத்தில் அவர்களுடைய தேவதையை வெளிப்படையாகவே ஸம்ஹார மூர்த்தியென்று சொல்லி வணங்கினர். அது மேற்படி குற்றவாளி ஜாதியின் கொலையுணர்ச்சியை தெய்வமாக்கினவாறு. தனி மனிதனுடைய மனமன்று, கூட்டத்தின் பொது உள்ளம். ஆதலால் தெய்விகமென்று கருதப்பட்டது. அதேமாதிரி நவீன சர்ச்சு (கிறிஸ்தவாலயங்களில்) ஜாதியின் பொது மனமென்ற கூட்டு நிலையில் ஸ்வார்த்தமும், அற்பச் செருக்கும், விரோதமும் தெய்வ பூசையுடன் கூசாமல் வந்து கலந்துகொள்ளுகின்றன.

தன்னலத்தை நாடி யுழைத்தல் முழுமையும் அஹங்காரமாகவே யிருக்கவேண்டுமென்று கட்டாயமில்லை. எல்லா நலத்துடன் அது பொருந்தவுங் கூடும். எனவே ஆதர்சிகமாகப் பேசுமிடத்து, ஜன ஸ்வார்த்தத்தின் பிரகாசத்தை நாடும் ஜாதியக் கொள்கை அவமானமடைய ஹேதுவில்லை. ஆனல்

நாம் அனுபவத்தில் காண்பது யாதெனில் செல்வ மடைந்த ஜாதி யொவ்வொன்றும் பிறருக்குத் தீங்கு செய்யும் ஸ்வார்த்தச் செயல்களிலேதான் அதை யடைந்திருக்கிறது. அதாவது வியாபார வேட்டை களினாலும், அந்நிய தேச உடைமைகளாலும், அல்லது இரண்டும் சேர்ந்ததாலும் என்க.

இந்த லௌகிகச் செல்வமிகுதி ஓயாமல் ஜனத் தின் ஸ்வார்த்த இயல்பைப் போஷிப்பதுமின்றி, ஒரு ஜாதிக்கு ஸ்வார்த்தம் (தன்னலம்) அவசியம், ஆதலால் அதுவே தர்மம் என்ற பாடத்தை மனிதரின் உள்ளத்தில் அழுந்தச் செய்கிறது. ஐரோப்பாவில் ஜாதி யெண்ணத்தில் அழுத்தம் எப்போதும் வளர்ந்து செல்வதால் அது நேர்ச் செய்கையாலும், தொத்தும் திறத்தாலும் மனிதருக்குப் பெரிய விபத் தாய்க் கொண்டு வருகிறது.

மனுஷ்ய ஸ்வபாவத்திலேயே தீமைகள் இருப்பது மெய்தான். நாம் தர்ம விதிகளை நம்பியிருந்தாலும் தன்னாட்சியில் பயிற்சி பெற்றிருந்தாலும் அவை நம்மையறியாமல் வெளியே கிளைத்து விடுகின்றன என்பதும் மெய்தான். ஆனால் அவை தம் நெற்றிமீது பழிச்சூடு போட்டுக்கொண்டிருக்கின்றன. அவற்றின் வெற்றியே அவற்றின் கொடூர ரூபத்தை அதிக கோரமாகக் காட்டுகிறது. மனுஷ்ய சரித்திர முழுமை யிலும் துன்பப்படுவோர் சிலரும், படுத்துவோர் பிறரும் இருக்கவே செய்வார்கள். தீமையை வெல்லுதல் எக்காலத்திலும் பரிபூர்ணமாக நிறை வேறாது. தீ எரிவதுபோல் நமது நாகரிகத்தில் அது தொடர்ச்சியாக நடக்கும் செய்கையாம்.

நித்தியமான பரிபூரணத்வ லக்ஷ்யத்துக்கும், அதன் நிரந்தர ஸ்தானத்துக்கும் உள்ள பொருத் தமே ஸ்ருஷ்டி யென்று சொல்லப்படும். நன்மை

யென்னும் உடம்பாட்டு லக்ஷ்யம் ஸாதனக் குறைவு என்ற எதிர்மறையுடன் சமவேகமாகச் செல்லும் மட்டும், அவ்விரண்டுள் முழுப் பிரிவுண்டாகாதிருக்கு மட்டும் நாம் துன்பத்துக்கும் நஷ்டத்துக்கும் பயப்பட வேண்டா.

ஆதலால் முற்காலங்களில் யாதேனுமொரு ஜனம் சலகந் தொடங்கிப் பிறருடைய மனுஷ்ய உரிமையைப் பறித்துவிட முயன்றபோது சில சமயங்களில் அந்த ஜனத்துக்கு வெற்றியும் சில சமயங்களில் தோல்வியும் ஏற்பட்டது; அவ்வளவு தான். ஆனால் இந்த ஜாதியக் கொள்கை இன்று சர்வ சம்மதமாய்த் தனது தன்னலம் அளவிலே பிரமாண்டமாக இருப்பதுகொண்டு அதை தர்ம மென்று காட்டத் தலைப்படுமிடத்தே அந்தக் கொள்கை பிறர் சொத்துக்களைக் கொள்ளையிடுவது மாத்திரமேயன்றி மனுஷ்ய ஜாதியின் உயிர் நிலையைத் தாக்குகிறது. தர்ம விதியைப் புறக்கணிக்கும் புத்தியை மனிதருக்கு அவசரமாகவே விளைவிக்கிறது. ஏனெனில் ஜனம் தர்மவிதியை தெய்விகமாக எண்ண, ஜாதி அந்த விதியைக் காற்றிலே தூற்றி விடுகிறதெதனுல் எனில், ஜனத்தைக் காட்டிலும் ஜாதியே பெரிதென்ற கொள்கை பலவிதமான தந்திரங்களால் ஜனங்களுக்குக் கற்பிக்கப் படுவதனுல் என்க.

ஒரு நோய் மூளையைத் தாக்கும்போது அது மிகவும் கடுமையாகிறது என்று கேள்விப்படுகிறோம். ஏனென்றால் எல்லாவிதமான வியாதி சக்திகளையும் இடைவிடாமல் முற்றுகை போடுவது மூளையேயாம். ஜாதியத் தன்னலக் கொள்கையின் உள் நிலைமை ஒரு ஜனத்திற்கு நேரிட்ட மூளை வியாதியைத் தவிர வேறில்லை. தற்காலத்து அந்த நோயின் அறிகுறி

கள் எவையெனில் சிவந்த கண்களும், குவிந்த முட்டிகளும், கொடுஞ் சொற்களும், கொடுஞ் செயல்களுமாம். இயற்கையிலே உள்ள சௌஸ்தமாக்கும் கருவிகளை அது நொறுக்கிப் போடுகிறது.

ஜன சமூகத்தின் உயிருக்கு நல்ல வழிகாட்டும் சக்தி யாதெனில் ஆத்ம த்யாகமும், அனுதாபத்துக்கும் கூட்டுத்தொழிலுக்கும் இடமாகிய தர்ம்சிந்தையுமே என்க. சூழ்ந்திருக்கும் வஸ்துக்களுடன் அனுகூலசம்பந்தம் கொண்டிருப்பதே அதன் தொழிலாம்.

இன்னும் பெருங்கேடு யாதெனில் ஜனங்களின் இந்தக் கோணல் ரீதியானது தேசபக்தியென்ற பகட்டான பெயர் புனைந்து கொண்டு தன்னை ஒரு மேலான தர்மமாகக் காண்பித்துக் கொண்டு திரிகிறது. சுழலுகிற தனது தொத்து நோயை உலக முழுதும் பரப்பித் தன் ஜ்வரத்தை ஆரோக்கியத்தின் சிறந்த குறியென்று முழங்குகிறது. இயற்கையில் தீங்கில்லாத ஜனங்களின் மனதில் பொறாமையுண்டாக்குகிறது.

"ஜன்னி நிலையில் இருக்கும் அக்கம்பக்கத்துத் தேசத்தாருக்குள்ள பலம் நமக்கில்லையே, அவர்கள் பிறருக்குச் செய்யும் தீமை நம்மால் செய்ய முடியவில்லையே, நாமன்றோ தீமையனுபவிக்கிறோம்" என்று பொறாமையுறச் செய்கிறது.

எனது ஐரோப்பிய நண்பர் அடிக்கடி என்னிடம், "இத்தனை கொடிய தீமையை அழிக்க உபாயமென்ன ?" என்று கேட்கிறார்கள். வெறுமே எச்சரிக்கை செய்துவிட்டு மாற்றுவழி சொல்லாதிருக்கிறேனென்றே என்மேல் பலர் குற்றஞ் சொல்லுகிறார்கள்; ஒருவித அனுஷ்டானத்தால் நன்மை

யுண்டாகு மென்று நினைக்கிறோம். அனுஷ்டானத்துக்குப் பின்னே மறைந்து நிற்கும் உள்ள நிலை தவறாக இருந்தால் அனுஷ்டானம் இன்றில்லாவிட்டாலும் நாளைக்குத் தீமையுண்டாக்கவே செய்யும் என்பதை நாம் மறந்து விடுகிறோம். இன்று ஒரு ஜாதி கொண்டிருக்கும் அனுஷ்டானம் நாளை எல்லா ஜாதிக்கும் பரவும். மனிதர் தமது மிருகக் குணங்களையும் கூட்டக் கோப தாபங்களையும் விடும் வரை புதிய அனுஷ்டானம் புதியதொரு துன்பக் கருவி ஆகுமேயன்றி வேறில்லை. அல்லது வியர்த்தமாகும் நாம் தார்மிகமாக ஸத்குணத்தையும் கார்ய ஸித்திக்குரிய அனுஷ்டானத்தையும் ஒன்றாகக் கருதிக் குழப்பியே பழகியிருக்கிறோமாதலால் ஒவ்வொரு புதிய அனுஷ்டானமும் தோற்றுப் போகும்போது தர்ம விதியினிடத்திலேயே அவநம்பிக்கை கொள்ள நேரிடுகிறது.

ஆதலால் நான் எந்தப் புதிய அனுஷ்டானத்திலும் நம்பிக்கை வைப்பதில்லை. தெளிவான யோசனையும் பெருந்தகைமையுடைய உள்ளமும் நேர் நடையுமுடையவர்களாய் உலக முழுதிலும் ஆங்காங்கே இருக்கும் தனித்தனி மனிதர்களிடம் நம்பிக்கை கொண்டிருக்கிறேன். அவர்களே தர்மத்தின் உண்மைக்கு வாய்க்கால்களாவார்கள்; நமது தார்மிக லக்ஷ்யங்கள் உளியும் சம்மட்டியும் வைத்துக்கொண்டு வேலை செய்யவில்லை. சிற்பிகளிடம் அனுமதி கேட்காமல் மரம் வளர்வதுபோல் மண்ணுக்குள் வேர்களையும் இயற்கையிலேயே விடுகின்றன. இந்தக் காரணத்தாலேதான் ஜப்பானில் ப்ரஞ்ச் தேசத்து யௌவனப் பிராயமுடைய தர்மிஷ்டனொருவனைக் கண்டபோது இனி நாகரிகத்தில் உயர்ந்த காலம் வருவதைப் பற்றி என் மனதில் நிச்சயமேற்பட்டது. ஐரோப்பாவில் அழிவின் பெரிய சக்திகள் களிச்

கூத்தாடிக் கொண்டிருக்கையிலே நான் இந்தத் தனியான வெளிக் கீர்த்தி பெறாத ப்ரஞ்சு இளைஞனைக் கண்டேன். அவனுடைய முகத்தில் புதிய ஸூர்யோதயத்தின் ஒளி வீசிற்று. அவனுடைய வாக்கில் புதிய உயிரின் அதிர்ச்சி தோன்றிற்று. எனவே ராஜ்யதந்த்ரிகளின் பஞ்சாங்கத்தில் பதிவாகாவிடினும் மஹத்தான புதிய யுகம் ஏற்கெனவே பிறந்து விட்டதென்பதை நான் உணர்ந்து கொண்டேன்.

# சிறிதும் பெரிதும்

ராஜரீகப் பஞ்சத்தில் நெடுங்காலம் கஷ்டப்பட்டு பாரததேவி வானத்தை நோக்கிக் கொண்டிருந்தாள். ராஜாங்கச் சோதிடர் ஒரு பலமான ஸ்வராஜ்ய மழைக் காற்று அரபிக் கடலைக் கடந்து வந்துவிட்டதென்றும் பெரிய மழை பெய்யுமென்றும் சோதிடங் கூறினார். அப்போது பார்த்தாலோ! பேஹாரில் மஹமதியர் மேலே ஹிந்துக்கள் கலஹ மழை தொடுத்தார்கள்—கனத்த மழை!

பிற தேசங்களிலும் மதக் கலஹங்கள் உள. அவை லௌகிகப் போட்டியாலும் விரோதத்தாலும் ஏற்படும். நமது தேசத்திலேதான் கேவலம் மதத்துக்கே சண்டை! இந்த உலகத்தில் நாமே அன்யமத ஆதரவில் சிரேஷ்டரென்று வாயினாலே பிதற்றுகிறோம். நவீன ஐரோப்பாவில் கலகங்கள் சோற்றுக் காரணமாக விளைவன. அங்கு நிலக்கரிக் கூலிக்காரரும், கப்பல் கட்டுந் துறைமுகத்து வேலைக்காரரும், ரயில்வே கூலிக்காரரும் இடையிடையே பெரிய கலகம் பண்ணுகிறார்கள், அதிலிருந்து படிப்படியாக

புதுச் சட்டங்கள் பண்ணுதல், பழஞ் சட்டங்களை ரத்து செய்து வைத்தல், சிப்பாய்களை அழைத்தல்— ரத்தச் சேதம் இத்தனையும் நடக்கும். அங்கே இந்த மாதிரிச் சண்டைகளில் கக்ஷி இரண்டே. ஒரு கக்ஷி சண்டை நடத்துகிறது. மற்றொரு கக்ஷி அடக்குகிறது. நமது தேசத்தில் இருப்பதுபோல் வேடிக்கை பார்க்க ஒரு மூன்றும் கக்ஷி கிடையாது.

இங்கிலாந்தில் முன்னொரு காலத்தில், அதன் ராஜாங்க யந்திரம் சரியானபடி செம்மைப்படாமலிருந்தபோது, ப்ரோதஸ்தாந்துக் கக்ஷியாருக்கும் ரோமன் கத்தோலிக்க மதஸ்தருக்கும் கொடுமையான சண்டைகள் நடந்தன. அந்தப் போராட்டத்தில் ஒரு கக்ஷிக்கு மற்றொரு கக்ஷி செலுத்திய அநியாயங்கள் பல. நெடுங்காலம் வரை கத்தோலிக்கக் கிறிஸ்தவர் மிகவும் கஷ்டப்படும்படி நேர்ந்தது. இன்றும் அங்கு ப்ரோதஸ்தாந்து மதமே ராஜாங்க மதமென்று வைத்திருப்பது கத்தோலிக்கருக்கு நிலைத்த அநியாயமேயெனினும், கலகமும் அதிருப்தியும் வெளிப்படாமல் செய்துவிட்ட காரணங்கள் எவை?

எல்லாரும் ஒன்று சேர்ந்து ஸ்வராஜ்யம் பண்ணுகிறார்கள். அதனால் கலகங்கள் நின்றன. ஸ்காட் ஜாதியும் இங்கிலிஷ் ஜாதியும் ஜன வகுப்பிலும், பாஷையிலும், ரஸஞானத்திலும், சரித்திரத்திலும் வெவ்வேறு ஜாதிகள். கடைசியாக இங்கிலாந்துக்காரரும் ஸ்காட்டுகளும் ஒன்று கூடி ஸ்வராஜ்யம் ஏற்படுத்தினார்கள். அதிலிருந்து ஒற்றுமையுண்டாய் அவர்களுக்குள் நெடுநாள் இருந்த கொடிய பழய விரோதப் புண்களெல்லாம் தீர்ந்து க்ஷேமலாபங்கள் ஒன்றாயின. அப்படி ஒற்றுமை இங்கிலாந்துக்கும் ஐர்லாந்துக்குமிடையே உண்டாகாத காரணம்

யாது? ராஜரீக உரிமைகளில் ஸமத்வம் இல்லாமையே காரணம். வேறென்ன ?

நமது தேசத்தில் இந்த ஹிந்து மஹமதிய விரோதம் ஒரு ஸங்கடமான அம்சம். முழு உண்மையினின்றும் விலகுதல் பாவம். பாவமுள்ள இடத்தில் தண்டனையுண்டு. மதக் கொள்கை பரவ ஒரு ஆத்ம விளக்காக இருப்பதை விட்டு, புராணங்களையும் புறக் கிரியைகளையும் பிரதானமாகக் காட்டுமிடத்தே மற்றெதனைக் காட்டிலும் அது பெரிய கலஹாஸ்பதமாகிறது. மதக் கொள்கைக்காகச் சிந்தப்பட்ட ரத்தத்தால் ஐரோப்பிய சரித்திரம் செவ்விய கறைப் பட்டிருக்கிறது. "அஹிம்ஸா; பரமோ தர்ம:" என்பது உங்கள் கொள்கையாயின், அது அஸாத்யமானதாயினும் சிறிது சிறிது அதை நோக்கிச் செல்ல முயலக்கூடாதா ? மதக் கொள்கையென்ற பெயர் வைத்துக்கொண்டு நீங்கள் ஒருவித மிருகத்தைக் கொல்லவும், பிறர் தங்கள் மதக் கொள்கை பற்றி மற்றொரு மிருகத்தைக் கொல்லவும், அது காரணமாக மீண்டும் மதக் கொள்கை என்று நீங்கள் அந்த மனிதரைக் கொல்லத் தலைப்படுதல் கொடுமையன்றோ ? நமது மதம் எப்போதும் சடங்குமயமாகவே இருந்து விடாதென்று நம்புகிறோம். ஹிந்துவும் மகமதியனும் ஒரே ராஜரீக ஆதர்சமுடையவர்களாய், நமது ராஜரீக வாழ்க்கை உண்மை பெறுமாயின் வெளி வேற்றுமைகளைத் துச்சமாகக் கருதக்கூடிய மன ஒற்றுமை வந்துவிடுமென்றும் நம்புகிறோம். நமது சொந்த துக்கங்களையும் நம் பிக்கைகளையும் பற்றின கதை அம்மட்டிலிருக்க, இதில் மூன்றாவது கக்ஷியாருக்கு என்ன வேலை ?

சில தினங்களுக்கு முன்பு ரயில் வண்டியில் நானும் ஒரு ஆங்கிலேயனும் சந்தித்தோம். ஸ்வராஜ்யத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம். பேஹாரில் ஒரு ஹிந்துஸ்தானி ஜமீந்தாரை நோக்கி

ஓர் ஆங்கிலேய தளகர்த்தன், "உங்கள் குடித்தனக் காரரை அடக்கியாள உங்களால் முடியவில்லையே, உங்களுக்கு ஸ்வராஜ்யம் தகுமா?" என்று கேட்ட தாக அந்த ஆங்கிலப் பிரயாணி என்னிடம் சொன்னான். இங்ஙனம் அந்த ஆங்கிலேயன் சொல்லிய கதையில் மேற்படி தளகர்த்தனுக்கு ஜமீந்தார் என்ன மறுமொழி யுரைத்தானென்பதைத் தெரிவிக்கவில்லை. அநேகமாக ஜமீந்தார் தாழ்ந்த ஸலாம் போட்டு, "துரையே, தாங்கள் தகுதியற்றோர். இந்தக் குடியானவரிடமிருந்து என்னைக் காப்பாற்றினால் போதும். எங்களுக்கு ஸ்வராஜ்யம் அவசியமில்லை" என்றான் போலும். ஸ்வராஜ்யம் கனவுலகத்திலிருக்கிறது. எதிரே தளகர்த்தன் நிற்கிறான். குடியானவர் பின்னே பெருங் கலகம் பண்ணுகிறார்கள். அந்த ஜமீந்தார் வேறென்ன சொல்லுவான்? நான் என்னுடன் ரயில் வண்டியில் யாத்திரை புரிந்த ஆங்கிலேயனுக்குரைத்த மறுமொழி யாதெனில், "முன்பு எங்களவர் ஸ்வராஜ்யம் நடத்தியபோது இந்தமாதிரி ஹிந்து மஹமதியச் சண்டைகள் நடந்ததில்லை. மேலும், பேஹாரில் தளகர்த்தனிடம் படையிருந்தது. அதை ஏழை ஜமீன்தார் மிகவும் ஆவலுடன் நோக்கியிருப்பான். ஒருவன் கையிலே படைகளிருக்க மற்றொருவன் சண்டையிடுதல் எப்படி இயலும்? முன்பு சுதேசியக் குழப்பத்தின் நாட்களில் ஜாமல்பூர் முதலிய தூர ஸ்தலங்களில் மாத்திரமேயன்றி, கல்கத்தாவின் நடு மத்தியில் பெரிய பஜாரில் மஹமதியர் ஹிந்துக்களை ஹிம்ஸிக்க ஸர்க்கார் இடம் கொடுத்தது. இது ஆளப்படுவோருக்கு மாத்திரமேயன்றி ஆள்வோருக்கும் ஒரு வசை. இந்த மாதிரி மைஸூர் ராஜ்யத்திலேனும், ஹைதராபாத் ராஜ்யத்திலேனும், நடந்திருந்தால் மேற்படி தளகர்த்தனுக்கு மறுமொழி யுரைத்தல் அதிக சிரமமாகலாம்" என்றேன்,'

நமது குறை அதுவே. நமக்கு அதிகாரப் பொறுப்பில்லை. நம்மை வெளி நின்று காக்கும் கடமையை நம்மை ஆள்வோர் மேற்கொண்டனர். அதனால் நாம் நமக்குள்ளே உதவியற்றவர்களாய் மேன் மேலும் கெடுகிறோம். அதனால் அதிகாரிகள் நம்மிடம் அதிக இகழ்ச்சி காட்டும்போது நாம் எதிர்த்து மறுமொழி சொல்லத் துணிவில்லையாயினும் மனதுக்குள்ளே வைகிறோம். நம்மிடம் அதிகாரம் இருந்தால் அதைக் காப்பது ஹிந்துவுக்கும் மஹமதியருக்கும் ஒருங்கே கடமையாம். கலகம் நேரிடாமல் இரு திறத்தாரும் ஜாக்கிரதையாக இருப்பார்கள். இங்ஙனம் இந்தியாவில் ப்ரிடிஷ் ராஜ்யம் சிறிது காலத்துக்கு மாத்திரமேயன்றி என்றும் ஸ்திரமாகும்.

ஆனால் ஒருவேளை சரித்திரத்தின் அடுத்த பக்கத்தை நாம் திருப்பும்போது, ப்ரிடிஷ் ஜாதியானது தனது 'நல்லரசாட்சி'யின் பின்னப்பட்ட குறைகளுக்கிடையே, நம்மை பலஹீனராய், தற்சார்பு தெரியாதவராய், தற்காப்புக்குத் தகுதியற்றவராய், உண்மையான தன்னலமறியாதவர்களாய், நமது நாட்டுக் கோடானுகோடி ஜனங்களை உயிருடன் அடங்காமல் தலையெடுத்திருக்கும் இதர ஆசியா தேசத்துக்கிடையே விட்டுவிட்டால் இந்த நிராதரவான ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் தமக்கு முடிவின்றி நேரும் துன்பங்களுக்கு யாரை நோவர்? அல்லது, எப்போதும் மாறுகிற பூலோக சரித்திரத்தில், இந்தியாவின் ப்ரிடிஷ் ராஜ்ய சரித்திரம் மாத்திரம் எக்காலத்திலும் மாறாமலிருக்குமென்று வைத்துக்கொண்ட போதிலும் நாம் என்றும் பிரிந்தவராய், தேச உழைப்பில் பொதுக் கட்டில்லாதவர்களாய், சாகுவதச் சிறுமையில் பிணிப்புண்ட மனத்தினராய், அதிகாரமின்றி, குறுகி, நமது வருங்காலத்தைச் சூழ அன்னியரின் இச்சையென்ற பெருஞ் சுவர் வளைந்து நிற்க விதியா?

நாம் ஒரே ஆட்சியின் கீழிருக்கிறோம். ஒரே பொறுப்பின் கீழில்லை. எனவே, நமதொற்றுமை புறத்தோற்றம், நம்மை அது சேர்க்கவில்லை. ஒரு வரிசையாக நிறுத்தி வைத்தது. எங்கேனும் லேசாக அடி விழுந்தால் ஒருவர் மேலே ஒருவர் முட்டுகிறோம். இந்த ஐக்யம் உயிர் உடையதன்று. விழித்துக் கொண்டு ஒரே பாதையில் நடக்கும் மனிதரின் ஒற்றுமை போன்ற ஒற்றுமை. ஒரே தரையின்மீது தூங்குவோர் மாதிரி ஒற்றுமை. இந்த ஒற்றுமையில் கர்வப்பட இடமில்லை மகிழ்ச்சி கொள்ளவும் இடமில்லை. ஒன்றுகூடி ஸ்தோத்ரப் பாட்டுக்கள் பாடவும், ஒன்று கூடித் தலை குனியவும் இடங்கொடுக்கும். நம்மைத் தூக்கிவிடாது.

பழைய காலத்தில் ஜாதிக் கட்டினால் நாம் ஸ்வஜனங்களுக்குச் செலுத்த வேண்டிய கடமைகளில் தவறாமலிருந்தோம். அது குறுகின களம். நாம் பிறந்த கிராமமே ஸ்வதேசமென்று நினைத்துக்கொண்டிருந்தோம். இருந்தாலும், அதன் வரம்புகளுக்குள் செல்வர் தமது செல்வப் பொறுப்பையும், புலவர் தமது புலமைக் கடமையையும் உணர்ந்திருந்தனர். ஒருவன் எவ்விதமான அதிகாரம் கொண்டிருந்தாலும், அவனைச் சூழ நின்றோர் அதனை மாற்றுதல் இயலும். முயற்சியும், பொறுப்புமுள்ள அவ்வித வாழ்க்கையில் மனிதர் மகிழ்ச்சியுறவும், பெருமை கொள்ளவும் இடமிருந்தது.

ஆனால் நம் பொறுப்புக்கள் ஜாதிக் கட்டிலிருந்து விலகிவிட்டன. இப்போது நமக்கு நியாயம் செலுத்துவதும் ஸர்க்கார், காப்பாற்றுவதும் சர்க்கார், வைத்தியம் செய்வதும் ஸர்க்கார், தண்டிப்பதும் ஸர்க்கார்; எது ஹிந்து தர்மத்துக்கடுத்தது, எது அடுக்காதது என்பதை மேற்படி ஸர்க்கார்தான் தீர்மானம் பண்ணுகிறது ; நமக்கு லாகிரி வஸ்துக்கள் தயார்

செய்து கொடுக்கும் பொருட்டாகச் சாராயம் வடிக்குங் கடமையையும் அதுவே செய்கிறது. கிராமத்தான் ஒருவனைப் புலி தின்றுவிட்டால், மாஜிஸ்த்ரேட்டுக்கும், அவருடைய ஸ்நேஹிதர்களுக்கும் வேட்டைக்குப் போக ஸௌகர்யம் ஏற்படுத்திக் கொடுக்கிறது. நமது ஜாதிக் கட்டின் விதிகள் நம்மால் பொறுக்க முடியாதபடி பாரமாய் விட்டன என்பது மெய்யே. பிராமணன் தக்ஷிணை வாங்கிக்கொள்ளுகிறான்; படிப்புக் கற்றுக் கொடுப்பதை விட்டுவிட்டான்; ஜமீன்தார் குடித்தனக்காரரைக் கசக்கிப் பிழிகிறான்; ப்ரத்யுபகாரம் கிடையாது. மேற்குலத்தார் பொதுஜனங்களின் மதிப்பை வேண்டுகின்றனர்; அதற்குக் கைம்மாறாகக் காப்பில்லை. நமது சடங்குகள் வீண் செலவு மிகுந்தும் ஸ்நேஹ வழி குறைந்தும் வேஷமாத்ரமாயின. இடையே ஜாதி முட்டுதல் பல. குருக்களின் கொள்ளை தீவிரம். ஜாதிப் பசுவுக்கு நாம் தீவனம் போடுகிறோம். அது நமக்குப் பால் கொடுப்பதை நிறுத்தி முட்டுவதை நிறுத்தவில்லை.

நம்மவர் முன்பு நாடு நடத்திய திறமையைக் காட்டிலும் வெளியார் நடத்தும் நாடு செவ்விதா அன்று என்பது விசாரணையன்று. மனிதர்கள் மரங் கல்லாக இருந்தால் அடக்கி வைப்பதே சிறந்த தொழில். ஆனால் மனிதர் ஜீவ ஜந்துக்கள். உயிரும், விருத்தியும், முன்னேற்றமும் நாடுவோர் தேசக் காரியங்களினின்று பிரித்து நம்மவரை மனமேங்க விடுதல் குரூரம்; தந்திரத்துக்கு விரோதம்.

நாம் அதிகாரம் கேட்டது தற்புகழ்ச்சிக்கன்று. பிறரைத் துன்புறுத்த அன்று. பிறர் செல்வத்தைப் பறிக்க அன்று. பெருந் தொகையான ஜனங்களைக் கொல்லப் பெருமடங்கான சக்தி ஸம்பாதிக்க வேண்டுமென்ற நோக்கத்தாலன்று. 'ஸமாதான

ஹிந்து' என்று பிறர் நம்மைக் குறிக்கும் ஏளனச் சொல்லை நாம் மகுடமாகத் தரிப்போம். நாம் ஆத்ம சாஸ்திரவாதிகளாக இருப்பது பற்றிப் பிறர் நம்மை நகைப்பதைப் பொறுத்துக் கொள்வோம். ஸ்வ தேசத்துக்கு ஸேவை பண்ண வலிமை வேண்டு கிறோம். தேசப் பொறுப்புக்களை வஹிக்கும் இயற்கை யுரிமை யில்லாமையால், முழுப் பயன் கேடாகிய இகழ்ச்சியின் துன்பங்கள் நம் நெஞ்சைத் தின் கின்றன.

இதனாலே நம் இளைஞர் சிறிது காலமாக ஜன ஸேவை'யைக் கைக்கொண்டிருப்பது காண்கிறோம். உயிரற்ற ஸமாதானமென்ற அறைக்குள் மனிதன் எக்காலத்திலும் திருப்தியுடன் அடைபட்டிருக்க மாட்டான். அபிவிருத்திக்குப் பாடுபடுதல் அவனு டைய அத்யந்த அவஸரம். தான் துன்பப்பட்டும் ஒரு கொள்கையைத் தூக்கி நிறுத்துதல் அதன் அடையாளம். எல்லாப் பெரிய தேசத்தாரின் சரித் திரத்திலும், இந்தப் போராட்டத்தின் எதிர்க்க முடியாத நதி நுரை வீசி, உறுமி, ஜயாபஜயங்களாகிய மேடு பள்ளங்களினூடே தடைகளை யெல்லாம் உடைத்துக்கொண்டு போகிறது. நம்மைப்போல் ராஜரீக பக்கவாத நோயுடையவர்களின் கண்ணிலும் சரித்திரத்தின் மஹத்தான இந்திர ஜாலம் படாத வாறு தடுத்தல் ஸாத்யமில்லை. பெரியோர் வாக்கியங் களாக ஊக்கமெய்திச் சரித்திரத்தின் பாடங்களை நன்கு கற்றவனாய் உயிரின் வேகம் நிரம்பியிருக்கு மோரிளைஞன், பிறர் கட்டாயத்தால் வேலையற்றிருப் பதைக் காட்டிலும் சாதல் நன்றெனக் கருதுவான். 'பந்தோபஸ்'தில் வைக்கப்பட்ட ஸசிந்த்ரநாத தாஸ குப்தன் தற்கொலை செய்துகொள்ளுமுன் எழுதிய மனமுருகும்படியான கடிதத்தினால் இது தெளி வாகிறது.

ஆனால் வெள்ளத்திலும், பஞ்சத்திலும் ஜனங்களுக்குதவி செய்ய இடமிருப்பது கொண்டே மனுஷ்ய ஹ்ருதயத்தின் நானாவித இச்சைகளும் திருப்தியடைந்துவிடமாட்டா. நாடோறும் மனித வாழ்க்கையில் சேரும் எல்லாவிதத் தொழில்களும் செய்ய இடங்கொடுத்தால்தான் திருப்தி பெறும். இல்லாவிட்டால் அந்த இச்சைகள் நெஞ்சுக்குள்ளேயே அழுகி விஷமுடையனவாய் தேசத்தைத் துயர்ப்படுத்தும் ரஹஸ்ய யத்தனங்களாகின்றன. ஆதலால் ஆதர்சத்தை அனுபவமாக்க விரும்புவோரின்மீதே ஸர்க்காரின் ஸம்சயம் மிகத் தீவிரமாகச் செல்லுகிறது. தன்னலமே வேண்டுவோர், தருமங் கருதாதார், சோம்பேறிகள், உதாஸீனக்காரர், இவர்களுக்குத்தான் இப்போது நடைபெறும் ரஹஸ்யப் போலீஸ் தர்பாரில் பயம் குறைவு. இவர்களே பிறருக்குழைக்கப் போனால் அதற்கு முகாந்தரம் காட்டுதல் மிகவும் சிரமமாய்விடுகிறது. அதிகாரிகள் பெரிய தோரணையுடன், “நீங்களேன் பெரிய காரியங்களில் தலையிடுகிறீர்கள்? தின்னவும், குடிக்கவும், கூடி வேலை செய்து கூலிக்குத் தக்கபடி ஸௌக்யமாகக் குடியிருக்கவும் இடம் கொடுத்திருக்கிறபோது அதோடு திருப்தியடையாமல் ஆகாச வேட்டைக்கேன் புறப்படுகிறீர்கள்?” என்று நம்மை நோக்கிக் கேட்கையில் நாம் என்ன உத்தரம் கூறுவோம்? ஆனால், அவர்கள் என்ன சொல்லியபோதிலும், விசாரணையில்லாமல் மனிதரை “பந்தோபஸ்த்” பண்ணும் இருட்டுக் குகைத் தந்திரத்தில் ஒளியில்லை; நீதியில்லை; சத்தியமில்லை; அதிலிருந்து தப்ப வழியுமில்லை. அதனை கவர்ன்மெண்டார் அனுஸரிப்பது நியாயமில்லை. தேசத்தில் மிகச் சிறந்த யத்தனத்தையெல்லாம் இப்படி விசாரணையில்லாமல் மண்ணுக்குள்ளே புதைத்தல் எளிதாம். அவற்றினின்றெழக்கூடிய பிசாசுகளைத் தூங்கப் பண்ணுதல் கஷ்டம்.

பகைவரைத் தண்டனையாலே மாற்ற முயலுதல் மதியுடைமையன்று.

இந்தக் குறைத் தந்திரம் இங்கு மும்முரமாக அனுஸரிக்கப்பட்டு வருகையிலே, இங்கிலாந்தி லிருந்து செய்தி வருவதைப் பார்த்தால் ஸ்வராஜ்யம் கொடுக்க மசோதா செய்ய யோசித்திருப்பதாகத் தெரிகிறது. தொல்லைப் பேயைத் தொலைக்கக் கொடுமை வழி நேர்மையன்று. ஜனங்களை நலம் செய்யவேண்டுமென்பதையும் அதிகாரிகள் காணத் தொடங்கிவிட்டார்களென்று நம்புகிறேன். "நான் இதில் பிறந்த காரணத்தால் மாத்திரமேயன்றி, எனது யத்தனங்களும், ஐயங்களும், இதற்கே ஸமர்ப்பணம் செய்யத் தகுந்தன. ஆதலாலும் இது என் தேசம்" என்று ஜனங்களில் ஒவ்வொருவனும் தெரிந்து கொள்ளும்படி அதிகாரிகள் உதவி புரிந் தால் மாத்திரமே ப்ரிடிஷ் ஸாம்ராஜ்யம் இந்தியா வில் நிலைபெறும். இத்தனை பெரிய தேசத்து ஜனங் களை பலஹீனராகவும், சக்திஹீனராகவும், ராஜ்ய விஷயத்தில் சிரத்தாஹீனராகவும் வைத்திருந்தால், ஆபத்துக் காலத்தில் இவர்களால் உதவி பெற இட மில்லாது போய்விடும்.—அவர்களுடைய ஜடத் தன்மையின் பாரம் பொறுக்க முடியாததாய்விடும். மேலும், மிகவும் பலஹீனமாக இருப்போரையும் நமக்கெப்போதும் எதிர் ஸ்தானத்தில் வைப்பது தோணியடியில் சிறு தொளை போலாம். காற்று சரியாக இருக்கும்வரை ஜலத்தை இறைத்திறைத்து விட்டுத் தோணியைச் செலுத்தலாம். ஆனால் புயற் காற்றில் எல்லாரும் தண்டையும் சுக்கானையும் பாயையும் கவனித்துக் கொண்டிருக்கையில் சிறிய தொளை பெருங்கேடாம். அப்போது கோபங் கொண்டு மேற்படி தொளையைப் போலீஸ் சட்டத் தடி—அல்லது சட்டமில்லாத் தடி—கொண்டு புடைப் பதில் லாபமில்லை. சிறு செலவுக்கு பயந்து சரியான

காலத்தில் இந்த ஓட்டையை அடைக்காதிருந்தால் பின்பு பெரிய செலவு நேரும். இதை ப்ரிடிஷ் தந்திரிகள் அறிந்திருப்பதாகவே தோன்றுகிறது. அதனுல்தான் ஸ்வராஜ்யத்தைப் பற்றின வார்த்தை புறப்பட்டிருக்கிறது.

ஆனுல் மனித இயல்பில் தாழ்ந்த பகுதிக்குக் கண்ணில்லை. அது நிகழ் காலத்தை மாத்திரமே கவனிக்கும், வருங் காலத்தைக் கவனியாது. உண்மையையும், தர்மத்தையும் நம்பி வார்த்தை சொல்லுதல் ஆண்மையற்ற சித்த பலக்குறைவென்று கருதும். இது ப்ரிடிஷ் ராஜ்யத்துக்குப் பகை. உயர்ந்த ஆசைகளால் தூக்கிய இறகுகளையுடையவளாய் பாரததேவி இப்பகையைப் புறக்கணிக்கிருள். இங்குள்ள ஆங்கிலோ—இந்தியன் ஸர்க்கார் உத்யோகஸ்தனுனுலும், வர்த்தகனுனுலும் தன் லாபத்தையும் அதிகாரத்தையும் விரும்புவோனுதலால், அவனுக்கு இவ்விடத்து நிலைமை கண் தெரியவில்லை. மிகவும் நெருக்கத்திலே கண் மங்கல் ஏற்படும். அவனுடைய குறுகிய பார்வையில் அவனதிகாரமே பெரிதாகவும், இங்குள்ள முப்பது கோடி மனிதரும், இவர்களுடைய சுக துக்கங்களும் துச்சமாகவும் தோன்றுகிறது. இதனுல் இந்தியாவின் ஆண்மையை உறுதி செய்யத் தகுந்த சீர்திருத்தம் இங்கிலாந்து நமக்குக் கொடுத்தாலும், அது இங்கு வருமுன் வெட்டுண்டு துண்டு துண்டாய் ரத்தமில்லாமல் வருமோ? அல்லது வரும் வழியிலே செத்துப் போமோ? இந்தியாவின் விதியாகிய பாலைவனப் பாதையிலே சிதறுண்டு கிடக்கும் பயனற்ற நல்லெண்ணங்களின் எலும்புகளுடனே இதன் எலும்புகளும் சேருமோ? என்று கருதி அஞ்சுகிறேன்.

நம்மைத் தடுக்கப் படைதரித்த ஆங்கிலோ—இந்தியன் அதிகார வெறியுடையவன். அதிகார மாமூல்

என்ற பல தட்டுக்களாலே இந்தியாவின் உயிர்த் தீண்டுதலினின்று பிரிந்தவன். அவனுக்கு இந்தியா ஒரு கச்சேரி; ஒரு கடை. இங்கிலாந்தில் நமது விதிக் குத் தலைவராகிய ஆங்கிலேயருக்கு அவன் ரக்த பந்து. அவன் கை அவர்களுடைய கையுடன் கோக் கப்பட்டிருக்கிறது. அவனிதழ்கள் அவர்களுடைய செவிப்புறத்தே இருக்கின்றன. அவர்களுடைய மந்திர ஸபைகளில் அவனுக்கு ஸ்தானமுண்டு. ராஜ்ய சங்கத்தின் பின்னே அந்தரங்க அறைக்குள் அவன் போக அனுமதியுண்டு. அவன் அடிக்கடி இங்கிலாந்துக்குப் போய், அந்த தேசத்தின் எண் ணங்களையும் மன இயல்பையும் மாற்றுகிறான். அவன் தனது நரைத்த மயிரையும், அனுபவ நீட்சியையும் காட்டித் தானே ஸாம்ராஜ்யத்தை இவ்வளவு உச்ச ஸ்தானத்துக்குக் கொண்டு வந்ததாகக் கூறித் தன் இஷ்டப்படி எல்லோரும் நடக்கவேண்டுமென்கிறான். இந்தக் கோபுரம் போன்ற கக்ஷிக்குப் பின்னே நமது சொற்களையும், ஆவல்களையும், நமது வாழ்வையும் யார் கணிக்கப் போகிறார்கள்? இந்த முப்பது கோடி ஜனங்களும் மனிதரென்ற விஷயத்தை அதிகாரி களாகிய கோட்டைச் சுவரையும் மீறிப் பார்க்கத் தகுந்த அத்தனைக் காட்சிக் கூர்மை நாம் எந்த ஆங்கிலேயனிடத்திலும் எங்ஙனம் எதிர்பார்க்க லாம்?

தூரத்திலே இங்கிலாந்திலுள்ள ஆங்கிலேயன், ஐரோப்பாவின் விடுதலைக் காற்றில் தன்னலக் குருட்டுத் தனத்தின் மோஹங்களில்லாமல், இந்தி யாவை விசாலக் காட்சியுடன் காணுகிறான். அப்படி சுத்தமான மேற்காற்றின் தூரப் பார்வைகளை யொத்த காட்சி தவறென்றும், புழுதி படிந்த தரை யோரப் பார்வையே சரியென்றும் அவனை ஆங் கிலோ-இந்தியன் எச்சரிக்கை செய்கிறான். தூரத்து

ஆங்கிலேயன் இந்தியா விஷயங்களில் சிரத்தை யெடுப்பது மானங்கெட்ட அதிகப்ரஸங்கித்தன மென்று ஆங்கிலோ-இந்தியன் நினைக்கிறான். நம்மை ஆள்வது நாம் கேள்விப்பட்ட மஹத்தான இங்கிலீஷ் ஜாதியன்று; நாம் ஒரு உத்தியோகஸ்தக் கூட்டத்திற்குக் குடிகள் என்பதை நம்மவர் அறிந்திருக்க வேண்டும். அந்தக் கூட்டம் ஸர்க்கார் கச்சேரி என்ற திராவகத்தில் ஊறப் போட்டு வைத்தமையால் நைந்துபோன இயல்புடையது. மனதிலும், ஹ்ருதயத்திலும், உயிரிலும் உண்மையான மனிதத்தன்மை யுடைய மனிதர் நம்மை ஆளவில்லை. ஒரு விசேஷ நோக்கத்தின் பொருட்டுக் கத்தரித்து முத்திரை போட்டு வைக்கப்பட்ட மனிதர் ஆளுகிறார்கள்.

புகைப்படம் பிடிக்கும் காமிரா ஒரு கருவி. அது தெளிவாகப் பார்க்கும். ஆனால் முழுதையும் பார்க்காது. நேராக முன்னே இருப்பதை மாத்திரந்தான் பார்க்கும். எனவே அது குருட்டுத்தனமாகப் பார்க்கிறதென்று கூறலாம். ஜீவக் கண்ணோ எனில் யாதேனுமொரு குறித்த நோக்கத்துக்கு முழுதும் பயன்படாவிடினும், பொதுப்படையாக மனுஷ்யரின் பரஸ்பர விவகாரங்களுக்கு உசிதமானது. எனவே நமக்குக் கடவுள் காமிராக் கண்ணாடி கொடுக்காமல் கண் கொடுத்தாரே என்று நாம் நன்றி செலுத்தக் கடவோம். இந்தியா கவர்ன்மெண்ட் விஷயத்தில் அவர் நமக்கென்ன வஸ்துவைக் கொடுத்துவிட்டா ரென்பதைப் பார்ப்போம்.

பெரிய இங்கிலிஷ்காரன் நமது விதி வசத்தால் கடலுக்கப்பாலே இருக்கிறான். இங்கு வருமுன்னே அவனை 'ராஜ்ய தந்திரம்' என்ற கத்திரியால் கத்திரித்து விடுகிறார்கள். தானும் வளர்ந்து பிறரையும் வளரச் செய்வதாகிய அம்சத்தைத் துண்டித்து அவனுடைய ஆண்மையில் முக்காற் பங்கைக்

செய்து விடுகிறார்கள். இந்தச் சிதைவுண்ட மனிதர் தமது விலை மிகுந்த காமிராக்கள் நேரே பார்க்க வில்லையென்று பிறர் சொல்லக் கேட்டு ப்ரமிக்கிறார்கள். கற்பனாசக்தியையும் இவர்கள் தமது நாட்டில் வைத்துவிட்டு வந்திருக்கிறார்கள்.

இங்கிலாந்தில் ஏழைத் தொழிற் சத்திரங்களில் உள்ள ஏழைகள் ஏன் திருப்தியில்லாமல் ஓடிப் போக முயற்சி பண்ணுகிறார்கள்? அந்தத் தொழிற் சத்திரம் வீட்டோடும் சேரவில்லை. வீடில்லாத நிறைவுமில்லை. அது நிழலை அளந்து கொடுக்கிறது. நிழல் முக்கியமான வஸ்துவே. எனினும், மனுஷ்யர் மனுஷ்யராகையால், வீடு கேட்கிறார்கள். அதாவது பூர்ண வசியமான வஸ்துக்கள் மாத்திரமேயன்றி அநவஸரமான வஸ்துக்களும் சில அவர்களுக்கு அவசியம். அவை கிடையாவிட்டால் தப்பியோட வழி தேடுகிறார்கள். அந்தத் தொழிற் சத்திரத்து 'தர்ம கர்த்தா'வுக்குக் கோபம் வருகிறது. அவன் முழு திருஷ்டியுடைய முழு மனுஷ்யனல்லன். ஏழைகளின் நன்றிகெட்ட தனத்தைச் சொல்லி வியக்கிறான். ஜீவனைச் சலிப்பிக்கும் வரம்பில்லாத ஆசையை விற்றுத் தன் சத்திரத்து நிழலில் கிடைக்கும் ஸமாதானத்தை இந்த ஏழைகள் கொள்ள விரும்பாதிருப்பதைக் கண்டு ஆச்சர்யப்படுகிறான். அவர்களுடைய துக்கத்தை தண்டனையால் அடக்க முயலுகிறான்.

பெரிய ஆங்கிலேயனுக்கும் இந்தியாவுக்கும் நேர் ஸம்பந்தமில்லை. இரண்டுக்குமிடையே சின்ன ஆங்கிலேயன் இடை நிலையாக விளங்குகிறான். எனவே, பெரிய ஆங்கிலேயன், நமக்குச் சரித்திரத்திலும் இலக்கியத்திலும்தான் காணப்படுகிறான். அவனுக்கு இந்தியா நீலப் புஸ்தகங்களிலும் கச்சேரிகளிலும் உளது. அதாவது அவனுக்கு இந்தியா ஒரு கணக்கு ஜாப்தா. அதில் இறக்குமதிகள் ஏற்றுமதிகள், வரவு

செலவு, ஜனன மரணத் தொகை, ஸமாதானத்தைப் பாதுகாக்கும் போலீஸ்காரரின் தொகை, கலக குணமுடையவர்களைத் தண்டிக்கச் சிறைச்சாலைகளின் தொகை, ரயில் பாதை நீளம், பள்ளிக்கூடங்களின் உயரம்—இவற்றின் கணக்குக் காணப்படும்.

நம்மவருக்கு நம்புதல் கஷ்டமாகத் தோன்றினாலும், யதார்த்தமாகவே பூமியில் ஒரு ப்ரதேசத்தில் மஹத்தான ப்ரிடிஷ் ஜாதி என்று நியாயப் பெயர் பூண்ட ஜாதியொன்று வாஸம் செய்கிறதென்பதை அறியும்படி எனது தேசத்தாரை வேண்டுகிறேன். பலஹீனர் பலவான்களைப் பற்றி அநியாயம் பேசுதல் அதிக பலஹீனத்துக்கடையாளம். நாம் அவ்வித பலஹீனத்தை விலக்குதல் நமக்கொரு கீர்த்தியாம். இந்தப் பெரிய ஆங்கிலேயர் எல்லாவிதங்களிலும் உண்மையான மனிதர் என்று நான் ஸத்யமாகச் சொல்லுகிறேன். மற்றப் பெரிய ஜாதியாருக்கு மஹிமை தந்த குணப் பெருமையே இந்தப் பெரிய ஆங்கிலேயருக்கும் மஹிமை தருவது. கேவலம் வாள் வலியாலும், அல்லது பணப் பைகளைக் குவித்ததனாலும் இந்த நிலைமைக்கு வந்துவிட்டார்களென்று நாம் கோபத்திலே சொல்லுதல் சரியில்லை. சண்டை அல்லது பணம் சேர்க்கும் தொழிலில் மாத்திரமே வலிமையிருந்தது கொண்டு மஹிமை பெற்ற ஜாதியார் உலகில் இல்லை. தர்ம மஹிமையாலேதான் ஜாதி மஹிமை உண்டாகிறது. வேறு விதத்தில் உண்டாகுமென்ற வார்த்தையை மேலே ருஜுக் கேட்காமல் திரஸ்காரம் புரிந்துவிடலாம். இந்தப் பெரிய ஆங்கிலேயர் நியாயம், உண்மை, விடுதலை என்ற ஆதர்சங்களை யதார்த்தமாக நம்புகிறார்கள். அவர்களுடைய இலக்கியத்திலும் இதிஹாஸத்திலும் அவை பல வகைகளில் காட்டப்படுகின்றன. இப்போது நடக்கும் போரில் இந்த ஆதர்சங்களே அவர்களுக்குப் பலம் தருகின்றன.

செலவு, ஜனன மரணத் தொகை, ஸமாதானத்தைப் பாதுகாக்கும் போலீஸ்காரரின் தொகை, கலக குணமுடையவர்களைத் தண்டிக்கச் சிறைச்சாலைகளின் தொகை, ரயில் பாதை நீளம், பள்ளிக்கூடங்களின் உயரம்—இவற்றின் கணக்குக் காணப்படும்.

நம்மவருக்கு நம்புதல் கஷ்டமாகத் தோன்றினாலும், யதார்த்தமாகவே பூமியில் ஒரு ப்ரதேசத்தில் மஹத்தான ப்ரிடிஷ் ஜாதி என்று நியாயப் பெயர் பூண்ட ஜாதியொன்று வாஸம் செய்கிறதென்பதை அறியும்படி எனது தேசத்தாரை வேண்டுகிறேன். பலஹீனர் பலவான்களைப் பற்றி அநியாயம் பேசுதல் அதிக பலஹீனத்துக்கடையாளம். நாம் அவ்வித பலஹீனத்தை விலக்குதல் நமக்கொரு கீர்த்தியாம். இந்தப் பெரிய ஆங்கிலேயர் எல்லாவிதங்களிலும் உண்மையான மனிதர் என்று நான் ஸத்யமாகச் சொல்லுகிறேன். மற்றப் பெரிய ஜாதியாருக்கு மஹிமை தந்த குணப் பெருமையே இந்தப் பெரிய ஆங்கிலேயருக்கும் மஹிமை தருவது. கேவலம் வாள் வலியாலும், அல்லது பணப் பைகளைக் குவித்ததனாலும் இந்த நிலைமைக்கு வந்துவிட்டார்களென்று நாம் கோபத்திலே சொல்லுதல் சரியில்லை. சண்டை அல்லது பணம் சேர்க்கும் தொழிலில் மாத்திரமே வலிமை யிருந்தது கொண்டு மஹிமை பெற்ற ஜாதியார் உலகில் இல்லை. தர்ம மஹிமையாலேதான் ஜாதி மஹிமை உண்டாகிறது. வேறு விதத்தில் உண்டாகுமென்ற வார்த்தையை மேலே ருஜுக் கேட்காமல் திரஸ்காரம் புரிந்துவிடலாம். இந்தப் பெரிய ஆங்கிலேயர் நியாயம், உண்மை, விடுதலை என்ற ஆதர்சங்களை யதார்த்தமாக நம்புகிறார்கள். அவர்களுடைய இலக்கியத்திலும் இதிஹாஸத்திலும் அவை பல வகைகளில் காட்டப்படுகின்றன. இப்போது நடக்கும் போரில் இந்த ஆதர்சங்களே அவர்களுக்குப் பலம் தருகின்றன.

மணலிலே கோபுரம் கட்ட முடியாதென்பதையும் மற்றவர்களுடைய பலக் குறைவின்மீது தமது பலத்தை நிறுத்த முடியாதென்றும் அறிவான்.

சிறிய இங்கிலிஷ்காரன் முன்னே அசைய மாட்டான். அவன் பல நூற்றாண்டுகளாக இந் நாட்டுடன் கட்டுண்டு இது அழுகக்கடவதென்று நிச்சயித்தவன். அவன் வாழ்க்கையிலே ஒரு முகம் கச்சேரி முத்திரை போட்டது. மற்றொரு முகம் இன்ப முத்திரை. முதல் முகம் இந்தியாவை எட்ட நிறுத்துகிறது—அதிகாரக் கோலோ அல்லது வியா பாரக் கோலோ கொண்டு. மற்றொரு முகம் சந்திர னுடைய முதுகுபோலே, நமது கண்ணுக்குப் புலப் படாது. அப்படியிருந்தும் அவன் உத்யோக வருஷங்களை எண்ணிக் காட்டித் தனக்கு அனுபவம் நீளமென்று சொல்லுகிறான். ப்ரிடிஷ் இந்திய சரித் திரத்தின் ஆரம்பத்தில் அவன் கொஞ்சம் உபகார மான தொழில் செய்தான். பிறகு சும்மா பார்த்துக் கொண்டு ராஜ்யத்திலும் வியாபாரத்திலும் நன்கு ஸ்திரப்பட்ட மேன்மையின் சுகங்களை அனுபவித்துக் கொண்டு வருகிறான். மாமூலாகிய செக்கைச் சுற்றிச் சுற்றி அதிலே மஹத்தான லௌகிக பாண்டித்ய மடைந்துவிட்டான். தன் கச்சேரி வேலையை ஸாமர்த்யமாகச் செய்வதே உலகத்தில் பெரிய செய்தியென்று நினைத்துக் கொள்ளுகிறான். எப் போதும் தன்னிலும் பலக் குறைவான ஜாதியுடன் பழகுவதால் தானே நிகழ்காலத்துக்கு நாத னென்றும், வருங்காலத்துக்கு பிரமதேவனென்றும் நினைத்துக்கொள்ளுகிறான். இப்போது தான் இங்கே யிருப்பதாகச் சொல்வது மாத்திரமேயன்றி எப்போதும் இங்கே இருக்கப் போவதாகவும் சொல் லுகிறான்.

பெரிய இங்கிலிஷ்காரனுடைய தயாள குணத்தை நம்பி நமது தேசத்தார் இந்தச் சின்ன

இங்கிலிஷ்காரனுடைய பலத்தைச் சட்டை பண்ணு மல் இவனை எதிர்த்துப் பேசத் தொடங்கி யிருக்கிறார்கள். கடவுள் கொடுக்கும் வரத்துக்குள்ள கிரயத்தைக் காட்டிலும் நாம் பூசாரிக்குக் கொடுக்கும் பரிதானத்தின் கிரயம் சில சமயங்களில் அதிகப் படலாமென்பதையும் மறக்கலாகாது இந்தப் பூசாரியின் பலத்திற்கும் குணத்துக்கும் ஸமீபத்தில் வெளிப்பட்ட சில திருஷ்டாந்தங்களை ஆராய்ச்சி செய்வோம். ஆனி பெஸன்ட் மேலே குற்றமிருந்ததாகவே வைத்துக் கொள்வோம். ஆனால் பெரிய இங்கிலிஷ்காரன் அவளை மன்னித்து விட்டான். இதைக் கண்டு சின்ன இங்கிலிஷ்காரன் சில பூகம்பங்களை ஸ்ருஷ்டித்தான். அவை போய்ப் பார்லிமெண்ட் சபைகளை அசைத்தன. க்ஷமை என்ற குற்றத்தைச் சின்ன இங்கிலிஷ்காரன் க்ஷமிக்க மாட்டான். சரியற்ற தண்டனைகளுக்கு முகாந்தரங் கேட்கவேண்டுமானால் மறந்துபோவான். தண்டனை ஏற்பட்டால் அதில் ஒட்டுவதற்கு அங்கே ஒரு குற்றம் இருக்கவேண்டும் என்கிறான். இதை ஒப்புக்கொள்ளா விட்டால் அமிதவாதி என்று சொல்லுகிறான். வைஸ்ராய் சட்டசபையில் பஞ்சாப் உதவி கவர்னர் ஹிந்து தேசத்து ஜனங்களைத் தாறுமாறாக நிந்தனை செய்தபோது, வைஸ்ராய் உதவி கவர்னரை லேசாக மட்டந்தட்டி விட்டார். சின்ன இங்கிலிஷ்காரனுக்கு அப்போதுண்டான ஜ்வரம் இன்னும் தீரவில்லை. மிஸ்டர் மான்டேகு தமது உத்யோகத்தை வஹிக்கு முன்னே இந்தியாவின் அதிகாரி வர்க்கத்தைப் பற்றிக் கொஞ்சம் வெளிப்படையான வார்த்தை சொன்னதாகப் பெரிய தூஷணையாகிய புயற்காற்றெழுந்து மிஸ்டர் மான்டேகுவின் அதிகாரம், செய்கை, சுவாதீனம் என்னும் ஸ்தூபிகளை அடித்துக் கொண்டு போய்விட்டது. லார்டு ரிப்பன் காலத்திலும், லார்டு ஹார்டிஞ்ச் காலத்திலும் இந்தச்

சின்ன இங்கிலீஷ்காரனுடைய பலத்தை நாம் பார்த்திருப்பது மாத்திரமேயல்லாமல், நெடுநாளைக்கு முன்பு லார்டு கானிங், லார்டு பென்டிங்க் காலங்களிலேகூடப் பார்த்திருக்கிறோம்.

இது கொண்டே நான் அடிக்கடி என் தேசத்தாரை எச்சரிக்கிறேன்.

"இவ்வளவு துணிபு எங்ஙனம் பெற்றீர்? உங்கள் பலத்தாலா? அன்று. உங்களுக்கு பலமில்லை. உங்கள் வாக்கினாலா? அன்று. அது நீங்கள் நினைக்கிற அளவு பெரிய ஒலியில்லை. உங்களுக்குப் பக்க பலமுண்டா? கிடையாது. உங்கள் கக்ஷி தர்மமா? ஆம். அதை நம்புங்கள். வேண்டுமென்று நாம் துன்பப்படுவதை யாவராலும் தடுக்க முடியாது. கற்பாதையின் முடிவில் ஸத்ய, தர்மங்களுக்கு ஆத்ம ஸமர்ப்பணம் செய்து கொள்ளும் மஹிமை உங்களுக்குக் கிடைக்கும். கடைசியாக உங்களுக்கேதேனும் ராஜ்யவரம் கிடைத்தால் அது உங்கள் அந்தக்கரணத்தினின்று கிடைக்கும். உங்களுக்குள்ளேயிருக்கும் ஈசனிடமிருந்து கிடைக்கும்." ஏற்கெனவே இந்தியாவுக்கு ஏதோ சீர்திருத்தம் கொடுக்கவேண்டுமென்ற வார்த்தையில் இந்தியா கவர்ன்மெண்டாரும் உடந்தைப்பட்டிருப்பதாக ஸந்தேஹப்பட்டு, ஆங்கிலோ இந்தியன் கோபச் சிரிப்புடன், "ஹோ ஹோ, இந்த கவர்ன்மெண்ட் ஏன் இப்படி மலைக்கிறது? இடியிலாகா மழை பெய்யும் தொழிலில் இறங்கத் தக்கதாக என்ன பெரிய விபத்து நேரிட்டது?" என்று விசாரணை செய்கிறான். எனினும், வெறும் பள்ளிப் பிள்ளைகளைச் சட்டவிரோதமாகிய இருட்டுக் குகைகளில் அடைத்து வைப்பது தகுமோ என்று கேட்டால் இதே ஆங்கிலோ இந்தியன், "நாங்களென்ன செய்வோம்? இவ்விடத்து விவகாரங்களின் நிலைமை பயங்கரமாக இருக்கிறது. ப்ரிடிஷ்

நீதி இங்கே தோல்வி ஒப்புக் கொள்கிறது; நாங்கள் தர்த்தாரிய உபாயங்களை அனுஸரித்தல் அவசியமாகிறது'' என்று கத்துகிறான். ஆகவே, தான் அடிக்கும்போது நாட்டில் பயத்துக்கு ஹேது உண்டென்று ஒப்புக்கொள்வோன் அந்த அடியினால் விழுந்த காயத்தை நீக்க மருந்துத் தைலம் போட வேண்டுமென்றால் காசு செலவாகுமென்பதை உத்தேசித்து, பயத்துக்கு நாட்டில் ஹேதுவில்லாமல் இருக்கையில் வீணாக ஏன் சிர்திருத்தம் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறான். அடிக்கிற தொழில் மருந்து போடுகிற தொழிலைக் காட்டிலும் அதிகச் செலவிலே கொண்டுவந்து விடுமென்று நான் சொல்லுகிறேன். உன் பலத்தை உறுதியாக நம்பி நீ ஹிந்து தேசத்தாரின் சரித்திரம் முன்னேறவில்லையென்றும் சுழித்துச் சுழித்துக் கீழே போகிறதென்றும் நினைக்கிறாய். ஒரு நாள் நீ கச்சேரியை விட்டு வெளியேறி வருகையில் நீ போட்ட கோட்டை அது கடந்து பாய்வது கண்டு, ''அதைக் கட்டு, தடு, அணை போடு'' என்று கத்துகிறாய். அப்போது அந்த ஓடை மண்ணுக்குள்ளே ஒளிந்து கொள்ளுகிறது. அதன் மறைவான ஓட்டத்தைத் தடுக்க வேண்டுமென்று நீ செய்கிற வெறி கொண்ட யத்தனங்களிலே எங்கள் தாய்ப் பூமியின் மார்பு முழுதும் கிழிபடுகின்றது.

ஸமீப காலத்தில் நானே சின்ன இங்கிலிஷ்காரனுடைய தூஷணைகளைப் பேச நேர்ந்தது. நூற்றுக்கணக்கான இளைஞரை விசாரணையில்லாமல் சிறைப்படுத்தும் கொடுமையைக் குறித்துச் சில தினங்களின் முன்னே ஒரு சிறு கடிதம் எழுதினேன். உடனே நான் பொய்கள் பரப்புவதாகச் சொல்லி ஆங்கிலோ இந்தியப் பத்திரிகைகள் எனக்கு அமிதவாதி என்ற பட்டம் சூட்டின. அந்தப்

பத்திராதிபர்கள் கேவலம் சாமான்ய உடை தரித்த கவர்ன்மெண்ட் உத்யோகஸ்தரேயாதலால், அவர்கள் சூட்டும் அடைமொழிகளை க்ஷமிக்கிறேன். எனது கவிதையில் பொருளில்லை யென்றும் என் வசனத்தில் ஸாரமில்லை யென்றும் கருதுகிற என் ஸ்வதேசத்தார் கூட எனது லிகிதங்களைப் படித்திருப்பின், முன்பு ஸ்வதேசியக் கலகத்தின் கால முதலாக இன்றுவரை நான் அமித வாதத்தைக் கண்டித்திருக்கிறேன் என்பதை அறிவார்கள். நான் எப்போதும் இந்த ஒரு வார்த்தை இடைவிடாமல் சொல்லிக் கொண்டு வருகிறேன். யாதெனில்: பாவம் பண்ணின கூலி கடைசி வரை நற்பலன் தராது. பாவக் கடன் நாளாக நாளாக அதிகச் சுமையாய்விடும். தவிரவும், எழுது மை கொட்டி வைவோர் இந்தியராயினும் ஆங்கிலேயராயினும் அவர்களுக்கு நான் பயப்படுகிற வழக்கம் கிடையாது. யோக்யதையுமின்றிச் சட்டத்துக்கும் விரோதமாய் பகிரங்கமில்லாமல் ஒரு காரியத்தை சீக்கிரத்திலே ஸாதனை செய்துவிட வேண்டுமென்று ரஹஸ்யக் கோணல் வழிகளிலே நேர் வழியை விட்டுப் புகுதலாகிய அமிதவாதத்தை நான் எப்போதுமே கண்டனம் புரிவேன். இதை நான் முழு நம்பிக்கையுடன் மாறாமல் சொல்லி வருகிறபடியால், அதற்கு ஸமான்யமான உறுதியுடன் கவர்ன்மெண்டார் இந்த அமிதவாதக் கொள்கையை ஒரு ராஜ்ய தந்திரமாக அனுஸரித்தலும் பெரிய குற்றமென்பதை உரைக்கிறேன். ஒரு நோக்கத்தை அடைவதற்கு சட்ட ரஸ்தா குறுக்கு வழியில்லாமல் சுற்று வழியாகப் புலப்படலாம். ஆனால் பெல்ஜியம் தேசத்தின் ஸ்வதந்த்ரங்களின்மேல இரும்புச் செருப்பு மாட்டி நடப்பது போலே நேர் வழியைக் குறுக்கும் அமிதவாதம் எப்போதும் கண்யமன்று.

புராதன சரித்திரத்தில் குறுக்கு வழி ஸ்தூலமாக அனுஷ்டானத்திலிருந்தது. விவகாரங்களைச்

ஒர்கருக்க வேண்டுமானால் :—'இன்னானுடைய தலையைக் கொண்டு வா' என்று சொல்லி விடுவார்கள். ஆனால் சிரமமான முடிச்சை அறுப்பதைக் காட்டிலும் அவிழ்ப்பது நல்லதென்றும் அறுப்பதில் கஷ்டங்களுண்டாகுமென்றும் தான் கண்டுபிடித்திருப்பதாக ஐரோப்பா தற்புகழ்ச்சி பேசிக்கொள்ளுகிறது. தொல்லையும் கலகமுமாக இருக்கும் காலங்களிலும் நாகரிகமானது செலுத்தவேண்டிய கடமைகள் உள. அவற்றைப் புறக்கணிக்கக் கூடாது. எல்லாவிதமான தண்டனையிலும் மிருகத்தனம் இருக்கத்தான் செய்கிறது. அதை நாகரிக ஜனக் கூட்டத்தில் கையாளுமுன்னே, சட்டம் என்ற சல்லடையால் வடிகட்டி எல்லாவிதமான கோபம், பகைமை, பக்ஷபாதம் இல்லாதபடி செய்தல் மரபு. இல்லாவிட்டால் நியாயாதிபதியின் கோலுக்கும் திருடன் தடிக்கும் சரியானபடி வேற்றுமை தெரியாமல் போய்விடும். இந்தக் காலம் சிரமமான காலமென்பதை நான் அங்கீகரிக்கிறேன்; தேசம் அபிவிருத்தியாவதில் ஏற்படும் தடைகளை நீக்க நமது வாலிபரில் சிலர் அனுஷ்டிக்கும் முறைமை நமக்கு வெட்கந்தருகிறது. மேற்குத் திசையாரிடமிருந்தே நியாயத்தையும் ஸௌகர்யத்தையும் பிரிக்கும் வழி நாம் கற்றுக் கொண்டோம். ஆதலால் மேற்படி காரியத்தில் அதிக வெட்கப்படுகிறோம். ராஜ்ய தந்திரத்தின் பஹிரங்கப் பொய்களும், ரஹஸ்யப் பொய்களும், பஹிரங்கக் கொள்ளைகளும், ரஹஸ்யக் கொள்ளைகளும் பொன்னில் மாற்றுக் கலப்பதுபோலே பொன்னுக்குப் பலமென்று மேற்குத் திசையார் கருதுகின்றனர். ஆதலால் தேச பக்தியின் ஸ்வார்த்தம் ஒரு வழி காட்டும்போது, தர்மம் வந்து அதைத் தடுத்துத் தொந்தரவு செய்ய இடங்கொடுத்தல் மடமை யென்றும் பலஹீனத்துக்கு அடையாளமென்றும் நமக்குக் கற்றுக் கொடுத்தனர். மேலும்

நியாயத்தை ஸெளகர்யத்தால் மெருகு பண்ணிக் கொள்ள வேண்டுமென்றும் நாகரிகத்தை அநாகரிகத்தால் கொஞ்சம் கெட்டியாக்கிக்கொள்ள வேண்டுமென்றும் நமக்கு நம்பிக்கை உண்டாயிற்று. இதனால் நாம் அதர்மத்தை ஸஹிப்பது வழக்கமாய்விட்டது மாத்திரமேயன்றி நம்மை யாள்வோரின் அனுசித அம்சங்களைக் கண்டு வணங்கும்படியாகவும் நேர்ந்து விட்டது. நமது வாத்தியார்களுடைய படிக்கு மேற்படியிலே நின்று :—"அதர்மத்தால் மனிதன் ஏறுகின்றான் ; அதனால் நலங்கள் காண்கிறான் ; அதனால் எதிரிகளை அழிக்கிறான் ; அதனால் பின்பு தானே வேருடன் கெடுகிறான்" என்று முழங்கும் தைரியத்தை இழந்துவிட்டோம்.

மேற்குத் திசையின் உபதேசங்களுக்கு முன்னே நம்முடைய ஆதர்சங்கள் இத்தனை பரிபூர்ணமாகத் தோல்வி யொத்துக்கொண்டது தவறென்று நான் சொல்லுகிறேன். தேச பக்தியாகிய விளக்கு நம்முள் எரியத் தொடங்கிய காலத்தில் நம்முள்ளே இருக்கும் அதிக உத்தம அம்சங்கள் ஜோதி பெற்றுத் திகழும் என்ற உயர்ந்த ஆசைகள் கொண்டிருந்தோம். பல நூற்றாண்டுகளாக நம்மிடையே சேர்ந்த பிழைக் கூட்டம் இருள் மூலையை விட்டோடிப் போமென்றும், நமது நிராசையின் கற்றரையில் ஆசையூற்றுத் தோன்றுமென்றும், நம் எதிர்காலத்தின் நிராசை வெளியில் நம் ஊக்க விழிப்புகளால் ஒரு பாதை புலப்படுமென்றும், நம்முடைய ஆண்மையை நசுக்கிப் பழிக்கிடமாகிய குரூரமான ஜாதியாசாரங்களினின்றும் பரஸ்பர அன்பினால் விடுபட்டு முடி தூக்கித் தோள் கோத்து நிற்போமென்றும் எதிர்பார்த்தோம்.

ஆனால் விதி நம்மைப் பரிஹாஸம் செய்கிறது. தேசபக்தி விளக்குக் கொளுத்துண்டது. ஆனால்

அதில் களவும், கொள்ளையும், ரஹஸ்யக் கொலையு மாகிய இதுவென்ன காட்சி! நாம் புகழ்ந்து பாடின தெய்வம் வந்து முன்னே நின்றால் அதற்குப் பாவத்தை நைவேத்யம் பண்ணலாமோ? ஆரம்பத் தில் ராஜ்யப் பிச்சை கேட்பதே ஸர்வ க்ஷேமத்துக்கும் ஆதாரமென்று நம்பி நம்மை விண்ணப்பம் எழுதும் தொழிலில் ஸமர்த்தர்களாகச் செய்து கொள்வோ மென்று நினைக்கும்படி தூண்டிய சக்தி ஹீனமும், சோம்பரும், நம்பிக்கைக் குறையுமே இப்போது கிருத யுகத்தை விரைவுபடுத்த நாடி ராஜ்யக் குற்றம் செய்யும்படி தூண்டுகின்றன அன்றோ? கொள்ளையும் வீரமும் சந்திக்கமாட்டா. ஐரோப்பாவில் அப்படிப் பட்ட சந்திகள் இருப்பதாகத் தோன்றலாம். ஆனால் தெய்வத்தின் சோதனையில் அந்த ரஸ்தா சரியான தென்று இன்னும் அங்கிகாரம் செய்யப்படவில்லை. உடனே கிடைக்கும் லாபமே ஸகல தர்மங்களிலும் பெரிதென்று பூமி முழுதும் உரைத்தாலும் இந்தியா அக்கொள்கையில் சேராதிருக்க வேண்டுமென்று தெய்வத்தை வேண்டுகிறோம். அநீதியில்லாமல் நாம் ராஜ்ய விடுதலை பெறக் கூடுமாயின் நன்று. இல்லா விடில் ராஜரீக அஸத்யங்களால் பெரிய விடுதலையின் வழியை அசைக்காமலாவது சும்மா இருப்போம்.

ஆனால் ஒரு ஸங்கதி நாம் மறக்கக்கூடாது. நமது தேசபக்தியின் உதய ஒளியில் கொள்ளையும் கொலையும் கண்டோம். வீரத்தையும் கண்டோம். ஆத்மபரித்யாகத்தின் தேச சக்தி இன்று நம் இளைஞ ரிடத்தே சுடர்விட்டெரிவதுபோல் என்றும் எரியக் கண்டதில்லை. ஆச்சர்யமான பக்தியுடனே உலக சுகங்களையெல்லாம் உதறியெறிந்துவிட்டு ஸ்வதேசத் தொண்டு புரிய ஓடி வருகிறார்கள். அந்தத் தொண் டினால் அவர்களுக்குப் பண லாபம் கிடையாது; ஸர்க்கார் தயவு கிடையாது; சில ஸமயம் பந்து

மித்திரருடைய விரோதம் உண்டாகிறது. இந்தக் குறுகிய கஷ்டமான பாதைமீதில் யௌவன யாத்ரிகர் குறைவின்றிச் செல்வதையும், வானத்திலிருந்து தேச பக்திக்கு வா என்று சத்தம் கேட்டவுடனே இவர்கள் தக்ஷணமே சரியென்று வந்ததையும் கண்டு என் உள்ளம் பூரிக்கிறது. தேசத்துக்கும் மனுஷ்ய ஜாதிக்கும் தொண்டு புரியப் பல துறைகள் விரிந்து கிடக்கும் மற்ற அதிர்ஷ்டமுள்ள தேசங்களில் இந்த மாதிரி அலௌகிகமான, கற்பனைசக்தியுடைய, மனவுறுதி கொண்ட, தன்னலமறியாத பிள்ளைகள் தேசத்துக்குப் பெருஞ் செல்வமென்று கருதப்படு கிறார்கள்; பந்தோபஸ்த் வைக்கப்பட்ட ஸசீந்திர னுடைய கடைசிக் கடிதத்தை வாசித்துப் பார்த் தால் அவன் தன்னை தண்டனை புரிந்த ஆங்கிலேயரின் தேசமாகிய இங்கிலாந்தில் பிறந்திருந்தால் அற்புத மான வாழ்க்கை வாழ்ந்து அதனிலும் அற்புதமாக மடிந்திருப்பானென்பது விளங்கும்.

விஸ்தாரமான ஒரு தேசத்திலுள்ள இளைஞரின் ஆண்மையை முழுதுமே நசுக்கி, அந்த தேசத்தை நான்கெல்லையிலும் பக்கவாத நோய் கண்டது போலே செய்துவிடும் திறமை பண்டைக் காலத் திலும் இக்காலத்திலும் அரசருக்கும் அவர்களுடைய ஸேவகருக்கும் உண்டு. அது மிகவும் சுலபம். ஆனால் அது நாகரிகமில்லை; எனக்குத் தெரிந்தவரை ஆங்கி லேயர்க்குரியதன்று குற்றமறியாத மஹான்களை ஆயுள் முழுமைக்கும் காலை ஒடித்துப் போடுவதும், ஒரு பெரிய பக்தியின் க்ஷணிகத் தவறுதலால் வீழினும் கொஞ்சம் கைகொடுத்துதவினால் மறுபடி எழுந்து நேர் வழிக்கு வரச்கூடியவர்களை ஜன்ம முழு துக்கும் பயன்படாதபடி செய்வதும் மனித உயிரைக் குரூரமாக அழித்தலாகுமன்றோ? இப்படிப்பட்ட இளைஞரையும் பிள்ளைகளையும் ரஹஸ்யப் போலீ

[illegible] வயலின் கீழே விட்டுவைக்கும் ராஜ்ய தந்திரத்தின் புத்தி இருந்தபடி என்னே! இது மேன்மையான தாலிய முளைகளின்மீது இரவு வேளையில் எருமைக் கூட்டத்தை மேய்ப்பதற்கு ஸமானம்; வயலின் உடையான் மார்பைப் புடைத்துக்கொள்ளுகிறான்; எருமைகளை ஓட்டுவோன் கொஞ்சம்கூடக் கலை மிச்சமிராதென்று சொல்லி மகிழ்ச்சியடைகிறான்.

இந்த விபத்தை இன்னும் அதிகமாக்கும் செய்தி யாதெனிலோ, போலீஸ் கடிபட்ட செடி அப்புறம் நேரே வளராது. அதில் பூவும் கனியும் தோன்றா. போலீஸ் ஸ்பர்சத்திலே விஷம் இருக்கிறது. எனக்கொரு பையனைத் தெரியும். அவன் புத்தி மிகவும் கூர்மையானது; படிப்பில் மிகுந்த அக்கறையுள்ளவன். அவனுடைய குணமோ மிகவும் பெருந்தன்மையானது. அவனைப் போலீஸார் தொந்தரவு பண்ணிப் பின் விட்டார்கள். இப்போது அவன் தன் இளமையின் வஸந்த காலத்திலே பெர்ஹாம் பூரில் ஒரு பைத்திய வைத்திய சாலையில் இருக்கிறான். அவனால் ப்ரிடிஷ் கவர்ன்மெண்டாருக்கு எவ்விதமான தீங்கும் நேரிட்டிராதென்றும், நமது தேசத்துக்கு எவ்வளவோ நன்மை விளைந்திருக்குமென்றும் நான் ஸத்யம் பண்ணுவேன்.

சிறிது காலத்துக்கு முன்பு என் "சாந்தி நிகேதனம்" என்ற பாடசாலையில் படிக்கும் பிள்ளைகள் பரீக்ஷைக்காக வீர பூமி என்ற ஊரிலுள்ள ஜில்லாப் பள்ளிக்கூடத்துக்குப் போனார்கள். அப்போது போலீஸார் வந்து அவர்களுடைய பெயர்களைப் பதிந்து கொண்டனர். அந்த இளைஞரின் மனம் சோர்வடைந்து போக அவ்வளவு செய்தால் போதாதா? போலீஸ் ரஹஸ்யப் பதிவுகளில் என்ன

எழுதி வைத்தார்கள். யார் கண்டார் ? அவர்களுடைய திருட்டு வழிகளின் நோக்கத்தை யாராலே கண்டுபிடிக்க முடியும் ? பாம்பு கடித்த பழத்தை யார் தின்பார்கள் ? அதுபோல போலீஸ் ஸம்சய மாகிய களங்கத்துக்குட்பட்ட மனிதனுடன் எவனும் பழக விரும்புவதில்லை. விவாகமாகாத பெண்ணை வைத்துக்கொண்டு அவளை எப்படியேனும் கழித்து விட வேண்டுமென்ற நோக்கத்துடன், குரூபியாக இருந்தாலும், பாதகனானாலும், கிழவனானாலும், நோயாளியானாலும், எதையும் கவனியாமல் பெண்ணை யாரேனும் ஒருவனுக்குத் தள்ளிவிட ஆயத்தமாக இருக்கும்—நிராசைக்கோர் இலக்கிய மாகிய—வங்காளித் தந்தைகூட அவனுக்குப் பெண் கொடுக்க உத்தேசிக்கமாட்டான். ஒரு காலத்தில் போலீஸ் ஸந்தேகத்துக்குட்பட்டவன் வியாபாரம் செய்யப் போனால் அது தோற்றுப் போகிறது. அவன் நம்மிடத்தில் வந்து பிச்சை கேட்கும்போது நமக் கிரக்கம் உண்டாகிறது. அவனிடமுள்ள பயத்தை மாற்ற முடியவில்லை. அவன் ஏதேனும் நல்ல காரியத் திலே சேர்ந்தால், அந்தக் காரியம் அபஜயம்.

இந்தப் பயங்கர இலாகாவின் அதிகாரிகள் கேவலம் சதையும் ரத்தமுமுடைய மனிதர். கோப தாபாதிகளையும் அலைவையும் வென்ற முனிவ ரல்லர். நாம் மன அதிர்ச்சியிலும் பயத்திலும் நிழலை உண்மையென்று நினைப்பதுபோலே அவர்களும் நினைக்கிறார்கள். எல்லாரையும் ஸம்சயிப்பதே அவர் களுடைய தொழிலானதையால், அவநம்பிக்கை அவர் களுடைய குணத்தில் ஊறிப்போய் விடுகின்றன. சொற்ப ஸந்தேஹத்தை வைத்துக்கொண்டு வேலை செய்தல் அவர்களுக்கு இன்பமான வழியாகிறது. மேலே இருந்து அவர்களைத் தட்டி விடுவாரில்லை. அக்கம்பக்கத்தார் பதறி வாய் பேசாதிருக்கிறார்கள்.

அவர்களுக்குப் பின்னே நிற்கும் சின்ன இங்கிலீஷ்காரன் கவனியாமல் இருக்கிறான்; அல்லது அவர்களைத் தாண்டி விடுகிறான். இயற்கையன்பில்லாமையுடன், கோபமும் பயமும் வந்து சேர, வரம்பற்ற அதிகாரமும் அதில் கூட, இவற்றுடன் ரஹஸ்ய வழிகளையும், மூச்சைப் பிடிக்கும் சட்டங்களையும் வைத்தால் அந்த இடத்தில் சரியான நியாயமும் தர்மமும் கிடைக்குமென்று அந்தச் சின்ன இங்கிலீஷ்காரன்தான் எப்படி நம்பமுடியும்? அவன் அங்ஙனம் நம்பவில்லையென்பது எனக்கு நிச்சயம். கலகத்தை அடக்க இது சுலபமான வழியென்று நம்பியே இதுவெல்லாம் செய்கிறான். ஜெர்மனியிலும் இங்ஙனமே சின்ன ஜெர்மன் பெரிய ஜெர்மனைக் கீழே தள்ளி மேலே நிற்கிறாகையால் உடன்படிக்கைகளைத் திரஸ்காரம் பண்ணுதலே யுத்தம் ஜயிக்க சுலபமான வழியென்று கணிக்கலானார்கள். "தலையைக் கொண்டு வா" என்று சொல்லும் ராஜ்ய தந்திரம் சிறிது காலம் உதவும். எக்காலத்துக்கும் உதவாது. எக்காலத்துக்கும் உபயோகப்படக்கூடிய உபாயம் யாதெனில் பெரிய இங்கிலீஷ்காரரால் அடிக்கடி போராடிக் காக்கப்படும் உபாயம். அந்த உபாயத்துக்கு மாறான எதிர்த் தந்திரத்தை இன்று ஜெர்மானியர் கையாளுவதில் மிகவும் வெறுப்பெய்தினபடியாலேதான் அனேக யௌவனமுள்ள பெரிய இங்கிலீஷ்காரர் யுத்த களத்தில் ஆயிரக்கணக்காக உயிர்ப்பலி கொடுக்க விரைந்து செல்லுகின்றனர்.

எனது சாந்தி நிகேதனப் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் மனுஷ்ய ஜாதியின் சரித்திரத்தை விசாலமாகவும், ஜாதி விரோதமில்லாமலும் பொதுப்படையாகத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று நான் மிகவும் ஊக்கத்துடன் பாடுபட்டு வருகிறேன். இந்த நோக்கத்தை மனதில் கொண்டு, யோக்யரான

ஆங்கிலேயர் இந்தக் காரியத்தில் ஆத்ம ஸமர்ப்பணம் செய்ய முற்பட்டபோது, நான் அவர்களை யோசனையில்லாமல் ஏற்றுக் கொண்டேன். ஆனால் அந்தப் பாடசாலை நடத்தும் எங்கள் நிலைமை ஸஹஜத்துக்கு மாறுபட்டு நிற்கிறது. எங்கள் தற்கால நம்பிக்கையும் எதிர்கால நம்பிக்கைகளும் மிகவும் குறுகி நிற்கின்றன. எங்களுக்குத் தகுந்த தூண்டுதலும், ஸௌகர்யமும் இல்லாதபடியால் எங்களுக்குள்ளே உறங்கும் சக்திகளை நேரே எழுப்பிவிட வழியில்லை. எங்களுடைய தொழிற் களம் வரம்பு பட்டது. எல்லா அதிகாரமும் கவுரமும் நாட்டிலே கொண்டு நிற்கும் அதிகாரிகள் அதில் அன்பில்லாதவராக இருக்கிறார்கள். ஆதலால் எங்கள் தொழிற் பயன்கள் குறுகி உலகத்துச் சந்தைகளில் அதிக விலைமதிப்பில்லாது போகின்றன. எங்களை அதிகப் பள்ளத்தில் அழுத்த மறுபடி அதனையே ஒரு காரணமாகவும் கொண்டு வருகிறார்கள். இதனால் எங்களுடைய ஜீவன் சோர்ந்து போகிறது. எனவே பெரியோரால் புகழப்படுவதாகிய பெரிய விடுதலை—அதாவது, மனிதன் தனது இரு குணங்களினின்றும் விடுபடுதல்—இந் நாட்டில் யாராலும் மதிக்கப்படவில்லை. இருந்தாலும் சாந்தி நிகேதனப் பள்ளிக்கூடத்தில் நாங்கள் படும் பாடெல்லாம் முழுதும் வீணாகவில்லையென உறுதி கூறுகின்றேன். ஏனென்றால், நமது வழியிலுள்ள தடைகள் எத்தனை பெரியன ஆயினும், நமது நாட்டாரின் கண்முன்னே பரம ஸத்யத்தைக் காட்டினால் அதை அவர்கள் முழுதும் புறக்கணிக்க மனங் கொள்ளார். நமது பாடசாலைப் பிள்ளைகளில் மிகவும் புதியவர்கூட அங்ஙனம் செய்யார். இந்த அம்சமொன்று நமது குணத்தில் இருப்பதைப் பஞ்சாப் லெப்டினண்ட் கவர்னரும் நானும் ஒருங்கே அங்கீகாரம் செய்து கொள்ளுகிறோம்.

ஆனால் சில சமயங்களில் மிகவும் பயங்கரமான சிரமம் உண்டாகிறது. எங்களிப் பிள்ளைகளில் மகா சாதுவான பிள்ளைகள்கூட உயர்ந்த போதனைகளை எதிர்த்து நடக்கும்படியாகச் செய்திகள் தோன்றுகின்றன. ஒரு பக்கத்தில் கீழ்மைக் குணம் ஏற்பட்டால் இது எதிர்ப்புறத்திலும் கீழ்மைக் குணத்தைத் தூண்டுமன்றோ? எங்கள் சாந்தி நிகேதனப் பள்ளிக்கூடத்தில் இரண்டு சிறுவருண்டு. அவர்களுடைய தாய் தந்தையர் கொஞ்சம் பணக்காரர். சம்பளம் சரியாகச் செலுத்திக்கொண்டு வந்தனர். சிறிது காலத்துக்கு முன்பு ஒரேயடியாக அந்தக் குடும்பத்தில் மூன்று பேரைப் பிடித்துப் போலீஸார் பந்தோபஸ்த் பண்ணிவிட்டார்கள். பிள்ளைகளுக்கு மேலே வாசிப்புச் செலவுக்குப் பணமில்லை. பள்ளிக்கூட நிதியிலிருந்து பணம் கொடுத்து அவர்களைக் காப்பாற்றுகிறோம். அச் சிறுவர் தம் நிலையின் இகழ்ச்சியை உணர்கின்றனர். வீட்டாருடைய கஷ்டங்களை நினைத்தும் வருந்துகிறார்கள். தந்தைக்குப் பந்தோபஸ்திலிருக்கும்போதே முறைக் காய்ச்சல் வந்துவிட்டது. அவனைச் சற்றே ஸௌக்ய மான இடத்தில் அடைத்து வைக்கும்படி தாய் பகிரதப் பிரயத்தனம் செய்தும் பயனில்லை. இவையெல்லாம் கூடி அந்தக் குழந்தைகளின் மனதைத் தொல்லைப்படுத்துகின்றன. இதைப்பற்றி அவர்கள் வாய் திறந்து ஒன்றும் சொல்வது கிடையாது. நாங்கள் அவர்களிடம் இந்த விஷயத்தைக் குறித்துப் பேசுவதில்லை. எனினும் அவர்கள் முன்னே நியாயம், நீதி, ஸர்வ ஜன அன்பு முதலிய விஷயங்களைப் பேசும்போது ஏதோ என் தொண்டைக்குள்ளே வந்து அடைக்கிறது. இந்த வேதாந்தப் புரட்டுகளைப் புறக்கணிப்போராகிய பஞ்சாப் உதவி கவர்னர் போன்றவர்களின் முகங்கள் என் விழிக்கெதிரே வந்து கேலிக் கோபம் பூண்டு நிற்கின்றன. இங்ஙனம்

இந்தப் போராட்டத்தில் இங்கிலாந்தாரின் கிழக் குளங்களின் மீது பொருள்கள் பறக்கின்றன. வங்காள முழுதிலும் கஷ்டத்தை உள்ளே அமுக்குகிறார்கள். உள்ளே போய் ஒழுக்கத்தை மாற்றும் சாதகப் பொருளாக அது பரிணமிக்கிறது. முழுமுழுக் குடும்பங்களின் ஒற்றுமைக்கு உத்தேசமாகிய மேக மண்டலத்திலிருந்து போடும் வெடி குண்டுகள் குழந்தைகளையும், ஸ்திரீகளையும் அழிக்கின்றன. அடடா! இந்த யுத்தத்தில் குழந்தைகளையும் பெண்களையுமாவது போர் செய்யத் தகாதோர் என்று கருதி அதிகாரிகள் கட்டமா விடலாகாதா?

இந்த விஷமமான ஸங்கடத்துக்கு மூலம் யாதென்று கேட்பீராயின் உடனே சொல்லுகிறேன்: ஸ்வராஜ்யம் நமக்கில்லாமையே மூலம். அவ்வளவு தூரம் நாம் ஆங்கிலேயருக்கு அன்னியர். ஒரு ஆங்கிலேய வித்வான் தனது யாத்திரைகளைப் பற்றி எழுதுகையிலே இந்திய தேசத்தாரைக் காட்டிலும் சின ஜப்பானியர்கூட ஆங்கிலேயருக்குச் சற்றே ஸமீபம்போல் தோன்றுவதாகச் சொல்லுகிறான். நமது வேதாந்தம் நடுவே நிற்கிறதாம்! அந்த வியாதி தனக்கு வரவே வராதென்று பரிடிஷ்காரன் சொல்லு கிறான். மனுஷ்யனுக்கு மனுஷ்யன் இதைக் காட்டிலும் அதிக வேற்றுமை கொள்ளுதல் அரிதன்றோ? மேலும், அவர்களுக்கு நம்முடைய பாஷை தெரியாது. அவர்கள் நம்முடன் ஸாதாரண காலங்களில் பழகுவதும் கிடையாது. இருதிறத்தாருக்குமிடையே இத்தனை பெரிய தூரம் இருக்கையிலே, அதனைக் கடக்கும் புத்தியோ மிகவும் சொற்பம். ஆதலால் ஜாக்ரதையும் ஐயமுமே ஏக நீதியாக இயல் பெறு கின்றன. கவுரவ ஒற்றத் தொழில் செய்வதனால் விரைவிலே பதவி உயரலாமென்று நினைக்கிற ஸ்வகார்ய துரந்தரரான கபடிகளாலே பரப்பப்படும்

விஷம் ஆட்சி முழுமையும் புகுந்து கெடுக்கிறது. பிறர் தயவைக் காட்டிலும் தன் மதிப்பே மேலென்றும், தங்கள் நலத்திலும் தேச நலம் உயர்வென்றும் கருதுவோர் ஸர்க்கார் சம்பந்தங்களினின்றும், போலீஸ் இடங் கொடுக்குமளவு, இயன்றவரை, எட்டி நடக்கிறார்கள்.

போலீஸ் சேர்க்கையினாலே களங்கமுற்றதாய்க் கால் விரல் மீது நின்றும், நிழல்களை ஐயத்துடன் நோக்கியும், மறைவில் பதுங்கியும் நடத்தல் ஸம்பிரதாயமான வட்டத்தில் பழகும் அதிகாரியின் வழக்கமான சந்தேகம் கடைசியில் கொடுஞ் செய்கையாகப் பரிணமிக்காதவண்ணம் தடுக்கத் தகுந்த கருவி எதனையும் காணோம்.

அவனுக்கு நாம் கேவலம் "ஆளப்படுவோர்!" எனவே நமது வீடுகளில் தாய் அழ, ஸஹோதரன் நடுங்க, மனைவி தற்கொலை செய்து கொள்ள குழந்தைகளுக்கு போஷணையும் கல்வியும் இல்லாமல் போக, நாம் பல வருஷங்கள் தேசாபிமானத்துடன் பாடுபட்டு வளர்த்த முயற்சிகள் ரஹஸ்யப் போலீசாரின் செய்கையால் புழுதியாக நொருங்கிப் போக—இங்ஙனம் நாம் கஷ்டப்படுவதனால் அந்த அதிகாரிக்கு போஜனத்தில் ருசி குறையவுமில்லை. அவன் தூக்கத்துக்கும் ஹானி கிடையாது. சீட்டாட்டத்தில் அவனுக்குள்ள ஆவல் மாறுபடவுமில்லை. நான் இதைக் கோபத்துடன் சொல்லவில்லை. இப்போதுள்ள நிலைமைகளை உத்தேசிக்க இதுவெல்லாம் ஸஹஜந்தான். அதிகாரி வர்க்கம் மெய்யான உலகத்துடன் விவகாரங்கள் நடத்துவது வழக்கமில்லை. தன் கற்பனை விதிகளால் ஏற்படுத்தப்பட்ட கற்பனையுலகத்துடனேதான் விவரிக்கிறார்கள். விடுதலையுள்ள தேசங்களில் அதிகாரிக் கூட்டம் இட முழுவதையும் கவரும்படி விடுவதில்லை, இடையே

துவாரங்கள் உள. அவற்றின் வழியே ஜனங்கள் அபிவிருத்தி பெற முடியும். சார்பு நாட்டில் அப்படிப்பட்ட துவாரங்கள் இல்லாதபடி அக்கூட்டத்தார் செய்து விடுகிறார்கள்.

நாம் வெளி வானத்தில் இடம்பெற நாடி முயற்சி செய்தால், மேற்படி வர்க்கத்தின் கிளைகளில் சூறுவளியடித்ததுபோல இலைகளின் நுனி வரை சலசலப்புண்டாகிறது. அதனால் நமக்கும் அசாந்தியுண்டாய் மேற்படி கிளைகளின் புடைப்பில் உடைந்து போவதைக் காட்டிலும் காற்றடிக்கும் வழியைத் தேடாதிருத்தலே நல்லதென்று கருதுகிறோம். எனினும், இங்கே எனது முதல் வார்த்தையும் கடைசி வார்த்தையும் ஆகிய முக்யமான விஷயத்தைச் சொல்லி விடுகிறேன். இயற்கையற்றதைத் துப்பாக்கி முனையிலேயே ஸமநிலையில் நிறுத்திவைக்கும்படி அத்தனை பலமுடைய ஜாதி உலகத்தில் எதுவுமில்லை. கனம் அதிகப்படுகிறது. தசைகள் சுழலுகின்றன. தூக்கி நிறுத்தப்பட்ட அஸம்பாவிதங்களையெல்லாம் பெரிய பூமியின் ஆகர்ஷண சக்தி தரைக்குக் கொண்டு வருகிறது. அரசாட்சியின் இயல்பு யாதாயினும் ஆளப்படும் ஜனங்களுக்கு அது உத்தரவாதியாக இருக்க வேண்டும். அப்போது அவர்கள் அதைத் தமதாகக் கருதி உண்மை செலுத்துவார்கள். தமக்கு ஸம்பந்தமில்லாத பொறுப்பற்ற, புறத்து ஸர்க்காரிடம் ஜனங்களுக்குள்ள உதாஸீனம் அஸூயையாகத் தாமும் அதை வலிமையினால் அடக்க விரும்புவோர் விரோதமாக மாற்றுகிறார்கள். இங்ஙனம் விவகாரம் மிகவும் சிக்கலாகிறது.

கால சக்தியின் தூதாக ப்ரிட்டிஷ் ஜாதி இந்தியாவுக்கு வந்தது. ஒவ்வொரு காலத்திலும் மனுஷ்ய ஜாதி கற்றுக்கொள்ளும் பெரிய உண்மை

ஞானமாகிய செல்வம் உலகத்து நாடுகள் அனைத்திலும் யாதேனுமொரு ரூபத்தில் பரவுதல் இன்றியமையாதது. இந்தச் செல்வத்தைச் சுமப்போர் பரப்புவதிலே லோபம் காட்டுதல் நம்பிக்கைத் துரோகமாகும். அப்போது அவர்கள் தெய்வ சிந்தைக்கு விரோதம் செய்து துக்கத்தைப் பரப்புகிறார்கள். எனினும் அவர்கள் ஒளியை ஒரு மரக்காலுக்குள்ளே மூடி வைத்தல் ஸாத்யப்படாது. அவர்கள் கொடுக்கும்படி ஆக்கினை பெற்றதைக் கொடுத்தே தீரவேண்டும். தானத்தின் கர்த்தா காலம். அவர்கள் கேவலம் காலத்தின் கருவிகள். அவர்கள் தமது சரித்திரத்தின் ஒரு பகுதிக்கு ஒளிப்பக்கத்தையும், மற்றொரு பகுதிக்கு இருட் பக்கத்தையும் திருப்புகையிலே அஸம்பாவிதம் ஜனிக்கிறது. ஆனால் அவர்கள் தமது குணத்தில் ஓரம்சம் மற்றோரம்சத்தை வஞ்சிக்க விடுதல் எக்காலத்தும் இயலாது. பெரிய இங்கிலிஷ்காரனைச் சுற்றிச் சின்ன இங்கிலிஷ்காரன் சுயநலக் கோட்டை கட்டிக் கொண்டே போவானாயின் ஆபத்தும் துயரமுமே விளையும். சரித்திரமானது தான் சீட்டாடும்போது கைச் சீட்டுகளைக் காட்டுவது வழக்கமில்லை. பல ஸமயங்களில் மனிதருடைய முன் யோசனைகளையெல்லாம் கவிழ்த்து முடிவு திடீரென்று வந்துவிடும்.

எப்படியும், அஸம்பாவிதத்துக்கு நெடுங்காலம் ஒருவன் இடங்கொடுத்துத் தனது விதிகளே ஜகத்தின் விதியென்று பாவனை செய்தால், அப்போது திடீரென்று சரித்திரமானது ஒரு சிறிய தடையில் இடறித் தலைகீழாகக் கவிழ்ந்துவிடுமென்பதை ஒரு பொது உண்மையாகக் கூறலாம். பல நூற்றாண்டுகளாகக் கிழக்கும் மேற்கும் கூடியிருந்தும் தம்முள் மனுஷ்ய ஸம்பந்தங்கள் ஏற்படுத்திக் கொள்ளவில்லை. மேற்கானது கிழக்கை ஆள ஸம்பதப்படு

கிறது. பந்துவாக்க ஸம்மதமில்லை. கிழக்கின் காப்புச் சுவர்கள் இடிந்து, அதன் தானியக் களஞ்சியங்களுக்கு நடு மத்தியில் மேற்கு வந்து புகுந்திருக்கிறது. ஆனால் பல்லவி மாத்திரம் தவறாமல் பாடுகிறார்கள். " Never the twain shall meet "—அவ்விரண்டும் தீண்டமாட்டா " என்று.

இப்படிப்பட்ட அஸம்பாவிதத்தின் செத்தபாரம் நெடுநாள் ஸ்திரமான ஸம நிலையில் இருக்குமா? இதற்கு நெறிப்படி ஒரு தீர்ப்புச் செய்யாவிடின் சரித்திரத்தின் சோக நாடகத்தில் பயங்கரமான ஐந்தாம் அங்கத்தின் முடிவிலே திரை விழும். ஹிந்து தேசத்துப் புராதன சரித்திரமாகிய நாடகம் இப்படியே சோகமாக முடிந்தது. மனிதர்கள் ஒன்று சேர்ந்து யோசனை பண்ணித்தாம் என்றைக்கும் பிரிவுபட்டு நிற்க வழிகள் தேடியதை நமது நாட்டிலும் கண்டோம். நமக்கு மிகவும் இனிமையாகத் தோன்றிய ஸ்வதந்த்ரங்களைப் பிறர் அனுபவியாமல் தடுக்க நாமும் முயன்றோம். ஸர்வ ஸாதாரணமாக வழங்கத்தக்க உரிமைகளுக்குச் சிறப்புரிமைகள் என்று பெயர் சூட்டி மானுஷிகத்தை அவமானப்படுத்தினோம். ஆனால் எத்தனையோ பலமான சாஸ்த்ர மூட்டைகளை வைத்துக் காத்தும் இந்த அஸம்பாவிதத்தை நம்மால் ஸ்திரமாகக் காப்பாற்ற முடியவில்லை. நமக்கு பலமென்று கருதிய முறைமை நமக்கு துர்ப்பலமாக மூண்டது நம்மை நாமே புண்படுத்திக் கொண்டு பல நூற்றாண்டுகளாக மடிகிறோம்.

தற்காலத்துப் புறத் தோற்றம் யாதாயினும் கடைசிவரை கிழக்கும் மேற்கும் சந்திக்குமென்றே நான் நம்புகிறேன். ஆனால் இது நிறைவேறுமாறு நாம் செய்யப் பல கடமைகளும் உள. நாம் சிறியராய் அஞ்சிக்கிடந்தால், இங்கிலிஷ்காரன் சிறியவனாய் நம் முன்னே பயத்தை உலாவவிடுவான். சின்ன

ஆங்கிலேயனுடைய அதிகார முழுதும் நம் இயல்பி லுள்ள சிறுமையை ஆதாரமாகக் கொண்டு நிற்கிறது. ஆனல் பூமியில் இனி வரப்போகிற எதிர் காலத்தில் நிராயுதபாணிகள் ஆயுதபாணிகளை எதிர்த்து நிற்பர். அடிக்கத் தெரிந்தவனுக்கு வெற்றி யில்லை. சரியானபடி சாகத் தெரிந்தவனுக்கு வெற்றி யுண்டாம். துன்பம் விளைவிப்பவன் அழிவான். துன்பப்படுவோன் மஹிமையடைவான். ஆத்மா வுக்கும் மாம்ஸத்துக்கும்—ஆத்மாவுக்கும் யந்திரத் துக்கும்—நடக்கும் சண்டையின் முடிவில், மனுஷ்யன் தான் மிருகமில்லையென்றும், "இயற்கையின் பொறுக் குதல்" (Natural Selection) என்ற ஜந்து சாஸ்த்ர விதியைத் தான் கடந்தவனென்றும் ருஜுப்படுத்து வான். ருஜுப்படுத்தும் கடமை நம்மைச் சேர்ந்தது.

கிழக்கும் மேற்கும் சந்தித்தால், பெரிய ஆதர் சத்தில் ஸந்திக்கும். யஜமான ஸேவக ஸம்பந்தத்தி லும் பெரிய பீரங்கிகள் வைத்த சண்டைக் கப்பலின் ஸம்பந்தத்திலும் ஸந்திக்கமாட்டா.

மரணத்தைத் தோழமை செய்து கொண்டால், யமன் நமக்குத் துணை செய்ய வருவான். நமக்கு நாமே வலிமை தேடிக்கொள்ள வேண்டும். அன்றி, வலிமை யுடையதற்கும் வலிமையற்றதற்குமுள்ள தோழமை உண்மையாகாது. ஒரு பக்கம் மேலான ஐக்கியம் சரியான ஐக்கியமன்று. அது பிரிவுகளிலே பெரிய பிரிவு.

நம்மைச் செங்கல், சுண்ணும்பாக வைத்துக் கட்டும் ஸாம்ராஜ்யம் நமதன்று. நாமும் சேர்ந்து கட்டும் ஸாம்ராஜ்யமே நமதெனலாம். அந்த மாதிரி ஸாம்ராஜ்யத்திலேதான் நாம் ப்ராண லாபம் பெற லாம். அதற்காக நாம் ப்ராணனைக் கொடுக்கவும் செய்வோம். பலவான்களுடன் நம்மைத் தோழமைப்

படுத்தும் சக்தி நமக்கு யாசகத்திலும், இரவலிலும் கிடைக்காது. நம் உள்ளே நிற்கும் தர்ம சக்தியே அதனை நிறைவேற்றுவதாகுக. அந்த சக்தி அநந்தமான துக்கத்தையும் சிரமத்தையும் பொறுப்பது. தன்னைப் பலியிட்டுத் தான் துயரப்படும் சக்தியை விலங்குகளாலே கட்டி வைக்கும் சக்தி உலகத்தில் எதுவுமில்லை. அது தோல்வியில் வெல்லும். மரணத்தில் அமரத்தன்மை பெறும்.

## பிற் குறிப்பு

மேற்படி உபந்யாஸத்தை நான் வாசித்த பிறகு லார்டு ரோனல்ட்ஷே (வங்காளத்து கவர்னர்) தமது சபையில் செய்த ப்ரஸங்கமொன்றில் நான் இங்கிலாந்தில் ஒரு நண்பருக்கெழுதிய கடிதத்தைப் பற்றிப் பேசியிருக்கிறார். அக் கடிதத்திலேனும், இந்த உபந்யாஸத்திலேனும் இந்தியா பாதுகாப்புச் சட்டத்தின் கீழே தண்டனைப்பட்டவர்களுடைய குற்றம் குற்றமின்மையைப் பற்றி எவ்விதமான அபிப்பிராயமும் சொல்லவேண்டுமென்பது என்னுடைய நோக்கமன்று. நான் சொல்ல விரும்புவது யாதெனில்: ரஹஸ்யமாகக் குற்றஞ் சார்த்தி ரஹஸ்யமாக தண்டனை புரிதலாகிய இதுவரை அனுஷ்டானத்தில் நடந்துவரும் உபாயமானது தண்டனைப்பட்டவர்களில் பலர் குற்றமில்லாதவரென்று நினைக்கும்படி என் தேசத்தாரில் பலரைத் தூண்டுகிறது. சிறைச்சாலைகளில், தனியறைகளில் அடைத்து வைக்கும் வழி முன் ஜாக்ரதையென்று பொது ஜனங்களின் மனதில் படவில்லை. பழி வாங்குவது போல் தோன்றுகிறது. மேலும் பந்தோபஸ்திலிருந்தவன் விடுதலையடைந்த பிறகும் அவனை ஓயாமல் போலீஸார் பின் தொடரும் கொடுமையைக் கொடுமையென்று அதிகாரிகள் ஒப்புக்கொள்ளாவிடினும், கஷ்டப்படு

வோருக்கு அது கொடுமையென்று மிகத் தெளிவாகப் புலப்படுகிறது. இந்த வழியின் இயற்கைப் பயன் யாதெனில் இது எங்கும் பரவினதன் காரணமாகக் குற்றமில்லாத பலர்கூடத் தமது நலத்தையும் பொது நலத்தையும் கருதிச் செய்யும் தொழில்கள் தடைப்பட்டுப் போகின்றன. இந்த அஸம்பாவித நிலைமையில் புதிதாக ஒருவனைக் கண்டால் அவனுடன் தாராளமாகப் பழக இடமில்லை. மேலும் அதிதி ஸத்காரத்திலும், தான தர்மங்களிலும், ஸர்வ வ்யாபியான ஐயம் வந்து புகுந்து கொண்டது. இது பெரிய விபத்தன்றோ?

# ஜப்பானுடைய ஜீவன்

**ப**ழைய வழக்கங்களாகிய சுவர்களை ஒரே யிரவில் இடித்துத் தள்ளி, ஜப்பான் வெற்றிக் கோலம் பூண்டு நிற்பதை ஒருநாட் காலையில் எழுந்தவுடன் உலக முழுதும் பார்த்து வியப்பெய்திற்று. இம் மாறுதல் நம்ப முடியாதபடி அத்தனை விரைவில் நடந்தது; உடுப்பு மாற்றுவதுபோல் இருந்ததே யன்றி, ஒரு புதிய கட்டிடத்தை மெதுவாக எழுப்பு வதுபோலில்லை. முதிர்ச்சியால் விளையும் தன்னம் பிக்கையின் பலத்தையும், புதிய உயிருக்கியல்பாகிய புதுமையையும், எல்லையற்ற ஸாத்யத் தன்மைகளை யும் ஜப்பான் ஏககாலத்திலே காண்பித்தாள். அப் போது சிலர் :—"இது சரித்திரத்திலே ஒரு விநோதம்; காலதேவதையின் குழந்தை விளையாட்டு; சவர்க் காரத்தில் உண்டாகும் குமிழியைப் போலே, கோளத்திலும் வர்ணத்திலும் குறைவில்லை; ஆனால் உள்ளே ஓட்டை, ஸத்தில்லாதது" என்றெண்ணிப் பயந்தார்கள். ஆனால் ஜப்பானோ, தன் எதிர்பாராத சக்திப் பிரகாசம் சிலநாள் விந்தையன்று, காலத்தில் யதிர்ச்சையாக விளைந்த விளைவன்று; ஆழ்ந்த இருளி னின்றும் வீசுண்டு மறுக்ஷணம் சூன்யக் கடலில்

மோதப்படும் ஓர் பொய்ப் பொருளன்று என்பதை முடிவாக நிரூபணம் செய்துவிட்டாள்.

உண்மை யாதெனில், ஜப்பான் ஏககாலத்தில் புதியவளும், பழையவளுமாகிறாள். அவளுக்குக் கிழக்கு (ஆசியாக் கண்டத்துப்) பயிற்சி முன்னோரிட மிருந்து கிடைத்தது; அப்பயிற்சி எப்படிப்பட்டது? மெய்யான செல்வமும் வலிமையும் வேண்டினால், நோக்கத்தைத் தன்னுள்ளே செலுத்த வேண்டு மென்று கற்பித்த பயிற்சி; ஆபத்து வரும்போது புலனிழந்து போகாமல் காக்கும் பயிற்சி; மரணத்தை இகழவேண்டுமென்ற பயிற்சி; உடன் வாழும் மனிதருக்கு நாம் எண்ணற்ற கடமைகள் செலுத்த வேண்டுமென்ற பயிற்சி; பின்ன வஸ்துக்களில் அகண்ட வஸ்துவைப் பாரென்று காட்டிய பயிற்சி; மேலும் இவ்வுலகம் உயிருடையதென்றும், இதனுள்ளே ஒரு ஆத்மா ததும்புகிறதென்றும், இது வெறுமே யதிர்ச்சை யென்னும் பெரிய பேயினாலோ, அல்லது காரணமாத்ரமாக எங்கோ தொலையொட்டிய வானமொன்றில் மறைந்து கிடக்கும் தேவனாலோ செய்து : டப்பட்ட யந்திரமில்லை யென்றும் விளக்கிய பயிற்சி! அநாதியாகிய கிழக்குத் திசையில் ஜப்பான் மலர்ந்தாள்; தாமரைப் பூவொன்று தான் பிறந்த ஆழத்தில் பலமான பிடிப்பு வைத்துக்கொண்டு எளிய விலாஸத்துடன் மலர்வதுபோல மலர்ந்தாள்.

பழைய கிழக்கின் (ஆசியாக் கண்டத்தின்) குழந்தையாகிய ஜப்பான் அச்சமின்றிப் புதிய காலத்தின் பேறுகளை யெல்லாம் தனக்கு வேண்டுமென்று கேட்டாள். சோம்பேறிகளின் மனதில் திரளும் குப்பைகளும், பூட்டுத் திறவுகோல்களினால் அபாயத்தை விலக்க நினைப்பனவும் ஆகிய வழக்கச் சிறைகளை உடைத்து வெளியேறித் தனது தைரியத்தைக் காண்பித்தாள். இங்ஙனம் அவள் உயிருடைய

காலத்துடன் ஸ்பர்சமடைந்தாள். ஆச்சர்யத்துக்கிடமான ஆவலும் தகுதியுமுடையவளாய் நவீன நாகரிகத்தின் பொறுப்புகளை மேற் கொண்டாள்.

இதிலிருந்து ஆசியாவின் மற்றப் பகுதிகளெல்லாம்:—"நமக்குள் உயிரும் பலமும் உள, மேல் தோடுதான் செத்தது. அதை நீக்கி விடுவோம்" என்றெண்ணி தைரியத்தை அடைந்தன. இளமை தருகின்ற கால வெள்ளத்தின் ஓட்டத்தில் நாம் நிர்வாணமாக முழுகி எழவேண்டும். செத்ததை அடைக்கலம் புகுதல் சாதலேயாம். உயிரில் என்ன அபாயம் நேரினும் அஞ்சாது மேற்கொள்வதே உயிர்த்தல். இஃதெல்லாம் ஜப்பான் கற்றுக் கொடுத்த பாடம்.

மேலும் நமக்கு ஜப்பான் படிப்பித்ததென்னவென்றால், நாசமாகாமல் பிழைக்க வேண்டுமானால் கால சக்திக்கு—காலமாகிய காவற்காரனுக்கு—சரியான உத்தரம் சொல்லவேண்டும். நமது காலத்தின் ஸங்கேத மொழியை நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

ஜப்பான் ஆசியாக் கண்ட முழுதும் தனது சொல்லை விடுத்தாள்; எப்படியென்றால், நமது பழைய விதைக்குள் உயிர் இருக்கிறது; அந்த விதையை நவீன காலமாகிய புதிய தரையில் நட வேண்டியதைத் தவிர வேறொன்றும் வேலையில்லை.

ஜப்பான் மேற்கு தேசத்தாரைப் போலவே வெறும் புறநடிப்பு—அபிநயம் காட்டி இந்தப் பதவியடைந்துவிட்டதாகச் சிலர் சொல்வதை நான் ஒரு போதும் நம்பமாட்டேன். உயிரை அபிநயிக்க முடியாது. வலிமையை நெடுநாள் பொய் நடிப்புக் காட்ட இயலாது. வெறும் அபிநயம் பலஹீனத்துக்கு மூலாதாரம். நம்முடைய எலும்புக் கூட்டை

மற்ெருருவனுடைய தோலினுல் போர்த்துக் கொள்வதுபோலாம். அதனுல் ஒவ்வொரு நிமிஷமும் தோலுக்கும் எலும்புக்கும் தீராத சண்டையாகவே இருக்கும். எனக்கு ஜப்பானுடன் நெருங்கிப் பழகி அவளியல்பு யாது, அவளுடைய பலம் எதிலேயிருக்கிறது, அவளுக்கு விபத்துக்கள் எவையென்பவற்றையெல்லாம் நானுக நிச்சயப்படுத்திக் கொள்ள ஸந்தர்ப்பம் வாய்க்கவில்லை. நானும் கிழக்கைச் சேர்ந்தவனுகையாலே, அவளுடைய தற்கால விவகாரங்களையும், அவற்றை அவள் தீர்க்கும் வழிகளையும் நான் மிகவும் ஆவலுடன் கவனிக்க வேண்டியவனுகிறேன். இந்தப் பெரிய கிழக்கு ஜாதி நவீன காலத்தினிடம் பெற்ற ஸௌகர்யங்களையும், பொறுப்புகளையும் என்ன செய்யப் போகிருளென்பதைப் பார்க்கும் பொருட்டாக உலக முழுதும் காத்திருக்கிறது. வெறுமே மேற்கை (ஐரோப்பாவை) அபிநயிப்பாளாகுல் அவளைக் குறித்து நாம் எதிர்பார்த்ததெல்லாம் வீணுகிவிடும்.

மேற்கு நாகரிகம் பல ஸங்கடமான விவகாரங்களை உலகத்தின் முன்னே காட்டிற்று; ஆனுல் அவற்றைத் தீர்ப்புப் பண்ணும் நெறி காட்டவில்லை. ஆளுக்கும் அரசுக்கும் போராட்டம்; தொழிலாளிக்கும் முதலாளிக்கும் சண்டை; ஆணுக்கும் பெண்ணுக்கும் யுத்தம்; லௌகிக லாபத்துக்கும் ஆத்ம லாபத்துக்கும் யுத்தம்; ஜாதிகளின் கூட்டஹங்காரத்துக்கும், மானுஷிக பரம தர்மங்களுக்கும் யுத்தம்; அங்ஙனமே, வர்த்தகம், அரசு எனுமிவற்றின் பிரமாண்டமான கூட்டங்களிலே ஸஹஜமாக விளையக்கூடிய குரூபமான சிக்கல்களுக்கும், அழகையும், பரிபூரண சாந்தியையும் விரும்புகிற மனுஷ்ய ஸ்வபாவத்திற்கும் யுத்தம்;—இத்தனை குழப்பங்களுக்கு ஸமாதானம் கண்டுபிடிக்க வேண்டும். இது

வரை கனவிலே காணாத ஒரு புது யுக்தி பண்ணிக் கண்டுபிடிக்க வேண்டும்.

இந்த நாகரிகமான நதி பல வாய்க்கால்கள் வழியே தன்னுள் வந்து சேரும் குப்பை கூளங்களால் அடைப்புண்டுபோவது கண்டோம். மானுஷீகத்தில் தனக்கு மிகுந்த அன்புண்டென்று தற்புகழ்ச்சி பேசியும் அது மனிதனுக்குப் பரம சத்ருவாக மூண்டது கண்டோம். முற்காலத்தில் காடுகளிலே சுற்றிய அநாகரிகக் கூட்டத்தார் திடீர் திடீர் என்று கலகம் விளைவித்த இயல்பைக் காட்டிலும் இது மிகவும் கொடியது. இந்த நாகரிகம் மிகவும் ஸ்வதந்த்ராபிமானம் இருப்பதாக டம்பம் பேசுகிறதே யொழிய, நடையில் முற்காலங்களில் வழங்கியவற்றைக் காட்டிலும் கொடுமையான அடிமைத் தன்மைகளை இது மனுஷ்ய ஸங்கத்தில் புகுத்தியிருப்பது கண்டோம். நவீன அடிமைத்தனத்தின் விலங்குகளை உடைத்தலரிது. காரணம் — இவை கண்ணுக்குப் புலப்படவில்லை; அல்லது விடுதலையின் க்ஷேமத்தையும் பெயர்களையும் புனைந்து கொள்ளுகின்றன. இந்த நாகரிகத்தின் அஸுர லோபத்தினால், மனிதன் தன்னைப் பெருமைப்படுத்திய வீர தர்மங்களில் நம்பிக்கை யிழப்பது கண்டோம்.

ஆதலால், ஜப்பானியராகிய நீங்கள் இலேசாக இந்த நவீன நாகரிகத்தை இதன் இச்சைகள், வழிகள், ஸங்கேதங்களுடன் அங்கீகாரம் செய்து, இவை இன்றியமையாதன என்று வீணெண்ணம் கொள்ளலாகாது. கிழக்குப் புத்தியை உபயோகப் படுத்துங்கள்; ஆத்ம சக்தியை, டம்பமின்மையில் விருப்பத்தை, அயலாருக்குதவ வேண்டுமென்ற நம்பிக்கையை, உபயோகப்படுத்திக் கிறீச்சுக் கிறீச் சென்று கத்திக்கொண்டு போகும் மனுஷ்ய அபிவிருத்தியென்ற தேருக்குப் புதிய பாதையொன்று

விட்டு விடுங்கள். ஒவ்வோரசைப்பிலும் அத்தேர் கேட்கும் அபரிமிதமான ஜீவ பலியையும் ஸ்வதந்த்ர பலியையும் இயன்ற வரை சுருக்கப்படுத்துங்கள். பல தலைமுறைகளாக நீங்கள் உங்கள் தேசத்துக்குரிய தனி வழியிலே உணர்ந்தும், எண்ணியும், தொழில் செய்தும், இன்புற்றும், தொழுதும் வந்திருக்கிறீர்கள். இதையெல்லாம் பழங் கந்தை போலே கழற்றி யெறிதல் இயலாது. இந்த வழி உங்கள் ரத்தத்தில் கலந்திருக்கிறது. உங்கள் எலும்பின் மஜ்ஜைக்குள், தசைக்குள், மூளை நிணத்துக்குள் கலந்திருக்கிறது. நீங்கள் கை வைப்பதிலெல்லாம் அது தொழில் செய்ய வரும். உங்களுக்குத் தெரியாமலே வரும்; உங்களிச்சையை மீறியும் வரும்.

முற்காலத்தில் நீங்கள் மானுஷிக விவகாரங்களை உங்களுக்குத் திருப்தியாகவே தீர்த்துக் கொண்டீர்கள். உயிரைப்பற்றிய உங்களறிவு, வாழ்விற்கு நீங்கள் கண்ட தனி வழி, இவற்றையெல்லாம் இக்கால நிலைமையிலே செலுத்திப் பாருங்கள். அதிலிருந்து சிருஷ்டி தோன்றும். அந்த சிருஷ்டி வெறும் அபிநயமன்று. அதை உங்கள் ஜாதியின் ஆத்மா தனதென்று கொண்டு, உலக க்ஷேமத்துக்கும் அதனையே தனது காணிக்கையாக இறுமாப்புடன் செலுத்தும். மேற்கேயிருந்து சேகரித்த பொருள்களை உங்களுடைய சொந்த அறிவுக்கும் அவசியத்துக்கும் தக்கபடி உபயோகித்துக் கொள்ளும் உரிமை ஆசியாக் கண்ட முழுவதும் ஜப்பானிய ஜாதி யொன்றுக்கு மாத்திரந்தானிருக்கிறது. அதிருஷ்ட வசத்தால், உங்களுக்கு அன்னியரின் தொல்லை கிடையாது. ஆனால் அதற்குத் தக்கபடி உங்களுக்குப் பொறுப்பதிகமாகிறது. மனுஷ்ய ஸபையின் முன்னே ஐரோப்பா கொண்டு வந்திருக்கும் கேள்விகளுக்கு ஆசியா உங்கள் வாக்கு மூலமாகவே உத்தரங் கொடுக்க

வேண்டும். நவீன நாகரிகத்தின் சில தோற்றங்களை மாற்றி; அது யந்திரம்போலச் செத்துக் கிடக்கு மிடத்தில் உயிரைப் பொழிந்து; நிஷ்கருணையான அவசிய விதியினிடத்தே மனுஷ்ய ஹ்ருதயத்தைப் போட்டு; இன்னிசையும், உயிருமுள்ள வளர்ச்சி யையும், உண்மையையும், அழகையும் மேலாக எண்ணி; கேவலம் கார்ய லாபத்தையும், வலிமை யையும், தாழ்வாக நினைத்து; இங்ஙனம் ஆசியா நடத்திப் பார்க்கும் சில புதிய சோதனைகள் உங்கள் நாட்டிலே நடத்தப்படும்.

பழைய காலத்தில் ஆசியாவின் கீழ்ப்பகுதி முழுதும், பர்மாவிலிருந்து ஜப்பான் வரை, எல்லாம் இந்தியாவுடன் நெருங்கின ஸ்நேஹத் தளையில் கட்டுப்பட்டிருந்தது. ஜாதிகள் பரஸ்பரம் ஸஹஜ மாகக் கொள்ளத் தகுந்த தளை அதுவேயாம். நமக்குள் ஜீவமயமான உள்ளத் தொடர்பிருந்தது. ஒரே நாடி வலையுண்டு. அதன் வழியே மனுஷ்ய ஜாதியின் முக்யமான அவஸரங்களைப் பற்றிய சிந்தனைகள் நமக்குள்ளே பரவின. நாம் பரஸ்பரம் பயந்து நடுங்கிக்கொண்டிருக்கவில்லை. பரஸ்பரம் அடக்கி வைக்கும் பொருட்டாக ஆயுதங்கள் தரிக்கவில்லை. சுயலாபத்தை வேண்டிப் பரஸ்பரம் சட்டைப் பையில் கை போட்டுத் திருடும் சம்பந்தம் நாம் கொண்டிருக்கவில்லை. ஆதர்சங்களையும், சிந்தனைகளையும் பண்டமாறிக் கொண்டோம். பரம வாத்ஸல்யத்தின் தான ப்ரதி தானங்கள் செய்து கொண்டோம். பரஸ்பரம் நமது ஹ்ருதய ஒற்றுமை பாஷா பேதங்களால் தடைபடவில்லை. ஜாதி கர்வம், உடம்பிலோ மதியிலோ நாம் வலியோமென்ற செருக்கு, நமது தொடர்பைக் கெடுக்கவில்லை.

கலைகளும், ஸாஹித்யங்களும், புதிய தழைகளும் மலர்களுங் காட்டின; ஹ்ருதய ஒற்றுமை என்ற

ஸூர்யனுடைய செய்கையால் அங்ஙனம் காட்டின. நாட்டிலும், பாஷையிலும், சரித்திரத்திலும் வேறு பட்ட பல ஜாதியாராயினும் நாம் ஒருங்கே மனுஷ்ய ஜாதியின் பரம ஐக்யத்தையும், அன்பின் ஆழ்ந்த பந்தத்தையும் அங்கீகரித்தோம். சாந்தியும், தர்ம சிந்தையுமுடையதாய், மனிதர் பரமார்த்தங்களின் பொருட்டுக் காட்டில் கூடிய அந்தக் காலத்தில் உங்கள் ஜாதி அமரத் தைலம் கூட்டி வைத்தது. அதுகொண்டே உங்கள் ஜாதி புதிய யுகத்தில் மறுபடி பிறக்கவும், புதிய இளைய உடல் தரிக்கவும், உலகம் பார்த்தனவற்றுள்ளே பெரு வியப்பாகிய பெரும் புரட்சியின் இடிப்பிலே காயம் படாமல் பிழைக்கவும் ஹேது உண்டாயிற்று.

பழையதைப் புதியதாகவும், பலமற்றதை பல முடையதாகவும், அவமானத்தை மாட்சியுடைய வெற்றியாகவும் மாற்ற வேண்டுமானால், அதற்கு மனிதனிடத்தில் மறைந்து நிற்கும் தேவ சக்திதான் வந்து தீரவேண்டுமென்பதை நம்பாதிருத்தல் சிரமம். அந்த தேவ சக்தியானது உங்கள் நாட்டிலே, இந்த அற்ப லோப நாட்களில் பிறக்கவில்லை. கீச்சிடும் யந்திரங்களும், அஸூரத்தனமான அஹங்காரமும், ராஜ்ய தந்திரிகளின் பொய் முழக்கங்களும், செழிப் படைந்த கபடமும் தலையெடுத்திருக்கும் இந்த நாட் களில் அது பிறக்கவில்லை. வீர ஆண்மையின் உதய காலத்தில், வானம் மண்ணை நெருங்கி வந்த காலத்தில், மனிதன் தனதாத்மாவின் ஜகத்தை ப்ரகாசப்படுத்திய பரமாத்மாவினிடத்திலும் நம் பிக்கை கொண்டிருந்த புராதன காலத்தில், அது பிறந்தது.

இந்த நாட்டில் என் மனதிலே அதிகமாகப் பதிந்த விஷயம் யாதென்றால், நீங்கள் இயற்கையின் மர்மங்களைப் பகுப்பு நெறியால் அறியாமல் அனு

தாபத்தாலே தெரிந்தீர்களென்ற நம்பிக்கை இயற்கைத் தேவியின் கோடுகளிலுள்ள பாஷையையும், வர்ணங்களிலுள்ள ஸங்கீதத்தையும், கோணல்களிலுள்ள ஒழுங்கையும், விடுதலையுள்ள அசைவுகளிலே இன்னிசையையும் நீங்கள் கண்டீர்கள். அவள் தன் அபரிமிதமான வஸ்துக் கூட்டங்களை யாதொரு முட்டுதலுமின்றி நடத்திச் செல்லுகிறாள். அவளுடைய படைப்புகளில் சண்டைகள் கூடக் கூத்தும் பாட்டும் போலே கிளைக்கின்றன. அவளுடைய கிளர்ச்சியிலே கேவலம் பகட்டு மிகுதியன்று, தன்னை மறந்த ஸம்பூர்ணத்வம் காணப்படுகிறது.

இயற்கையானவள் தனது ஸௌந்தர்ய ரூபங்களில் சக்தி சேர்த்து வைத்திருக்கிறாள். இந்த அழகுதான் அவள் மார்பின்மீது கிடக்கும் பெரிய சக்திகளைத் தாய்போலே போஷிக்கிறது. வேகத்திலும், சாந்தியிலும் அவற்றைக் காப்பாற்றுகிறது. பரிபூர்ண ஸௌந்தர்யத்தின் ஸங்கீதத்தினால் பிரகிருதியின் சக்திகள் தம்மைத் தாமே அழிவின்றிக் காத்துக் கொள்ளுகின்றன. அவள் தனது கோணல் வரிகளின் மென்மையால், பூமியின் தசைகளிலுள்ள ஆயாஸத்தை நீக்கிவிடுகிறாள். இந்த விஷயங்களையெல்லாம் நீங்கள் அறிந்துகொண்டீர்கள். இந்த மர்மங்களை வாழ்க்கையிலே கலந்து கொண்டீர்களென்றும், எல்லாவற்றிலும் தோன்றும் அழகு உங்கள் மதிக்குள்ளே பாய்ந்து விட்டதென்றும் உணர்கிறேன்.

வஸ்துக்களைப் பற்றிய புற அறிவு விரைவிலே வந்துவிடும். அகத்தைக் காண்பதே பல நூற்றாண்டு பழகித் தன்னைக் கட்டிய பின்பு கைகூடும் விஷயம். புறத்தே நின்று இயற்கையை ஆளுதல் மிகவும் எளிது. அன்பின் கனியிலே அவளைத் தனதாக்கிக் கொள்ளுதல் அரிது. அதுவே உண்மையான மேதையின் தொழில். உங்கள் ஜாதி அந்த மேதையைப்

பயிற்சியாலே காட்டவில்லை ; படைக்குந் திறனாலே காட்டிற்று. புறக்கோலத்தாலன்று, ஆத்மப் பிரகாசத்தால். இந்த ஸ்ருஷ்டி சக்தி எல்லா ஜாதிகளிலும் உண்டு. இதன் தொழில் மனிதரின் குணங்களைக் கவர்ந்து, தன் ஆதர்சங்களுக்குத் தக்கபடி அவற்றை உருமாற்றுதலாம். ஆனால் இங்கே அந்த சக்தி பலிதமாய்விட்டது. இங்கு, ஜப்பானில், அது எல்லா மனிதரின் மனதிலும் அழுந்திவிட்டதாகத் தோன்றுகிறது. தசை, நாடிகளில் ஊறிவிட்டதாகப் புலப்படுகிறது. உங்கள் மன உணர்ச்சிகள் உண்மையாயின. புலன்கள் தீக்ஷண்யம்மாயின. கைகள் இயற்கைத் திறமை பெற்றன. ஐரோப்பாவின் மேதையால் அங்குள்ள ஜனங்களுக்குக் கூட்டஞ் சேர்க்கிற சக்தி ஏற்பட்டது. அந்த சக்தியை ராஜ்ய நீதியிலும், வியாபாரத்திலும், பௌதிக சாஸ்த்ர ஞானத்தை ஒருமுகப்படுத்துவதிலும் உபயோகிக்கிறார்கள். ஜப்பானுடைய மேதையோவென்றால் உங்களுக்கு ஸௌந்தர்ய தர்சனத்தையும், அதை வாழ்க்கையில் நிரூபணம் செய்யும் திறமையையும் கொடுத்தது. இதனால் நீங்கள் வேண்டியபோது கூட்டஞ் சேர்க்கிற திறமை தன்னாலே வந்துவிட்டது. ஏனெனில் அழகின் இசை அந்தராத்மாவில் உள்ளது. அதன் புற உடல் ஸங்க—ஸ்தாபன சக்தி.

ஒவ்வொரு நாகரிகமும் ஒவ்வொருவிதமான மனுஷ்ய அனுபவத்தின் மொழிபெயர்ப்பு. உலகத்திலுள்ள வஸ்துக்களின் சண்டைப் பகுதியை மாத்திரம் ஐரோப்பா அழுத்தமாகத் தெரிந்துகொண்டிருப்பதாகத் தோன்றுகிறது. அந்தப் போராட்டத்தை வெற்றியினாலேதான் வசப்படுத்த முடியும். ஆதலால் அவள் (ஐரோப்பா) எப்போதும் போர் செய்ய ஆயத்தமாகவே யிருக்கிறாள். அவளுடைய கவனத்தில் பெரும்பகுதி ஸைந்யங்கள் சேர்ப்பதிலே

செலவாகிறது. ஆனால் ஜப்பான் தனது லோகத்தில் ஒரு தேவ ஸந்நிதியின் ஸ்பர்சத்தை உணர்ந்தாள். ஆதலால் அவளுடைய ஆத்மாவில் பக்தியாராதனம் எழுந்தது. அவள் இயற்கையை வென்றதாகச் செருக்குரை சொல்லவில்லை. அளவில்லாத ஜாக்ரதை யுடனும், மகிழ்ச்சியுடனும் இயற்கைக்கு ப்ரே மாஞ்சலி செலுத்துகிறாள். அவளுக்கும் உலகத் துக்கும் உள்ள தொடர்பு ஆழ்ந்த உள்ளத் தொடர்பு. இந்த அன்பாகிய உயிர்த் தளையை அவள் தனது குன்றுகளுடனும், கடல், ஆறுகள், பலவிதமான புஷ்ப விஹாரங்களும், கிளைக் காட்சி களுமுடைய வனங்களுடனும், ஏற்படுத்திக் கொண்டாள். காடுகளின் பெருமூச்சையும், கிசு கிசுப்பையும், ஹ்ருதயத்தில் வாங்கிக் கொண்டாள். அங்ஙனமே, அலைகளின் விம்முதல்களையும், ஸூர்ய சந்திரரின் ஒளி, நிழல்களின் ஸகல கலா பேதங் களையும் கற்றுணர்ந்தாள். சோலைகளிலும், உப வனங்களிலும். வயல்களிலும் ருதுக்களின் வரவைக் காணும் பொருட்டுக் களிப்புடன் கடைகளைச் சார்த் தினாள். உலகத்தின் ஆத்மாவுக்கு இங்ஙனம் நெஞ்சு திறத்தல் உங்களிலே சில செல்வர் மாத்திரம் செய்ய வில்லை. இது புறத்து நாகரிகமொன்றின் பலாத் காரத்தால் ஏற்பட்டதன்று. ஜகத்தின் ஹ்ருதயத் திலே ஒரு புருஷனைக் காண்பதாகிய ஆத்மாநுபூதி உங்கள் நாகரிகத்திலும் வடிவு கொண்டது. மனிதரை யெல்லாம் பந்துக்களாக நினைப்பது உங்கள் நாகரிகம். ஆதலால் உங்களில் அரசுக்குச் செலுத்த வேண்டிய கடமை தந்தைக்குச் செலுத்த வேண்டிய கடமை போலாயிற்று. உங்கள் ஜாதி ஒரு குடும்பமாயிற்று. சக்ரவர்த்தி அதற்குத் தலை. பிறரை அடித்தல், தம்மைக் காத்தல் என்ற இரண்டு நோக்கங்களுக் காக உண்டான ஆயுதக் கூட்டுறவினின்றும் உங்கள் ஜாதியொற்றுமை பிறந்ததன்று. பிற நாடுகளின்

மீது படையெடுத்துக் கொள்ளைத் தொழிலின் லாப நஷ்டங்களைப் பங்கிட்டுக் கொள்ளும் கூட்டுறவிலே பிறந்ததன்று. யாதேனுமொரு பலாபேக்ஷையினால் அவசியமாகும் ஸங்கத்தில் தோன்றியதன்று. ஆனால் குடும்பத்தின் விஸ்தாரம்; ஹ்ருதய விஸ்தாரம்; விசாலமான க்ஷேத்ரத்தில், நீண்ட காலத்தில் இயல்வதான விஸ்தாரம்.

இது பற்றியே இப்போது ஜப்பானிய நாகரிகத்தைப் பயமுறுத்தும் மாறுதலை நான் எனது சரீரத்துக்கு நேரும் பயம்போல அஞ்சுகிறேன். ஏன்? கார்யலாபத்தையே பொதுத் தளையாக உடைய நவீன காலத்தில் வேறுபாடுகள், மௌன ஸௌந்தர்யத்துக்கும் மறைந்த சக்திகளுக்கும் எதிரே பரிதபிக்கும்படியாகத் திறந்து கிடக்கும் கோலத்தை ஜப்பானில் காண்பதுபோல் இத்தனை தெளிவாகப் பிற இடங்களிலே காண்பதரிது.

ஸங்க பலமுடைய குரூபம் மனத்தைத் தாக்கி வசப்படுத்தித் தன் கன மாத்ரத்தாலே வெற்றியடையுமாயின் அதுவே அபாயம். அதன் இடைவிடாத அடிகளினாலும், ஹ்ருதயத்தின் ஆழ்ந்த ராகங்களை அது கண்டு நகைப்பதாலும் அதனை யேற விட்டால் அபாயமுண்டாம். அது கடூரமாகவும் பலாத்காரமாகவும் வந்து நமது கண்முன்னே நிற்பதால் அதைக் கண்டு நம் புலன்கள் மயங்குகின்றன. குரூபத்தினாலே சக்தியுடையதாகத் தோன்றும் மரப் பொம்மைக்குக் காட்டு மனுஷ்யன் பூஜைகள் செய்வது போலே நாம் அதற்கு பலிகள் கொடுக்கிறோம். ஆதலால் அடக்கமும், ஆழமும், உயிரின் நுட்பமான மென்மையுமுடைய வஸ்துக்களுடன் அது போட்டிக்கு வரும்போது பயமுண்டாகிறது.

உங்கள் ஜாதியின் ஆதர்சங்களில் அன்பில்லாத பலர் உங்களிலே உள்ளார். அவர்களுக்கு நோக்கம்

வளர்ச்சியன்று; லாபம். அவர்கள் ஜப்பானை நாங்களே நவீனமாக்கினோமென்று தற் புகழ்ச்சி செய்து கூவுகிறார்கள். ஒரு ஜாதியின் ஆவிக்கும் காலத்தின் சக்திக்கும் இசை தவறக் கூடாதென்பதை நானும் ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனால் நவீனத் தனத்துக்கும் நவீனத்துக்கும் பேதமுண்டு; கவிராயத் தனத்துக்கும் கவித்வத்துக்கும் பேதமிருப்பது போலே. இதை மறக்கக் கூடாது. இந்த நடிப்பு வெறும் கேலி தவிர வேறொன்றுமில்லை. இது மூலத்தை விட அதிக இரைச்சல்; மூலத்தின் பொருளைக் கருதா மல் எழுத்தைக் கருதுவது. உண்மையான நவீன போதமுடையோர் நவீனத்தனம் பண்ணுதல் அவ சியமில்லை யென்பது ஞாபகமிருக்க வேண்டும். தீரர் தைரியம் பேசமாட்டார். நவீனத்வம் ஐரோப்பிய ரின் உடையிலே இல்லை. அவர்களுடைய குழந்தைகள் பாடம் படிக்கும்போது, அடைத்து வைக்கும் குரூப மான கட்டிடங்களில் இல்லை. தட்டையான நேர்வரிச் சுவர்களுடையனவும், ஸமதூர வரிகளில் உள்ள ஜன்னல் வரிசைகளை உடையனவுமான அந்த மனிதர் அடைபட்டுக் கிடக்கும் சதுர வீடுகளில் இல்லை. மேலும், அவர்களுடைய பெண் மக்கள் தலையிலே நானாவிதமான கூளங்களைச் சுமத்திய தொப்பிகளி லும் நவீனத்வம் இல்லையென்று நிச்சயமாகக் கூறலாம். இவை நவீனமல்ல; கேவலம் ஐரோப்பியம். உண்மையான நவீனமாவது சிறந்த விடுதலை; ருசி பேதங்களுக்கடிமைபடுவதன்று. அறிவிலும், தொழி லிலும் விடுதலை; ஐரோப்பியவாத்திகளின் கீழே பள்ளிப் பிள்ளைத்தனமன்று. நவீனமாவது ஸயன்ஸ் (சாஸ்த்ரம்); அதை வாழ்க்கையிலே தவறாக ப்ரயோகித்தலன்று. சாஸ்த்ரத்தை ஒரு மூட பக்தி யாக்கி, அஸங்கதமாக அதன் உதவியை எல்லா அஸாத்யங்களுக்கும் நாடுகிற நமது ஸயன்ஸ் வாத்தி யார்களைப் பின்பற்றுதல் நவீனமன்று.

நவீனத் தற்காப்புக் கருவிகளை ஸம்பாதிப்பதில் ஜப்பான் அஜாக்ரதையாக இருக்கவேண்டுமென்று நான் க்ஷணமேனும் கூறவில்லை. ஆனால் ஆத்ம—ஸம்ரக்ஷணையளவுக்கு மிஞ்சி அக்கருவிகளை வேண்டலாகாது. உண்மையான சக்தி ஆயுதங்களில் இல்லை. அவற்றைக் கையாளும் மனிதனிடம் உள்ளதென்பதை அறியவேண்டும். மனிதன் பலத்தை வேண்டி, ஆத்மாவுக்குத் தீங்கு நேருமளவு ஆயுதங்களை வளர்த்தால், அவற்றாலே அவனுடைய பகைவருக்கு நேரும் ஆபத்தைக் காட்டிலும், அவனுக்கே அதிக ஆபத்தாகிறது.

உயிருடைய வஸ்துக்களைக் காயப்படுத்துதல் எளிது. ஆதலால், அவற்றுக்கு ஸம்ரக்ஷணை வேண்டும். இயற்கையிலே உயிர் தன்னைத் தனது சொந்த வஸ்துக்களாலே செய்த போர்வைகளால் காக்கிறது. அது பற்றியே அவை உயிரின் வளர்ச்சியுடன் இசைபொருந்துகின்றன. இல்லாவிட்டால் காலம் வரும் போது அவை உடைந்து போகும். எளிதிலே மறைந்துபோகும். உயிருள்ள மனிதனுக்கு உண்மையான கவசம் அவனுடைய ஆத்ம ஆதர்சங்களேயாம். அவை அவனுடன் ஜீவ ஸம்பந்தமுடையன. அவன் வளர்ச்சியுடனே வளர்வன; துரதிர்ஷ்டவசத்தால் அவன் தனக்குச் சில ஸமயங்களில் உருக்கினால் செய்த, செத்த, யந்த்ரதுல்யமான கவசங்களையும் உபயோகிக்க நேரிடுகிறது. அப்போது அவற்றின் கொடுமையிலிருந்து தன்னைக் காப்பதில் ஜாக்ரதையாக இருக்கவேண்டும். அவன் பலஹீனனாய், போர்வைக்குத் தக்கபடி உடம்பைக் குறுக்கிக் கொண்டு போனால், நாளடைவில் ஆத்மா சுருங்கித் தற்கொலையாக முடியும். அந்தத் தற்கொலையின் வழியை மேற்கு ஜாதியார் அனுசரிப்போராகித் தாங்கள் அதிகாரத்திலிருக்கவும், பிறரை அடக்கி

வைக்கவுங் கருதித் தமது மனுஷ்யத் தன்மையை ஸங்கங்களின் பெரிய பாரத்தின் கீழே அழுத்தி மூச்சைப் பிடித்துக் கொள்ளுகிறார்களென்பதை ஜப்பான் தன் மனதில் உரக்கக் கூறிக்கொள்ள வேண்டும். தர்ம விதியிலே உறுதியான நம்பிக்கை செலுத்த வேண்டும். ஆதலால் நவீன ஜப்பானில் அதிகரித்துவரும், மேற்குத் திசையாரை அனுகரணம் (அபிநயம்) செய்வதாகிய, பழக்கம் இவளுடைய பலத்துக்கும், ஸ்திரத்தன்மைக்கும் அவசியமென்று நான் நினைக்க இடமில்லை. அது இவளுடைய உண்மையியல்புக்குப் பெருஞ் சுமையாய், பலக் குறையை உண்டாக்குகிறது. காலமாக ஆக இந்த பலஹீனம் மிகுதிப்படும். நவீன ஜப்பானியர் பால்யதசை முதலாகக் கற்றுக் கொள்ளுகிற மேற்குத் திசையின் ஆசாரங்கள், அந்நிய நாகரிகத்தின் வழக்கங்கள், கடைசியாக ஒரு நாள் ஜப்பான் தனது சொந்த இயல்பை மறக்கும்படி செய்துவிடும். அப்போது ஜப்பான் மக்கள் தமது புராதன பூர்வ காலத்தை மறந்துவிடுவர். தமது சரித்திரமாகிய குன்றத்திலிருந்து பாய்ந்து வரும் நதியைத் தாமே தடைகளாய் நின்று அடைத்துப் போடுவார்கள். அப்போது அவளுடைய நாக ரிகத்தை ஸௌந்தர்யத்தின் செழிப்பினாலும், பலச் செழிப்பாலும் மிக வளம்பெறச் செய்த ஜீவ நீர் எதிர் காலத்துக்கில்லாமல் போகும்.

இதைக் காட்டிலும் ஜப்பானுக்குப் பெரிய தொரு விபத்து யாதெனில்,—மேற்கின் புறக் கோலங்களை அபிநயிக்கும் செய்கை மாத்திரமன்று; மேற்குத் திசை நாகரிகத்தின் உள்ளிருந்து நடத்தும் சக்தியையே தனதாக அங்கீகரித்தல். அவளுடைய ஜன ஆதர்சங்கள் ஏற்கெனவே, ராஜ்ய விவகாரங் களின் முன்னே தோற்குங் குறிகளைக் காட்டுகின்றன,

மனிதர் விளையாட்டில் ஜெயிக்கும் பொருட்டாக மனிதர் ஆத்மாவைப் பணயமென்று வைக்கும் ராஜ்யச் சூதில் அவனுடைய நவீன விருப்பம் சாய்ந்து வருகிறது. "தகுதி மிக்க தன் உயிர் மிஞ்சும்" என்ற ஸயன்ஸ் வாக்யத்தை அவன் தனது வாயில் மீது பெரிய எழுத்தில் எழுதி வைத்திருக்கக் காண்கிறேன். அந்த வாக்யத்தின் உள்ளர்த்தம் யாதெனில்: 'உன் லாபத்தையே தேடு. அதனால் மற்றவர்களுக்கு எவ்வளவு நஷ்டமுண்டானாலும் கவனிக்காதே' இது குருடனுடைய மந்திரம். அவன் கண் தெரியாதபடியால் கையால் தீண்டக் கூடியதை மாத்திரந்தான் நம்புவான். ஆனால் மனிதரை இயற்கை மிகவும் நெருக்கமாகப் பின்னியிருப்பதால், நீ பிறரை அடித்தால் அந்த அடி உன் மீது தவறாமல் திரும்பி விழுமென்பதைக் கண்ணுடையோர் அறிவார். மனிதன் கண்டு பிடித்த உண்மைகளிலே மிகப் பெரியது தர்ம விதி. அது யாதெனில் எவ்வளவு மனிதன் பிறருக்குள்ளே தன்னைக் காண்கிறானோ அவ்வளவு உண்மை நிலையடைகிறானென்ற ஆச்சர்யமான ஸத்யத்தைக் கண்டு பிடித்த செயலேயாம். இதற்கு உள்ளத்திலே விளையும் பயன் மாத்திரமேயன்றி, நமது வாழ்வில் ஒவ்வொரு சாயையிலும் நற்பயனுண்டாகிறது. தார்மிகக் குருட்டுத்தனத்தை எந்த ஜாதியார் தேச பக்தி மதமென்று யத்தனத்தாலே பயிற்சி செய்கிறார்களோ, அவர்கள் திடீரென்று பலாத்கார மரணத்தையடைவார்கள். முற்காலத்தில் தேசங்களை அன்யர் படையேறி வருதல் உண்டு. க்ரூரமும், ரத்தச் சேதமும் இருக்கத்தான் செய்தன. பொறாமை, லோபங்களால் சூழ்ச்சிகள் செய்வதுமுண்டு. ஆனால் அவை ஜனங்களின் ஆத்மாவை ஆழத் தீண்டின அல்ல. ஏனெனில் பொதுஜனங்கள் இந்தக் கேளிகளில் நேரே கலந்தது கிடையாது. சிலருடைய பேராசைகளினாலேதான்

அவை உண்டாயின. இந்தத் துணிசெயல்களின் நீச, பாதகப் பகுதிகளிலே பொதுஜனங்கள் உத்தர வாதமில்லாமல், இவற்றிலுண்டாகும் வீர, மானுஷீகப் பயிற்சிகளின் லாபத்தை மாத்திரம் பெற்றனர். அதனுல் பொதுஜனங்களுக்கு விளைந்த நன்மைகள் எவையெனில்: ஆபத்துக்குப் பின் வாங்காத விசுவாசமும், மானக் கடமைகளில் ஒரு மனப்பட்ட பக்தியும், சரணுகதியிலே நிறைவும், மரணத்தையும், விபத்துக்களையும் பயமின்றி அங்கீகாரம் செய்யும் திறனுமென்க. ஆதலால் அரசரும் ஸேஞபதிகளும் அனுஸரித்த முறைகளினின்றும், ஜனங்களின் ஹ்ருதயத்தில் ஆஸனமிட்டு விளங்கிய ஆதர்சங்கள் பிரமாதமான மாறுதலுக்குட்படவில்லை. ஆனுல் மேற்கு நாகரிகத்தின் குணம் பரவி வருகிற இக்காலத்தில் எல்லா வகையாலும் விரோதங்களையும் ஆசைகளையும் வளர்க்கும்படி ஜன முழுதும் பால்ய முதலாகவே பயிற்சி பெறுகிறது. சரித்திரத்தில் பாதி யுண்மைகளையும் பொய்களையும் ஸ்ருஷ்டி செய்வதனுலும், இதர ஜாதியாரை எப்போதும் இடைவிடாமல் பழித்து அவர்களிடம் விரோதஎண்ணங்களை வளரச்செய்வதனுலும், பெரும் பகுதி பொய்களையும் மனிதப் பொது நலத்தைக் கருதி விரைவில் மறக்கத் தக்கனவுமாகிய ஸம்பவங்களுக்கு ஞாபகச் சின்னங்கள் கட்டி நிறுத்துவதனுலும், இங்ஙனம் ஒவ்வொரு ஜாதியும் தன்னைத் தவிர மற்ற ஜாதிகளுக்குத் தீய விபத்தாக மிகுந்து வருகிறது. அது மானுஷிகத்தின் ஊற்றிலேயே விஷத்தைக் கலந்தது போலாகிறது. நம்முள் மிகப் பெரியோரும் மிக நல்லோரும் வாழ்க்கையிலேயே காட்டிய ஆதர்சங்களைப் பழிப்பதுபோலாகிறது. உலகத்து ஜாதியருக்கெல்லாம் அஸுரத்தனமான ஸ்வார்த்த நாட்டமே, ஸர்வ ஸாமான்யமான பெருந் தர்மமென்று காட்டுவது போலாகிறது.

ஸயன்ஸ் (சாஸ்த்ரத்தின்) இடமிருந்து வேறெது வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம். தர்ம மரணம் விளைவிக்கும் இந்த மருந்தை மாத்திரம் கைக்கொள்ள வேண்டாம். பிற தேசத்துக்கு நீங்கள் விளைவிக்கும் தீமை உங்களையும் சூழாதென்று கணப் பொழுதும் நினையாதீர். உங்கள் மனையைச் சுற்றி நீங்கள் விதைக்கும் தீமைகள் கோட்டைகளாகு மென்றெண்ண வேண்டாம். ஒரு ஜாதி முழுதையும் தானே உயர்வென்ற அஸாதாரண கர்வ சிந்தையில் புகுத்தலும், தர்மத்துக்கிளகாத கல் நெஞ்சும், சோரத்தால் வந்த செல்வமும் பெருமையென்று கருதச் செய்தலும், போரில் வென்ற கொள்ளைகளை பஹிரங்கமான இடங்களில் காட்டித் தோற்ற ஜாதி யாரின் அவமானத்தை எக்காலமும் மறந்து போகாமல் பாராட்டுவதும், அவற்றைப் பள்ளிக் கூடங்களில் வைத்துப் பிற ஜாதியார் விஷயத்திலே குழந்தைகளின் மனதில் இகழ்ச்சியைப் பயிராக்கு வதும்....இவையெல்லாம் மேற்குத் திசையை அதுபுண் பட்ட இடத்தில் அபிநயித்தலாம். அந்தப் புண்ணில் வீக்கம் உயிரைத் தின்னுகிற வியாதியின் வீக்கம்.

நமது ஜீவனத்துக்கவசியமான தானியப் பயிர் கள் பல நூறாண்டு கருத்துடன் தெரிந்தெடுத்து விளைவித்த பயன்களாம். ஆனால் உயிராக மாற்ற முடியாத களைகளை நாம் பொறுமையுடன் யோசித்து யோசித்து வளர்க்கவில்லை. களைகளைப் பிடுங்குதல் சிரமம். கவனக் குறைவினால் பயிரைக் கெடுத்துப் பழைய காட்டு நிலைக்குச் செல்லவிடுதல் எளிது. அதுபோல் உங்கள் பூமிக்குத் தயவுடன் தன்னை இசைத்துக் கொண்டதாகிய நாகரிகமும் முற்காலத் தில் உழுது களை பிடுங்கியது போதாமல் இன்னும் நீங்கள் உழைத்துக் கவலையுடன் காக்கும்படி வேண்டு கிறது. ஸயன்ஸ் கூட்டுறவு முதலிய சுத்த நவீனங்களை

இடம் பெயர்த்து நடலாம். ஆனால் மனிதனுடைய ஜீவ குணங்கள் மிகவும் மெல்லிய நரம்புகளுடையன. நெடுந் தொலை பரவிய பல வேர்களையுடையன. அவற்றை இடம் பெயர்த்தால் செத்துப்போம். ஆதலால் மேற்குத் திசையின் ராஜ்ய ஆதர்சங்கள் உங்கள் ஆதர்சங்களை முரட்டுத்தனமாக அழுத்து வதை நான் அஞ்சுவேன். ராஜ்ய விஷயங்களையே முக்யமாக உடைய நாகரிகத்தில் நாடென்பது ஒரு மானஸிக பதார்த்தம். மனிதருக்குள்ளே சம்பந்த மெல்லாம் லாபத்தைக் கருதிய ஸம்பந்தம். இந்த நாகரிகத்துக்குச் சித்தத்திலே ஆதாரமில்லையாத லால், இதை நடத்துதல் பயங்கரமானபடி சுலபம். இந்த யந்திரத்தை நீங்கள் பாதி நூற்றாண்டுக்குள்ளே வசப்படுத்தி விட்டீர்கள். உங்கள் ஜாதியுடன் பிறந்து, உங்கள் நூற்றாண்டுகளில் வளர்ந்த உயிருள்ள ஆதர்சங்களைக் காட்டிலும் அந்த யந்திரத்தை அதிகமாக விரும்பும் மனிதர் உங்களுக் குள்ளே சிலர் உள்ளார். விளையாட்டுப் பரபரப்பில் ஒரு குழந்தை தனது தாயைக் காட்டிலும் விளை யாட்டுப் பண்டங்களிடம் தனக்கதிக அன்பிருப்ப தாக நினைத்துக் கொள்ளுதல் போலே.

மனுஷ்யன் மிகவும் உயர்ந்த ஸ்திதியை அடை யும்போது தன்னை மறக்கிறான். மானுஷிக அன்பாகிய தளையை மூலாதாரமாகவுடைய உங்கள் நாகரிகம் தன்னைத்தானே தொளைத்துத் தொளைத்துப் பார்க் கும் குணத்தால் தீண்டாதபடி உயிரின் ஆழத்திலே போஷிக்கப்பட்டது. வெறுமே ராஜ்ய விவகார சம்பந்தம் முழுதும் வேதனை மயம்; பரஹிம்ஸையே வடிவெடுத்து வீங்கிய புண்! அது வலிய உங்கள் கவனத்தைக் கவர்ந்தது. உங்கள் வாழ்விற்குறுதி யாகிய உண்மையை நீங்கள் முழுதும் உணர்ந்து கொள்ள வேண்டிய காலம் வந்துவிட்டது; பராக்காக

இருக்கும்போது உங்களுக்கு விபத்து வாராமல் தடுக்கும்படி முற்காலம் உங்களுக்கு ஈசனுடைய தானம். தற்காலத்தைப் பற்றி நீங்களே சரியான தீர்மானம் செய்யவேண்டும்.

ஆதலால் உங்களை நீங்களே கேட்டுக்கொள்ள வேண்டிய கேள்விகள் பின் வருமாறு:—"நாம் உலகத்தை அறிந்த நெறி பிழையா? மனித இயல்பை நேரே அறியாமல் நாம் அதனுடன் சம்பந்தங்கள் வகுத்துக் கொண்டோமா? மேற்குத் திசையின் மனவுணர்ச்சியே நேரானதா? மானுஷீகத்தின் பொது அவநம்பிக்கை யென்ற காப்புச் சுவரின் பின்னே அவள் ஜாதீய க்ஷேமத்தைக் கட்டுகிற வழிதான் நேர் வழியா?"

கிழக்கு ஜாதியொன்றெழுச்சி பெறுமோ என்று ஆலோசனை பண்ணும்போதே மேற்குத் திசை எத்தனை பயம் காட்டுகிறதென்பதை நீங்கள் கண்டு பிடித்திருக்கலாம். இதன் காரணம் யாதெனில் அவள் வாழ்விற்குத் துணையாகிய சக்தி தீய சக்தி. அது அவளுடனிருக்கும் வரை அவளுக்கு (மேற்குக்கு) க்ஷேமம்; இதர லோகத்துக்கு நடுக்கம். ஐரோப்பிய நவீன நாகரிகத்தின் ஜீவ விருப்பம் யாதெனில், சாத்தானைத் தனக்கு மாத்திரம் சொந்தமாக வைத்துக்கொள்ள வேண்டுமென்பது. அவளுடைய ஸகல ஆயுதங்களையும் தந்திரங்களையும் இந்த ஒரே நோக்கத்தில் செலுத்துகிறாள். சாத்தானை இங்ஙனம் கூவி நடத்தும் பூசைகள் செல்வத்தின் பாதை மூலமாக ஸர்வ நாசத்தின் கரையிலே கொண்டு சேர்க்கும். கடவுளுடைய பூமியின் மீது மேற்குத் திசை அவிழ்த்துவிட்ட பிசாசுகள் அவளையே பயமுறுத்துகின்றன. அவளைக் கோலடியாலே பயங்களுக்குள்ளே துரத்துகின்றன. எனவே, அவளுக்கு ஆறுதல் இல்லை. அவள் பிழைக்க விளைவிக்கும் அபாயங்களையும்,

அதனால் அவளுக்கேற்படும் அபாயங்களையும் தவிர மற்றதை யெல்லாம் மறந்துவிடுகிறாள். இந்த ராஜ்ய சிந்தனைப் பேய்க்கு மற்ற நாடுகளை பலியிடுகிறாள். அவற்றின் பிணத் தசையை உண்டு கொழுக்கிறாள். பிணங்கள் பச்சையாக இருக்கு மட்டும் அதிகக் கேடில்லை. ஆனால் அவை அழுகுவது திண்ணம். செத்தது பழி வாங்கும். எங்கும் அசுசியைப் பரப்பித் தின்போனுடம்பில் விஷமேற்றும். முன்பு, ஜப்பான் மானுஷீகச் செல்வமெல்லாம் கொண்டிருந்தாள். வீர ஸௌந்தர்யங்களின் இன்னிசையும் நியமத்தில் கம்பீரமும், ப்ரகாசத்தில் வளமும் பெற்று விளங்கினாள். அப்படியிருந்தும் மேற்குத் தேசங்கள் அவளை மதிக்கவில்லை. "மனுஷ்ய ரத்தத்தைக் குடிக்கும் சாத்தானுடைய நாய்கள் ஐரோப்பிய நாய்க் குகைகளிலேதான் வளர்க்காலாமென்பதில்லை; ஜப்பானிலும் அவற்றைக் குடியேற்றி மனிதத் துன்பங்களை இரை போட்டு வளர்க்க முடியும்" என்பதை நிருபணம் செய்யும்வரை ஜப்பானை அவர்கள் கவனிக்கவில்லை. அழகிய பூமியின்மீது நரகத் தீயின் வெள்ளக் கதவுகளைத் திறந்துவிடும் திறவுகோல் தன் கையிலும் இருக்கிறதென்றும்; அவர்களுடைய தாளத்தின் கணக்கிலேயே கொள்ளை, கொலை, அநாதைப் பெண்களைக் கற்பழித்தல் முதலியன செய்யும் பேய்க் கூத்து தனக்கும், பூமண்டலம் நாசமாகும்படி, ஆடத் தெரியுமென்றும் ஜப்பான் காட்டினவுடனே இவளைத் தமக்கு ஸமானமாக அங்கீகாரம் செய்தனர். மனிதன் தர்ம நெறியில் பக்குவப்படாத ஆரம்ப நிலையிலே தான் அஞ்சும் தெய்வத்தின் கொடுமை பற்றியே அதனிடம் பக்தி செலுத்துகிறான் என்பதை அறிவோம். ஆனால் மனிதன் இறுமாப்புடன் எதிர் நோக்கத்தக்க ஆதர்சம் இதுதானா? பல நூற்றாண்டுகளான நாகரிகத்துக்கப்பால், ஜாதிகள் இரவிலே

சுற்றும் காட்டு மிருகங்களைப்போலே, பரஸ்பரம் அஞ்சுவதும்; உபசாரக் கதவுகளை அடைப்பதும்; அடித்தல், தடுத்தல் இரண்டுக்கு மாத்திரமே கூட்டுறவு கொள்வதும்; வியாபார ரஹஸ்யங்களையும் ராஜ்ய ரஹஸ்யங்களையும், ஆயுத ரஹஸ்யங்களையும், பொந்துகளுக்குள்ளே மூடி வைப்பதும்; பரஸ்பரமாக வளர்க்கும் குலை நாய்களுக்குத் தமக்குச் சொந்த மில்லாத மாம்ஸத்தைப் போட்டு ஸமாதானம் செய்வதும்; எழுந்து நிற்க விரும்பும் வீழ்ந்த ஜாதியாரை மேலெழாதபடி அழுத்துவதும்; மனுஷ்ய ஜாதியின் மற்றப் பகுதிகளின் பலஹீனத்தையே தமக்கு க்ஷேமமாகக் கணிப்பதும்; தம்மைக் காட்டிலும் பலக்குறைவான ஜாதியாருக்கு வலது கையாலே மத ப்ரசாரம் செய்து, அவர்களை இடது கையாலே கொள்ளையடிப்பதும்; இவற்றையெல்லாம் கண்டு நாம் பொறாமைப்படத் தகுமா? இந்த நாகரிகத்தின் கொள்கைக்கு நாம் முழங்கால்படியிட லாமா? இந்த நாகரிகம் பூமண்டல முழுதிலும் பயத்தையும், லோபத்தையும், ஐயத்தையும் தன் ராஜ்ய தந்திரத்தைக் குறித்து வெட்கங்கெட்ட பொய்களையும், மனிதனுடைய ஸமாதானத்திலும் பொது ஸஹோதரத் தன்மையிலும் தனக்கு நல்லெண்ணமிருப்பதுபோலே பேசும் எண்ணெய் தடவின பொய்களையும், விதை தெளிப்பதுபோலே தெளிக்கிறது. நம் பூர்வ ஆஸ்திக்கு பதில் இந்த அன்யச் சரக்கை வ்ாங்க நாம் மேற்குச் சந்தைக்குப் விரைந்தோடிப் போகையிலே நாம் ஐயுறவு கொள்ள வேண்டாமா? தன்னைத் தான் அறிதல் சிரமமென் பதை நானறிவேன். குடிவெறியிலிருப்போன் தனக்கு வெறியில்லை யென்று சத்தியம் பண்ணு வான். எனினும், மேற்குத் திசை தனது விவகாரங் களைப் பற்றித் தானே அக்கறையுடன் யோசனை பண்ணி வருகிறாள். சோதனைகள் புதிது புதிதாகச்

செய்து பார்க்கிருள். ஆனல் அவள் ஒரு பெருவயி றுடையவள் போலாவாள். பெருவயிறன் தன் அமித போஜனத்தைக் கைவிட மனமில்லாமல் அஜீர்ணத் தால் உண்டாகி மூச்சைப் பிடிக்கும் பயங்கரக் கனவு களை மருந்தினல் தீர்த்துக் கொள்ளலாமென்ற வீணசையுறுவான். ஐரோப்பா தனது ராஜ்ய அமானுஷ்யத் தன்மையைக் கைவிட மனமில்லா திருக்கிருள். அதற்குச் சார்பான ஸகல நீசத்தர மான சித்த விருத்திகளையும் கைவிட விரும்பவில்லை. உபாயங்களை மாற்றுவதில் நம்பிக்கையுடையாள். சித்தத்தின் மாறுதலை வேண்டாள்.

அவர்களுடைய யந்திர அனுஷ்டானங்களை மூளையினல் விலை கொள்வோம்; ஹ்ருதயத்தால் கொள்ள வேண்டாம். அவற்றைச் சோதனை போடு வோம். அவற்றுக்குக் கொட்டகைகள் கட்டி வைப் போம். ஆனல் அவற்றை நமது வீடுகளிலும் கோயில்களிலும் தேவாஸனத்தில் வைக்கக் கூடாது. மிருகங்களைக் கொல்லுமுன்பு கும்பிட்டுக் கொல்லும் ஜாதிகள் உள. அவர்களிடம் நாம் பசித்தபோது மாம்ஸம் விலைக்கு வாங்குவோம். ஆனல் கொலையுடன் செய்யும் பூஜைகளையும் கிரயத் துக்கு வாங்கமாட்டோம். வியாபாரமும், யுத்த மும், ராஜ்யமும் வெகு முக்யமாதலால் அவற்றிலே லாபம் பெற யாது வேண்டுமாயினும் செய்யலா மென்ற மூடபக்தியால் நமது குழந்தைகளின் புத்தி கெட்டுப்போக விடமாட்டோம். மனிதனுடைய வியாபாரம் கேவலம் வியாபார தசைக்கு மேலே செல்ல வேண்டுமென்பதை அறியக்கடவோம். போரும் அப்படியே. அசுரம் அப்படியே. ஜப்பா னில் உங்களுடைய சொந்தக் கைத்தொழிலிருந்தது. அது எத்தனை நாணயம், எத்தனை யோக்யம், எத்தனை உண்மையென்பதை நீங்கள் செய்த பண்

டங்களாலே அறியலாம். அவற்றின் அழகு, பலம் பிறர் கண்டுபிடிக்கக்கூடாத சில்லரை விவரங்களிலே கூட மனம் பொய்யாமை, இவற்றைக் காணலாம். வியாபாரம் ப்ரதானமென்றும், யோக்யதை கேவலம் ஒரு சிறந்த தந்திரமென்றும் கொண்ட கண்டத்திலிருந்து பொய்மையின் வெள்ள அலை உங்கள் நாட்டின் மீது பெருகிவிட்டது. நகரமுழுவதிலும் பொய்யும் புளுகுமாக வியாபார விளம்பரங்களை எழுதி ஒட்டிக்கெடுத்தது போதாதென்று, உழவர் யோக்யமாக உழைக்கும் பச்சை வயற்புரங்களிலும், உதயத்தின் தெளிந்த ஒளி முதலாவது படும் மலைச்சிகரங்களிலும் ஒட்டத் தலைபட்டு விட்டீர்களே—உங்களுக்கு வெட்கமில்லையா? மானத்தையும், உள்ள மென்மையையும்அடிக்கடிஅழித்தழித்து மழுங்கச்செய்துவிடுதல் இக்காலத்தில் மிக எளிது. ஏனெனில் இப்போது பொய்கள் வர்த்தகமென்றும் அரசென்றும் தேச பக்தியென்றும் பெயர் புனைந்து செருக்குடன் உலாவுகின்றன. எனவே, அவை நமது வாழ்க்கையில் ஓயாமல் தலையிட்டுக் கொண்டிருப்பதை நாம் கண்டித்தல் உண்மையான ஆண்மைக்குத் தகாத சித்தமென்மையாகக் கருதப் படுகின்றது.

இது எப்படி வந்து முடிந்ததென்றாலோ, மரணம் வந்தாலும் சொன்னது தவறார், அற்பலாபத்திற்காகப்பிறரை வஞ்சித்தல் இகழ்ச்சியென்று கொள்வார், போரிலும் மானங்கெட்ட செய்கை செய்வதிலும் தோல்வியே மேலென்று கொள்வார், அப்படிப் பட்ட வீரரின் மரபில் பிறந்த நீங்கள் பொய்களை அதிதீவிரமாக வழங்குதலும், அதனாலே லாபம் ஸம்பாதிப்பதும் இகழ்ச்சியில்லையென்று கருதும் ஸ்திதிக்கு வந்துவிட்டீர்கள். இது "நவீனம்" என்ற பதத்தின் மோஹத்தால் உண்டானது.

வெறுமே பயனைக் கருதல் நவீனமாயின் அழகைத் தேடல் ஸநாதனம். அற்பமான அஹங்காரம் நவீனமாயின் மானுஷ்ய ஆதர்சங்கள் புராதனம். உபாயத்துக்கும் யந்திரத்துக்கும் வேண்டி மனிதனை நறுக்கி நொண்டியாக்குகிற திறமை எவ்வளவு "நவீன"மாயினும் அது நெடுங்காலம் வரை சாகாமல் பிழைத்திருக்க மாட்டாது.

ஆனால் நாம் ஐரோப்பாவின் மமதாவ்சனங்களிலிருந்து நம் மனதை விடுவித்துக் கொள்ள முயலும் போது, அந்த மோஹத்தின் புதைமணல்களிலிருந்து நாம் தப்ப வழி தேடுங்கால்,—மேற்கின் விஷயத்தில் முழுதுமே அவநம்பிக்கைப்படும் மற்றோர் அந்தம் வரை போய்விடக் கூடாது.

மோஹாரம்பத்தில் உண்டாகும் மயக்கம் எவ்வளவு பொய்யோ, அவ்வளவு மோஹம் தீரும்போதுண்டாகும் விரோதமும் பொய். ஸஹஜமான மனநிலை வேண்டும். அங்குதான் நமக்கு வரும் விபத்துக்களைக் கண்டு விலக முடியும். விபத்தை விளைவித்த பொருளிடம் விரோதமும் தோன்றுது. எப்போதும் இயற்கையிலே நம் மனதில் ஓரிச்சை தோன்றலாம்; ஐரோப்பாவுக்கு அது கொடுத்த காசையே கொடுப்போமென; அதாவது இகழ்ச்சிக்கிகழ்ச்சியும் தீமைக்குத் தீமையும் திருப்பிச் செலுத்துவோமென்று; அதுவும் பிழை; அதுவும் அனுகரணம். மஞ்சளென்றும் செம்மையென்றும் கருமையென்றும் கபிலவர்ணமென்றும் தான் நினைக்கும் ஜாதியாரிடம் அவள் நடந்து கொள்ளுகிற மாதிரியிலிருந்து வெளிப்படும் குணத்தை. அவளுடைய கெட்ட காலத்தை, அனுகரணம் செய்வதாம். இந்த இடத்தில் கிழக்கினராகிய நாம் நமது குற்றத்தையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். நமது பாவமும் அத்தனை பெரிது. அதனிலும் பெரிதென்று கூறலாம்.

நாமும் மனித ஜாதியை அவமதித்தோம். குறிப்பிட்ட மதம் அல்லது நிறம் அல்லது ஜாதியைச் சேராதவர்களை நாமும் இகழ்ந்து கொடுமை செய்தோம். வலிமையைக் கண்டஞ்சும் நமது பலக் குறைவினாலே, நாம் மதி சோர்ந்து அதற்குப் பதிலாகப் பிறர் மஹிமையைக் கண்டு குருட்டுத்தனங் காட்டும் மற்றொரு பலக்குறைவில் போய் விழுகிறோம்.

நல்லதும் பெரிதுமாகிய ஐரோப்பாவை நாம் அறிய முயலும்போது, அற்ப லோபி ஐரோப்பாவினிடமிருந்து நம்மைக் காத்துக்கொள்ளலாம். துன்பங்களை நோக்கும்போது மனிதன் தனது தரப்பில் நியாயந் தவறுதல் சுலபம். மனம் கஷ்டப்படுகிறபோது கொள்கைகள் கட்டுவதிலிருந்து சூன்ய வாதம் உண்டாகிறது. தோல்வி மிகவும் பெரிதாக இருக்கையிலே, நாசத்தின் ஆழத்திலிருந்து புதிய உயிரை எழுப்புகிற வலிமையைத் தனக்குக்கொண்டு தருகிற சக்தியினிடம் ஒரு ஜாதி நம்பிக்கை இழக்கும்போது, அதற்கு மனுஷ்ய வாழ்க்கையிலேயே நிராசை தோன்றிவிடும். ஆத்ம, மானுஷ்ய விதிகளை மறக்கும், யந்திரம் போன்ற, அவயவங்களையுடைய தாய், ஆணையும், பெண்ணையும், சிசுவையும் தன் கீழே போட்டு நசுக்குகிற பெரிய கூட்டுறவுகளுக்கு விரோதமாகப் போராடும் ஜீவனொன்று மேற்கின் கண்ணே இருக்கத்தான் செய்கிறது. அந்த ஜீவனுடைய புலனுணர்ச்சிகள் அதற்கன்பில்லாத ஜாதியாருடன் விவகரிக்கும்போது, அவமதிப்புக்குரிய பயங்கரமான வழக்கங்களால் முழுதும் மழுங்கிப் போவதில்லை. மேற்கின் பலம் கேவலம் மிருக, யந்திர, பலம்போலிருந்தால், இத்தனை உன்னத நிலைக்கு வந்திராது. அதன் ஹ்ருதயத்தில் தெய்வாம்சம் இருக்கத்தான் செய்கிறது. அதன் கைகள்

உலகத்திற்கிழைக்கும் தீமைகளை யெண்ணி அந்த அம்சம் கஷ்டப்படுகிறது.

அதன் உன்னத இயற்கையின் அந்த நோயி விருந்து, ஒரு ரஹஸ்ய மருந்துத் தைலம் பொழி கிறது. அது அப் புண்களை ஆற்றும். மீட்டு மீட்டும் பலமுறை மேற்கு தன்னை எதிர்த்துப் போர் செய்து வருகிறது. தன் கையால் பலங் குறைந்தவருடம்பில் கட்டிய தளைகளைத் தானே வெட்டிற்று. பண ஆசை யினால் ஒரு பெரிய தேசத்தின் தொண்டையில் விஷத்தை இறக்கிப் பிறகு விழித்தவுடன் தானே அந்த தேசத்தினின்றும் விலகிக் கையலம்பிக் கொள்ளும். இதனால் செத்தனவும், பலிதமற்றனவு மாகத் தோன்றுமிடங்களிலே கூட மானுஷ்யத்தின் ரஹஸ்ய ஊற்றுக்கள் இருப்பதாக ருஜுவாகிறது. இத்தனை குரூரமான கோழைத்தனத்திற்கும் மிஞ்சி யிருக்கும் அதன் ஆழ்ந்த உண்மை லோபமன்று. பரோபகார ஆதர்சங்களில் அதற்குள்ள பக்தி யென்று ருஜுவாகிறது.

நவீனக் கிழக்கின் புத்தியை அது வெறும் வெளிப் பகட்டினால் மாத்திரமே மோஹிப்பித்து விட்ட தென்றால் ஐரோப்பாவுக்கும், நமக்கும் ஒருங்கே அநீதி செய்தலாம். அதன் தர்ம ஒளி பீரங்கிப் புகை, சந்தைப் புழுதிகளை ஊடுருவியும் தெளிவுற விளங்குகிறது. அது நமக்கு தார்மிக விடுதலையின் ஆதர்சத்தைக் கொணர்ந்து கொடுத் தது. இதன் அஸ்திவாரம் ஜன ஸங்கே தங்களுக்குக் கீழே நெடுந்தூரம் சென்றது. இதன் செய்கை மண் டலம் பூலோக விசாலம்.

தன் அருவருப்பை மீறியும், தான் ஐரோப்பா விடம் அதிகார வழிகளைப் பற்றி மாத்திரமேயல்லா மல், மானஸிக தார்மிக லோகச் செய்திகளும் பல

கற்றுக்கொள்ள வேண்டுமென்று ஸ்வபாவத்தினாலே தெரிந்து கொண்டது கிழக்குத் திசை. இன்னும் ஐரோப்பா நமக்குக் கற்றுக் கொடுத்தன யாவை யென்றால், குடும்ப ஜாதிகளின் நலத்தைக் காட்டிலும் உலக நன்மையின் உயர்ந்த கடமைகளே மேலென்றும், சட்டம் புனிதமென்றும் காட்டிற்று.

சட்டம் பரிசுத்தமென்பதால், ஸமூஹம் தனி மனுஷ்யனுடைய சேஷ்டைகளைக் கடந்ததாகிறது. ஸமூஹ அபிவிருத்தியிலே தொடர்ச்சி தவறாதிருக்கிறது. எல்லா நிலைமைகளில் உள்ள எல்லா மனிதருக்கும் நியாயம் கிடைக்கிறது இவையனைத்திலும் விசேஷம் யாதெனில், அவள், (ஐரோப்பா,) நமது கண் முன்னே, பல நூற்றாண்டுகள் வருந்தி வித்தி பெற்று, விடுதலையின் கொடியைத் தூக்கிக் காட்டுகிறாள். கொள்கையில் விடுதலை, யோசனையில் விடுதலை, செய்கையில் விடுதலை, கலையிலும் இலக்கியத்திலும் ஆதர்சங்களிலும் விடுதலை!

நம் ஆழ்ந்த மதிப்பை ஐரோப்பா வென்ற படியாலேதான், அவள் சண்டைக்கிடமான பலஹீனத்தையும், பொய்மையையும் காட்டுகையில் நமக்கோரபாயமாகிறாள். மிகவும் சிறந்த உணவுடன் சேர்த்துக் கொடுக்கும் விஷத்தைப் போலாகிறாள். நமக்கோரிடத்தில் க்ஷேமமுண்டு; அதை எப்போதும் நம்பலாமென்று நம்புகிறோம். எங்ஙன மெனில், அவள் மயக்குக்களையும், கடுமையான ஆக்ரமணங்களையும் நாம் எதிர்ப்பதில் அவளையே துணை கூப்பிடலாம். நிறைவின் அளவொன்று தன் சொந்தமாகக் கொண்டு சுமந்து வருகிறாள். அந்த அளவு கொண்டே அவளுடைய வீழ்ச்சிகளையும், தோல்விப் படிகளையும் அளக்கலாம். அதனால் அவளை அவளுடைய சொந்த நியாய ஸ்தலத்தின் முன்னே இழுக்கலாம், வெட்கப்படுத்தலாம். அந்த வெட்கம்

உண்மையான [illegible] லக்ஷணம்.

அவன் [illegible] காட்டிலும் விஷம் வலிதாய் [illegible]. இன்று அவனிடம் வலிமை [illegible] அடையாளமன்று போலும். [illegible] தராசு கவிழ்ந்தபோதுதான் அது [illegible] வெளியே தோன்றுவதோர் பொருள் போலும். தீமையானது விதியைப்போல மோதுகின்ற வீழ்த் தும்—அதன் [illegible] பெரு [illegible]— என்றஞ்சுகிறோம். இறுதியில் அதன் வரம்பு கடந்த அளவுப் பிழையினால் நந்நிலை தவறி விழுந்துவிடு மென்பது மெய்யேயாயினும், அது விழுமுன் விளைக் கும் கஷ்டம் பின்பு நீக்கமுடியாததாய்விடலாம். ஆதலால் நான் உங்களைப் பிரார்த்திக்கிறேன்; பக்தி வலிமையும் மனத் தெளிவும் கொண் டிருங்கள்.

“லாமர்த்ய” மென்னும் இரும்புத் தாழ்களால் இணைப்புண்டதும், [illegible] மீது செல்வதும் [illegible] “நவீன முன்னேற்றம்” என்னும் ஆபாஸ நிர்மாணம் நெடுங்காலம் [illegible] சேர்ந்திராது. மோதுகின்ற [illegible] அது ஸங்கேதக் கோட்டின் [illegible] ஸ்வேச்சைப்படி தன் கதியை நிர்ணயித்துக்கொள்ள முடியாதபடி அத்தனை அதிக பாரமுடையது. இதனை அறிந்து கொள்ளுங்கள். தண்டவாளத்தை விட்டு நழுவினால் அதன் எண்ணற்ற வண்டித் தொடர்கள் தடுமாறிப் போகும். ஒரு நாள் இது நாசக் குப்பையிலே சிதறி விழும்போது உலகத்தின் வியாபாரத்துக்குப் பெரிய கஷ்டமான தடையாகும். இப்போதுகூட இதன் அடையாளங்கள் தெரிய வில்லையா? யுத்த முழக்கத்துக்கிடையே, பகையை

...ன் அலறுதல், நிராசையின் ரோதனங்கள், இந்த நாகரிகத்தின் அடியிலே பல காலமாகச் சேகரிப்புற்றுவரும் சொல்ல முடியாத மலத்தின் கடைதல், இவற்றுக்கிடையே இவற்றை ஊடுருவி நமக்கொரு வாக்கு வரவில்லையா? அந்த வாக்கு: "ஜாதி அஹங்காரமென்ற கோபுரம் தேசபக்தி என்ற புனைபெயர் கொண்டதாய்த் தன் துரோகக் கொடியை வானத்துக்கெதிரே காட்டுகிறது. இது தன் பாரம் பொறுமல் அசைந்து சடேலென்று விழும். இதன் கொடி மண்ணைத் தழுவும். இதன் ஒளி அவிந்துபோம்" என்று நமது ஜீவனுக்குக் கூறவில்லையா? எனது ஸ்நேஹாதரரே, படர்ந்தெரியும் செந்தீ வானத்து மீன்களுக்கெதிரே சலசலவென்று நகைக்கும்போது, வானத்து மீன்களை நம்புங்கள்—நாசத் தீயை நம்ப வேண்டாம். இந்தத் தீ அவிந்து தானே மடியும் போது, அதன் ஞாபகச் சின்னம் சாம்பலிலே கிடக்க நித்யமான ஒளி கிழக்குத் திசையிலே தோன்றும். கீழ்த் திசையே மனித நாகரிகத்தின் உதய ஸ்தானம் அப்படிப்பட்ட நாள் ஏற்கெனவே பிறந்துமிருக்கலாம். யாரறிவார்? ஆசியாவின் கிழக்கோரத்து வானடியில்அந்தஸூரியன்தோன்றிவிட்டானோ?எனது முன்னோர்களாகிய ரிஷிகள் செய்தது போலே நானும் இந்தக் கீழ்த்திசை உதயத்திற்கு வந்தனம் சொல்லுகிறேன். இஃது பூமண்டல முழுதையும் ஒளியுடையதாக்கும். இது விதி.

பேரிரைச்சலுடைய அக்காலத்தின் கூக்குரலுக்கு மேலே எனது சத்தம் பெரிதாகக் கேட்டும்படி செய்ய என்னால் முடியாது. என் சத்தம் அதி பலஹீனமென்பதை நானறிவேன். தெருவிலே போகும் சிறுவன்கூட என்மீது "லௌகிக மறியாதவன்" என்ற அடை மொழியை வீசி யெறியலாம். அது என்னுடைய சட்டையின் வாற்புறத்தில் ஒட்டிக் கொண்டு, அழிக்க முடியாமல் போய்விடலாம்.

அதனால், "மரியாதையுள்ள கிரஹஸ்தர்"களின் மதிப்புக்கு நான் பாத்திரமாகாமல் போய்விடலாம். ஸிம்ஹாஸனங்கள் மதிப்பிழந்து போகவும், தீர்க்க தரிசிகள் அகால வஸ்துக்களாகவும், ஏற்பட்ட இந்தக் காலத்தில்—எல்லா வாக்கையும் மிஞ்சிச் சந்தை யிரைச்சல் பெரிதாகக் கேட்கும் இந்த நாட்களில்.... ஒருவன் "ஆதரிசி" (உத்தம தர்மத்தையே நாடு வோன்) என்று பெயர் வாங்குவதனால், தடியடிக் கூட்டத்தாரிடமிருந்து அவனுக்கு அபாயம் நேரிடக் கூடுமென்பதையும் அறிவேன்.

எனினும், ஒருநாள் நான் நவீன விநோதங்கள் மலிந்து கிடக்கும் யோகோஹாமா பட்டணத்தின் வெளிப்புறத்தில் நின்று உங்கள் தென்கடலில் பொழுது சாய்வதைக் கண்டேன். தேவதாரு மரங்க ளுடுத்த குன்றுகளுக்கிடையே ஸூர்யாஸ்தமயத்தின் சாந்தியையும் மஹிமையையும் நோக்கினேன். பொன்னிறமான வானடிக்கு நேரே, பூஜிபாமாவின் மலையொளியானது தன்னொளியில் தான் மங்கும் தேவனைப்போலே மங்கலாயிற்று. மாலையின் மோக னத்திடையே நித்ய காலத்தின் ஸங்கிதம் பொங்கி வந்தது.

அப்போது கருதினேன்;—வானமும் பூமியும் உதயாஸ்தங்களாகிய கவிதைக்கும் ஆதர்சிகளுக்கும் புலவர்களுக்குமே அனுகூலம்; ஹ்ருதய ராகங்களி னிடம் திடமான இகழ்ச்சியுடைய சந்தைக்காரர் சார்பில்லை. தனது தேவத் தன்மையை மறந்து நிற்கும் காலம் மாறி மறுபடியும் மனிதன் வானம் எப்போதும் மண்ணைத் தீண்டி நிற்கிறதென்ற ஞாபக மெய்துவான். மனுஷ்ய ரத்தத்திற்கு மோப்பங் கொண்டு வானத்தை நோக்கி அவரும் நவீன காலத்து வேட்டை ஓநாய்களின் வசத்தில் மண்ணுல கம் ஸதாகாலத்துக்கு விட்டுவைக்கத் தக்க தன்று— என்ற நினைப்பு மனிதனுக்கு மீண்டு வரும்.

# கல்வி கற்பிக்கும் பாஷை

கல்வியினால் பயனுண்டா இல்லையா என்பதை குறித்துப் பேசுவதே மிகை. எனினும் அதைக் குறித்து விவாதங்கள் சில ஸமயங்களிலே ஏற்படுதல் காண்கிறோம். உழுவோனுக்குப் படிப்பு வந்தால் உழவுத் தொழில் நின்றுபோமென்றும், பெண்ணுக்குக் கல்வி கற்பித்தால் அவளுடைய பதியும் ஈசனுமாகிய கணவனுக்கு நேரே ஆராதனை நடத்த மாட்டாளென்றும் பலர் ஐயப்படுகிறார்கள்.

கண்ணிலே துணியைக் கட்டி ஓட்டுவதே செக்குச் சுற்றுகிற மாட்டுக்கு நல்லது. அதற்கு வெயிலொளியெதற்கு? மாமூலாகிய செக்கைச் சுற்றிக் கொண்டிருப்பதே மனிதனுக்குப் பரம தர்மமென்று கருதப்படும் இந்த நாட்டில் 'மேதாவிகள்' எல்லாவிதமான ஒளியுமே மனிதனுக்குப் பகையென்று கருதி வெறுத்தல் ஸஹஜந்தானே?

எனினும் பகலொளி நமக்குக் காரியத் துணை மாத்திரமன்று; கண் விழிக்கச் செய்யும் கருவியும் அதுவே. இதனிலும் முக்யமான விஷயம் யாதெனில் ஒளியில் ஜனங்கள் கூடுகிறார்கள்; இருளிலே பிரிந்து

செல்லுகின்றனர். மனிதனிடம் அறிவுதான் ஒற்றுமைக்கு மிகப் பெரிய ஸாதனம். வங்காளத்தில் ஒரு மூலையிலுள்ள மாணுக்கனுக்கும், ஐரோப்பாவின் கோணமொன்றிலுள்ள படிப்பாளிக்கும் நெருக்கம் அதிகம். இந்த ஐரோப்பியனுக்கும் - இவனுடைய பக்கத்து வீட்டில் அக்ஷரந் தெரியாமல் குடியிருப்பவனுக்கும் உள்ள நெருக்கம் குறைவு. அறிவினல் உலக முழுதும் ஒன்றுபட்டுக் காலதேசங்களால் நேரிடும் பேதங்களெல்லாம் நீங்கிவிடுமென்ற பெரும் பயன் ஒருபுறமிருக்க, எந்த மனித ஜந்துவும் கல்வியால் உண்டாகும் பெருமகிழ்ச்சி பெருதவண்ணம் எந்தக் காரணம் பற்றியும் தடுத்தல் எவ்வளவு அஸம்பாவிதமென்பதை இங்கு கருதுவோம்.

நமது ஹிந்து தேசத்தில் இந்த அறிவின் தீபங்கள் எத்தனை மங்கலாகவும் இடைவிட்டும் எரிகின்றன என்பதை யோசிக்கும்போது, உலகத்தார் அனைவரும் இக்காலத்தில் நாடிச் செல்லும்—'அறிவினல் ஒற்றுமைப்படுதல்' என்ற—பாதை நமக்கெவ்வளவு கஷ்டமென்பது தெளிவாகும். கல்வி முறையைச் சீர்த்திருத்தும் பொருட்டு இடையிடையே இந்நாட்டில் சில காரியங்கள் செய்யப்படுகின்றன. எனினும் அதன் பரவுதலுக்குள்ள தடைகள் எப்போதும்போல் மகத்தாகவே இருக்கின்றன.

நாட்டோரத்தில் நதி பாய்ந்து செல்லுகிறது. மழையோ வான்முழுவதினின்றும் பெய்கிறது. ஆதலால் பயிருக்குத் தோழமை செய்வதில் வானத்தைக் காட்டிலும் நதிக்குத் தாழ்ந்த ஸ்தானம். மேலும், நதியின் ஆழமும் திறமையும் மழையைப் பொறுத்து நிற்பன. இடியாயுதம் கொண்ட இந்திரனுடைய பதவியிலிருந்து நமது நாட்டை ஆளும் அதிகாரிகள் ஏராளமாக இடியிடிக்கிருர்கள். மழை கொஞ்சந்தான் பெய்கிருர்கள். வங்காளிகளின் கல்வி

பயிற்சி எவ்வளவு குறைந்த பலன் தருகிறதென்று நகைக்கும் அவர்களுடைய பரிஹாஸ மின்னலும் மேற்படி இடிகளுடன் கலந்துவெட்டுகிறது. அதிர்ஷ்ட ஹீனராகிய வங்காளிகளைப் பழுக்கவைத்தது போலே கல்வி யிலாகா அதிகாரிகளையும் மண்ணுக் குள்ளே போட்டுப் பழுக்க வைத்திருந்தால், இப்படி ஓரத்தில் மென்மையாகவும் நடுவில் காயாகவும் இருப்பதன் காரணம் பழுக்க வைக்கையிலே வெயி லொளிபடாத குற்றமென்பதை அவர்கள் சாஸ்த்ர ஹேதுக்களுடன் நிருபணம் செய்ய முற்பட்டிருப் பார்கள்.

மேற்கு நாட்டார் மேற்கேயே இருந்துகொண்டு கீழ்த்திசையின்மேல் ஏறி வாராதிருந்த காலத்தில், இந்த தேசத்துத் திண்ணைப் பள்ளிக்கூடங்களிலும், சாஸ்திரப் பாடசாலைகளிலும் நடந்த தார்க்கிக குஸ்திகளையும், இலக்கண வலைப்பின்னல்களையும் காட்டி 'நாங்கள் வருமுன்பும் உங்கள் கல்விப் பயிற்சி அத்தனை சிறப்பில்லை, கண்டீர்' என்று மேற்படி அதி காரிகள் ஆக்ஷேபவுரை கூறலாம். இதுவெல்லாம் இருந்தது மெய்தானென்பதை நானும் அங்கிகாரம் செய்து கொள்ளுகிறேன். எந்த நாட்டிலும் பழைய பண்டித வழக்கங்களைச் சொல்லுதல் மிகவும் சிரமம். அவை இங்கும் இருக்கத்தான் செய்தன; வீழ்ச்சி பெற்ற நாட்டிலே கல்வியின் உள் ஸாரத்தைக் காட்டிலும் புறக்கோலங்களை மேலாக பாவித்தல் ஒருவேளை அதிக சுலபமாகலாம். ஆனால் மூலைகளிலே யிருந்த "பண்டிதர்" மாத்திரமே தமது பாண்டித் யத்தை இப்படி விழலாக்கி வந்தனர். மற்றப்படி அவ்வக்காலத்திற்குரிய பொது அறிவுப் பயிற்சி தேச முழுவதிலும் யாதொரு தடையுமின்றிப் பரவி வந்த தென்பதில் ஐயமில்லை. கலப்பை உழும் உழவனும் அந்தப்புரத்து ஸ்த்ரீயும் ஜீவசக்தி பெறும்படி அந்தப்

பயிற்சியாகிய ஜீவநதி அவர்களுக்கும் போய்ச் சேர்வதற்குரிய வாய்க்கால்கள் இருந்தன. ஆதலால், வேறெவ்விதமான குறைகள் இருந்தாலும், ஜனஸமூஹம் தன்னிலே தான் நிறைவு பெற்றிருந்தது.

நமது தற்காலத்து அன்னியக் கல்வியோ அப்படியில்லை. இது பள்ளிக்கூடம் அல்லது கலாசாலையுடன் நின்று போகிறது. அந்தப் படிப்பை நாம் பள்ளிக்கூடத்திலேயே குறிப்பலகைபோல் கட்டித் தொங்கவிட்டு வருகிறோம். அது நம்முடைய உயிரில் கலக்கவில்லை; அது நம் குறிப்புப் புத்தகங்களில் அடங்கிப் போகிறது. நமதெண்ணமாகவும் செயலாகவும் உருமாறுவதில்லை. நமது தேசத்து வித்வான்களில் சிலர் மேற்படி கல்வியின் அன்னியத் தன்மையே இதன் காரணம் என்று சொல்லுகிறார்கள். இதை ஏற்றுக்கொள்ள எனக்கு விருப்பமில்லை; ஏனெனில் உண்மைக்கு பூமி சாஸ்திர வரம்புகள் கிடையா. கிழக்கே கொளுத்திய தீபம் மேற்குக் கண்டங்களுக்கும் ஒளிதரும். இல்லாவிடில், அதற்கு ஒளியே இல்லையெனலாம். இந்தியாவுக்கு மாத்திரந்தான் நன்மை தருமென ஒரு ஜ்யோதியிருந்தால், அது நன்மையேயில்லையென்று நான் உறுதியாகக் கூறுவேன். இந்தியாவுக்கென்று ஒரு தனிக் கடவுள் வைத்தால், அது நம்மை உலகப் பொதுவாகிய கடவுளின் ராஜ்யத்துக்குள் புகவொட்டாமல் தடுக்கும்.

உண்மையாதெனில் நமது நவீன கல்விக்குத் தகுந்த வாஹனம் கிடைக்காதபடியால், அது தாராளமாக முன்னேற்றம் பெற இடமில்லை. அறிவு மனிதருக்கெல்லாம் பொதுவென்பதை உலக முழுதும் ஒப்புக்கொள்ளுகிறது. எக்காரணத்தாலோ இந்த மாகாணத்தில் மாத்திரம் அக்கொள்கை அங்கீகாரம் பெறவில்லை; மஹான் கோகலே இந்த விஷ

யத்தில் மிகவும் பாடுபட்டார். அவருக்கு வங்காளத்திலேதான் அதிகத் தட்டுதல் உண்டானதாகத் தெரிகிறது. ராஜ்ய ஆதர்சங்களாகிய வானத்தில் ஏறிப் பறக்க நிச்சயித்திருக்கும் நாம், மற்றபடி ஜன வாழ்க்கையில் பின்னே நடந்து செல்ல எண்ணங் கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது.

பொதுஜனக் கல்வியே உயர்தரக் கல்வியின் வேர்களுக்கு ஜீவரஸமேற்றுகிறது. அந்தப் பொதுக் கல்வி இந்நாட்டில் இல்லை; அதனுடன் இப்போதொரு புதிய தொல்லையும் வந்து சேர்ந்திருக்கிறது. ஏற்கெனவே பள்ளிக்கூடத் தொகை குறைவு. அது போதாதென்று, பள்ளிக்கூடங்களின் இட அளவைக் குறைத்து ஸாமான்களை அதிகப்படுத்தி, அவற்றின் பயனைக் குறுக்க வேண்டிய முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. மாணக்கர் இல்லாவிட்டால் பெரிதில்லை, பாடசாலைக்கு வேண்டிய உபகரணங்கள் குறையக்கூடாதென்பது அதிகாரிகளுடைய கக்ஷி.

மனிதனுக்கு உணவு வேண்டும்; அதை வைத்துண்ணப் பாத்திரங்களும் வேண்டுமென்பதை நான் நன்ருக அறிவேன். ஆனல் ஆஹாரமே குறையுமிடத்தில் பாத்திரம் வாங்குவதிலே அதிகப் பணம் செலவிடக் கூடாது. பாரத தேச முழுமைக்கும் அறிவாகிய உணவு இனமாகக் கொடுக்கும் அன்ன ஸத்திரங்கள் ஸ்தாபனமான பிறகு, அதனை வைத்துண்ண நாம் தங்கத் தாம்பாளம் வேண்டுமென்று பிரார்த்தனை பண்ணலாம். நாம் ஏழ்மைக்கிரைப்பட்டு நிற்கையிலே, கல்விக்குரிய உபகரணங்களை அதிகச் செலவுக் கிடமாக்குதல், ஒருவன் தன் பணமுழுவதையும் கொடுத்துப் பணப் பைகள் விலைக்கு வாங்கும் மடமைபோலாகும். முற்றத்தில் பாய்களை விரித்து நம்முடைய ஜனக் கூட்டங்கள்

நடைபெறுகின்றன. நமது பெருஞ் செல்வர் வீட்டு விருந்துகளுக்குக்கூட வாழையிலை போதும். நாம் முடிவணங்கும் நமது தேசத்து மஹான்களிலே பலர் குடிசைகளில் பிறந்து வளர்ந்தோர். ஆதலால், லக்ஷ்மியினிடம் வாங்கின இரவல் கோலங்களால் ஸரஸ்வதி கோயிலை அலங்காரம் செய்தாலொழிய நிறைவுண்டாகாதென்ற கொள்கையை நமது நாட்டில் யாரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

உலக வாழ்க்கை யென்பதொரு சங்கைக்குக் கிழக்குத் திசையாராகிய நாம் தனித் தீர்ப்புக் கண்டுபிடித்து வைத்திருக்கிறோம். நமக்கு வேண்டிய உணவும் உடையும் சொற்பம். நமது நாட்டு சீதோஷ்ண நிலைமையினால் இது ஸாத்யமாகிறது. நமக்குச் சுவரைக் காட்டிலும் சாளரம் அதிக அவஸரம். நமது வஸ்திரங்களுக்குத் தறியினிடத்தே யுள்ள ஸம்பந்தத்தைக் காட்டிலும் ஒளியுடனும் காற்றுடனும் அதிக ஸம்பந்தம். பிறதேசங்களில் ஆஹார பதார்த்தத்திலும், மடைப்பள்ளி வேளையிலும் சேரும் உஷ்ணம் இங்கு நமக்கு ஸூர்யன் நேராகவே தருகின்றான். இந்த இயற்கை ஸௌகர்யங்கள் நமது வாழ்க்கையை ஒருவித வடிவத்திலே சமைத்திருக்கின்றன. அவ் வடிவத்தை நமது கல்வி விஷயத்திலே மறந்தால் நமக்கு லாபகரமன்று.

நான் வறுமையைக் கீர்த்திக்க வரவில்லை. வறுமை தமோகுணப் பயன்; அது மிகத் தாழ்ந்தது. ஆனால் செல்வத்தின் இன்பங்களைக் காட்டிலும், டம்பமில்லாமை அதிக விலையுடையது. அது ஸத்வ குணப்பயன்; மிகவும் உயர்ந்த பொருள். வெறுமே அமித போகங்களைக் குறைத்ததன் பயன் மாத்திர மன்று; நான் சொல்லும் டம்பமின்மை நிறைவுக் கொரு குறி. இது மனுஷ்ய ஜாதிக்கு வசப்பட்டால், இப்போது நாகரிகத்தை மறைக்கிற [illegible]

ந்து போகும். டம்பத்தாலேதான் ஜீவனுக்கு அவசியமான பண்டங்கள் அளவு குறைந்தும் விலையேறியும் போகின்றன.

நாகரீக லோகத்தில் பெரும்பான்மையான வஸ்துக்கள் உண்ணல், களித்தல், கல்வி, பயிற்சி, அரசு, வியாஜ்யம் முதலியன—தத்தமக்குரிய எல்லையை மீறி அதிக எல்லையை வ்யாபித்து நிற்கின்றன. இவற்றால் உண்டாகும் சுமையில் பெரும் பகுதி அநாவசியம். இதைச் சுமப்பதில் மனிதன் தனது பெரிய பலத்தைக் காட்டுகிறானே யொழிய, புத்திக் கூர்மை காட்டவில்லை. இதை வானத்திலிருந்து பார்க்கும் தேவர்களுக்கு—ஒரு ராக்ஷஸன் குளத்தில் அதிக ஆழத்திலிறங்கி, நீச்சுத் தெரியாமல் தத்தளிக்கையில், அவன் குள முழுதையும் தன் வீணான வலிய முயற்சிகளால் குழப்பிக்கொண்டு, இங்ஙனம் குழப்புவதால் ஏதேனும் லாபம் கிடைக்குமென்ற மூட நம்பிக்கை கொள்வதுபோல தோன்றும்.

ஸம்பூர்ண குணத்தில் உண்டாகும் எளிமை, டம்பமில்லாமை, மேற்குத் திசையில் தோன்றினால், பிறகு அவர்கள் வீட்டு நடைகளிலே ஜப்பானிய விசிறிகளும், சீனத்துப் பீங்கான் தட்டுக்களும், மான் கொம்புகளும் இரா. அவர்கள் வீட்டு மூலைகளிலே குவித்து வைத்திருக்கும் தட்டுமுட்டுக் குப்பையெல்லாம் மறைந்து போகும். அவர்களுடைய ஸ்த்ரீகளின் தொப்பியிலுள்ள பக்ஷிச் சிறகுகள், செயற்கைப் பூக்கள் முதலிய விகாரங்களெல்லாம் மறைந்துவிடும். அவர்களுக்குப் பின் அநாகரிகங்களும், மிகைகளும் காட்சி மண்டபத்திலே விநோதங்களாகக் கொண்டு வைக்கப்படும். அவர்களுடைய கப்பல்களின் ஆகாசப் பாய்கள் வெட்கித் தலை குனியும்.

அப்போது தொழிலும் இன்பமும் கல்வியும் எளிதாகி உண்மையான வலிமை பெறும். இவை யெல்லாம் எப்போது நடைபெறுமென்பதை நானறி யேன். இவை நடக்கும் வரை நாம் தலைவணக்கத் துடன் 'உயர்ந்த கல்வி உயர்ந்த கட்டிடங்களிலேயே கிடைக்கும்' என்ற உபதேசத்தைத் தான் கேட்டுக் கொண்டு பொறுத்திருக்க வேண்டும்.

ரூபங்களும், புறக்கோலங்களும், எதுவரை ஜீவ னுடைய லக்ஷணங்களாகத் தோன்றுமோ அதுவரை அவற்றைப் புறக்கணிப்பது லாபமில்லை யென்பதை நானறிவேன். ஆனால்இதில் பொன்போலப் போற்றத் தகுந்த நடுமை நிலையை எய்த வேண்டுமென்று ஐரோப்பா மிகவும் முயற்சி செய்து பார்த்தும் கைதேறவில்லை. அப்படியிருக்க நாம் அந்நிலையைக் கண்டுபிடிக்க முயற்சி செய்யுமிடத்து நமக்கேன் தடைகள் செய்ய வேண்டும்? அந்த நடுநிலை யாதெனில் டம்பமில்லாமலுமிருக்க வேண்டும்; ஏழையாகவும் கூடாது. இந்த விவகாரத்துக்கு அவனவன் தன் குணத்துக்குத் தக்க உபாயம் கண்டு பிடித்துக்கொள்ளுதல் தகும். பிறரிடமிருந்து கல்வி யின் விஷயத்தை அறிந்துகொள்ள நாம் எப்போதும் தயார். ஆனால் பிறர் குணத்தையும் நமக்குள்ளே புகுத்த முயலுதல் நியாயமில்லை.

மேற்குத் திசையின் ஸ்வீகார புத்திரர் தமது ஸ்வீகாரத் தந்தையைவிட ஓரடி அதிகமாகவே பாய்கிறார்கள். அமெரிக்காவில் ராஜாங்கத்தார் பல பெரிய பாடசாலைகள் நடத்துகிறார்கள். அங்கு பிள்ளைகள் கொடுக்கவேண்டிய சம்பளம் சொற்பத் திலும் சொற்பம்; ஐரோப்பாவிலும் ஏழைப் பிள்ளை களுக்காக மிகவும் குறைந்த சம்பளத்தில் பல பாட சாலைகள் நடக்கின்றன. நமது நாட்டில் வறுமை அதிகமென்பதைக் கருதி இங்கு படிப்பின் செலவைப்

பிள்ளைகளுக்கு மிகுதியாக்குகிறார்களா? கல்வியை விற்பதும் விலை கொள்வதும் வழக்கமில்லாத காலமும் நமது நாட்டில் இருந்ததன்றோ?

பிற நாடுகளில் ஜனங்களுக்குக் கல்வி தருதல் ராஜாங்கத்தார் மிகவும் அக்கறையுடன் செய்ய வேண்டிய கடமைகளில் ஒன்றாக பாவிக்கப்படுகிறது. ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும், ஜப்பானிலும் படிப்பு விஷயத்தில் பொதுப் பணம் செலவிடக் கூசுவதே கிடையாது. ஆதலால், கல்வி அதிக ஜனங்களுக்குக் கிடைக்கிறது. எனவே படிப்பை எத்தனைக் கெத்தனை பிள்ளைகளுக்கு சிரமமாகவும் செலவாகவும் செய்கிறோமோ, அத்தனைக் கத்தனை தேசத்துக்கு நன்மையென்ற வார்த்தை எத்தனைக் கெத்தனை உயர்ந்த ஆஸனத்திலிருந்து எத்தனைக் கெத்தனை சத்தம் போட்டுச் சொல்லப்படுகிறதோ, அத்தனைக் கத்தனை அதிகப் பொய்யாக நமது காதில் படும்.

வயதாக வயதாக கனம் அதிகப் படுதல் நோயற்ற குழந்தைக்கு லக்ஷணம். கனம் அதிகப் படாமலிருந்தால் நல்லதன்று. கனம் குறைந்தாலோ பயப்பட வேறது. அதுபோல் நம்முடைய தேசத்திலும் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளின் தொகை வருஷந்தோறும் அதிகப்பட வேண்டுமென்று தேசாபிமானிகள் விரும்புகிறார்கள். ஏற்கெனவே இங்கு கல்வி நிலம் பெரும் பகுதி தரிசாகக் கிடக்கிறது. அத்தொகை மிகுதிப் படாதிருந்தால் நமக்கு வருத்தமுண்டாகிறது. தொகை குறைந்தாலோ மரணம் நேரிடுமென்றஞ்சி நம்மவருக்கு பயமுண்டாகிறது.

வங்காளத்தில் பள்ளிப் பிள்ளைகளின் தொகை குறைந்து வருவதாகத் தெரிந்து, ஒரு ஆங்கிலோ இந்தியப் பத்திரிகை மிகவும் ஆனந்தமடைய

லாயிற்று. "ஆஹா! வங்காளிகளுக்குக் கல்வியில் உள்ள அபிமானம் இவ்வளவுதானா? கோகலேயின் கட்டாயப் படிப்பு மசோதா சட்டமாயிருந்தால், அது படிக்க ஸம்மதமில்லாத வங்காளிகளுக்குப் பெருங் கொடுமையாக முடிந்திருக்குமன்றோ?" என்று கூறி ஏளனம் புரிந்தது. இவை குரூரமான வார்த்தைகள். தனது ஸ்வதேசத்தைக் குறித்து எவனும் இந்தமாதிரி வார்த்தை சொல்லியிருக்க மாட்டான். இன்று இங்கிலாந்தில் கல்வி விருப்பம் திடீரென்று குறைவு பட்டால், இதே பத்திரிகை உபாயங்களால் அவ் விருப்பத்தைத் தூண்டிவிட வேண்டுமென்று சிபார்சு செய்திருக்கும்.

எனினும், இவர்கள் தமது நாட்டுக் கிரங்குவது போல் இந்தியாவுக் கிரங்குவார்களென்று நம்புதல் அவமானத்துக் கிடமாகும். ஆயினும், தேச பக்தியின் அவஸரங்களையெல்லாம் திருப்தி செய்துகொண்ட பிறகு, பின்னும் கொஞ்சம் நல்லெண்ணம் மிஞ்சி லோபோகார்மாக வடிவெடுத்திருந்தாலும் பெரிய காரியமன்று. மனிதனுடைய தர்ம சிந்தையின் அபிவிருத்தியிலே, தற்கால நிலைமையில், இதர தேசத்தாரை நஷ்டப்படுத்தி ஸ்வேதசத்துக்குப் பொருளும், பலமும் தேடுதல் ஸாத்யமாகிறது. எனிலும் ஆரோக்யம் குறைவுபட்டு வரும் தேச மொன்றைப் பார்த்து, அதற்கு வைத்தியர் ஏடுபடு வதைக் காட்டிலும், பாடை தூக்குவோர் தயார் பண்ணுவதே செலவு குறைந்த உபாயமென்று சொல்ல இடம் கொடுக்கக் கூடாது.

எனிலும் நமக்குள் சுதேசிய ஞானம் தகுந்தபடி ஏற்படாத காரணத்தாலேதான், பிறர் நமது லௌகீக அவஸரங்களையும், கல்வி யவஸரங்களையும் இத்தனை இகழ்ச்சியாகக் கருத நேரிடுகிறது. இது மறுக்க முடியாத விஷயம்.

நமது தேசத்துக்கு நாம் செலுத்தும் மதிப்பைக் காட்டிலும் அன்னியர் அதிக மதிப்புச் செலுத்த வேண்டுமென்று முயற்சி செய்தல் ஒருவித வஞ்சனை; அது ஏமாற்றும் வித்தையென்பது ஸகலருக்கும் தெரியும். சைனாபஜார் சந்தையிலே நடக்கும் உரத்த வாக்கு வாதங்கள் போலே வீண் நேரப் போக்கு. ஸாம்ராஜ்யத்தின் சந்தையில் நாமும் உரத்த குரலுடன் இவ்வளவுதான் செய்திருக்கிறோம்.

கல்வி வேண்டுமென்று கெஞ்சினோம்; மனுப் போட்டோம்; அதில் அக்கறைப்படவில்லை; அதைப் பரப்புவதிலே பாடுபடவில்லை. அதாவது அர்த்தமென்னவென்றால், நாம் நமக்கு விருந்து கேட்கிறோம். நம்மைச் சுற்றிப் பசித்து நிற்போருக்குத் துண்டுகளாவது கிடைக்குமா என்பதை நாம் சிறிதேனும் கவனிக்கவில்லை. ஜனங்களில் பெரும் பகுதிக்குக் கல்வி கற்பித்தால் கெடுதியுண்டாகுமென்று நம்மவர் சொன்னால் அவர்களிடம் அதிகாரிகள் மொத்தத்திலே வங்காளிகளுக்கே அதிகப் படிப்பு அவசியமில்லையென்றும், தீங்கு விளைத்தாலும் விளைக்கக்கூடுமென்றும் கூறுதல் தகும். பொதுஜனக் கல்வி ஏற்பட்டால் கூலியாட்கள் இல்லாமல் போவார்களேயென்று நம்மவர் யோசித்தால், வங்காளிகளில் உயர்ந்த ஜாதியாருக்கு அதிகக் கல்வி கொடுத்தால் அவர்களுடைய அடிமைக் குணம் நீங்கிப் போய்விடுமேயென்று பிறர் ஆலோசனை செய்தல் தகும்.

நமது மனதின் உண்மை நிலைக்கு ஓரடையாளம் யாதெனில், "வங்காளத்து மாகாணக் கான்பரன்ஸ்" என்று சொல்லப்படும் சபையில் வங்காளி பேச வேண்டுமென்ற எளிய விஷயத்தை இத்தனை வருஷங்களாக மறந்துபோய் விட்டார்கள். காரணம் யாதெனில் நாம் நமது தேசத்து ஜனங்களை நம்மவ

றென்று பரிபூர்ணமாக புத்தியில் தரிக்கவில்லை. அது கொண்டே நாம் நமது நாட்டுக்கு முழுக் கிரயம் கொடுக்க இயலவில்லை. நாம் கேட்பது முழு அளவில் கிடைக்கவில்லையெனில், அது கொடுப்பவன் விருப்பமின்மையாலன்று, நமக்கே முழு விருப்பத்துடன் கேட்க விருப்பமில்லையாதலால்தான்.

கல்வியைப் பரப்புதல் என்ற விஷயத்தைக் கவனிக்கப்போகுமிடத்தே, முதல் கஷ்டம் இங்கிலீஷ் கருவியாக இருத்தல் என்று காண்கிறோம். அன்னியர் கப்பல் துறைமுகத்தில் சரக்குகள் கொண்டு சேர்க்கும். உள்நாட்டுச் சந்தைகளில் கொண்டுவந்து பகுத்துக் கொடுக்காது. நாம் பரிபூர்ண நம்பிக்கையை அன்னியக் கப்பலில் வைத்தோமானால் நமது வியாபாரம் பட்டணத்தோடு நின்றுபோம். இது வரை நாம் இதைத் தவறாகவே நினைக்கவில்லை. நாம் இதழ்களால் ஏதுரைத்தாலும் ஹிருதயங்களில் நமக்குத் தெரிந்த தேசம் பட்டணமாத்திரமே. நமக்கு நமது பாஷையினிடத்தே அதிக தயவு தோன்றும்போது இதன் மூலமாகப் பிரதம சிக்ஷை பயிற்ற இடங் கொடுக்கலாமென்று நினைத்தோம். அதற்குமேல் வங்காளி பாஷை எட்ட விரும்பினால், அதை நகைத்தோம்.

இந்த திடமற்ற ஆத்ம—ஸம்சயம் நம்மிடம் எத்தனை காலமிருக்கவேண்டும்? நம்முடைய தாய்ப் பாஷையில் உயர்தரக் கல்வி கற்பித்து அக் கல்வியை முழுதும்நம்மதாக்கிவிட வேண்டுமென்று சொல்லும் தைரியம் நமக்கெப்போதுமே வாராது போகுமா? ஜப்பான் தனக்கு வேண்டியதை மேற்குத் திசையிலிருந்து பற்றிக்கொண்டதன் காரணம் யாது? அதுவும் இத்தனை சீக்கிரத்தில்? அவள் மேற்குக் கல்வியைத் தனது பாஷையில் சிறைப்படுத்திக்கொண்டாள். ஜப்பானிய பாஷை நமது பாஷையைக்

காட்டிலும் சொல் வளமுடையதென்று நினைக்கிறீர்களா? புதிய புதிய பதங்கள் புனைந்து கொள்வதில் வங்காளி பாஷைக்கிருக்கும் சக்தி அநந்தம். தவிரவும் ஐரோப்பிய சாஸ்திரம் ஜப்பானியருக்கு எத்தனை அந்நியமோ அத்தனை நமக்கன்னியம் அன்று. ஆனால் ஜப்பான் பிரதிக்ஞை செய்து கொண்டாள்:- "நமது பாடசாலைகளில் ஐரோப்பிய சாஸ்திரத்தை நிலை நிறுத்தக் கடவோம்!" என. அவள் அங்ஙனம் சொல்லியது மட்டுமன்று. செய்து காட்டினாள். பயனை நுகர்கிறாள். உயர்தரக் கல்வி நமது பாஷை மூலமாகக் கொடுக்க வேண்டுமென்றும், அப்படிக் கொடுத்தால்மாத்திரமே அக் கல்வியால் நமது நாட்டுக்குப் பயனுண்டாகுமென்றும் சொல்லக் கூட நமக்கு இன்னும் தைரியம் பிறக்கவில்லை.

நாம் இங்கிலீஷ் பாஷையும் படிக்க வேண்டுமென்றும் கூறுதல் மிகை. அதுவும் கேவலம் ஜீவனார்த்தமாக மாத்திரம் செய்யக்கூடாது. இங்கிலீஷ் மாத்திரமேன்?, ப்ரெஞ்ச் பாஷையும் ஜெர்மன் பாஷையும் படித்தால் இன்னும் விசேஷம். வங்காளிகளிலே பெரும் பகுதிக்கு ஒரு காலத்திலும் இங்கிலீஷ் வராதென்று கூறுதலும் மிகையேயாம். இந்த லக்ஷக் கணக்கான வங்காளி பாக்ய ஹீனருக்குப் புத்தி பசித்தும், அரைப்பசி யுடனேனும் தான் இருக்க வேண்டுமென்பது நம்முடைய கொள்கையா?

நமது நவீனக் கல்வியென்னும் சிக்கான யந்திரத்தில் யாதேனுமொரு மாறுதல் செய்ய வேண்டுமானால் அதற்கு ஏராளமான புடைத்தலும் இடித்தலும் சம்மட்டி வேலையும் செய்ய வேண்டும். மேலும் அது செய்ய வலிய தோள் வேண்டும். வீரத்தனமுடைய ஸர் ஆசு தோஷ் மூக்கர்ஜி அங்ஙனம் சற்றே யத்தனம் செய்து கொஞ்சம் தேச பாஷைக் கப்பியை உள்ளே நுழைத்திருக்கிறார். ஸர் ஆசு

நோஷ் மூக்கர்ஜி செய்துவைத்த காரியம் யாதெனில் எந்த வங்காளியும் இங்கிலீஷில் எவ்வளவு படித்திருந்தாலும் வங்காளி பாஷையில் பாண்டித்ய மில்லாவிடில் பூர்ண பண்டிதனுகக் கருதப்பட மாட்டான் என்று செய்து வைத்தார். இது இங்கிலீஷ் தெரிந்தவருடைய படிப்பை ஸம்பூர்ணப்படுத்தும் வழியாயிற்று. வங்காளி மாத்திரம் தெரிந்து இங்கிலீஷ் தெரியாதவர்களுடைய கதி என்ன? அவர்களுக்கு வங்காளி "யூனிவர்ஸிடி" (ஸர்வகலாசாலை) என்ன சொல்லுகிறது? இங்ஙனம் கொடுமையான அஸம்பாவிதம் பாரத தேசத்தைத் தவிர வேறெந்த தேசத்திலேனும் உண்டென்று நினைக்கிறீர்களா?

"கவித்தனம் பேசினதிலே பயனில்லை. நடக்கிற வார்த்தை சொல்ல வேண்டும். ஒரேயடியாக அதிகம் எதிர்பார்த்துவிடக் கூடாது" என்று என்னிடம் சிலர் சொல்லக்கூடும். அதிகம் எதிர்பார்க்கிறேனு? நடக்கிற காரியத்தை மாத்திரம் சொல்ல வேண்டுமென்று தொடங்கினுல் பேசவே இடமில்லை. எவன் மனதிலேனும் என் வார்த்தைகளினுலே சிறிது சலனம் ஏற்பட்டால் அதுவே எனக்குப் போதும். அந்தச் சலனம் என்னை வைதல் அல்லது அடித்தல் என்ற ரூபமாகவந்தாலும் சரியே.

இனி "ஸாத்தியமான" காரியங்களைப் பேசுவோம்.

பூர்வத்தில் நமது ஸர்வகலாசாலை, பரீக்ஷைக்கு வரும் மாணுக்கருக்கு ஒரு வித குஸ்திக் கொட்டகை போலிருந்தது. இப்போது அதில் கொஞ்சம் அதிக எல்லை சேர்க்கப்பட்டிருக்கிறது. குஸ்திகளுக்கு நடுவே குஸ்திக்காரர் வந்து கொஞ்சம் இளைப்பாறும் பொருட்டாக வெளியிலிருந்து கீர்த்திபெற்ற பண்டிதர்களை இங்கு வந்து ப்ரஸங்கம் செய்யும்படி கேட்

...ரும். நமது வித்வான்களுக்கும் ப்ரஸங்க ஸ்தானங்கள் ஏற்பாடு செய்கிறோம். இந்தக் கடைசி நவுக்கும் மூல புருஷர் மேற்படி தீர ஸர் ஆசுதோஷ் மூக்கர்ஜீதானென்று கேள்விப்படுகிறேன்.

இப்போது நான் என்ன சொல்லுகிறேனென்றால் பழைய யூனிவர்ஸிடி அதன் பழைய வழிப்படியே நடக்கட்டும். இந்த விசேஷ உபந்யாஸங்களை வங்காளிகளுக்கு மாத்திரமென்று தனியாக ஏன் விடக்கூடாது? கல்வி விருந்துக்கு அழைப்பின் மேலே வந்தவர்களுக்கு உள்ளே சோறு போடு. நல்ல செய்தி கேட்டு வந்த பிறருக்கு வாசலிலே உட்கார இடங்கொடு. உள்ளே இருப்பவர்களுக்கு இங்கிலீஷ் மேஜைபோடு, வெளியே இருப்போர் தங்கள் வாழை யிலையை உபயோகப்படுத்திக் கொள்ளுவார்கள். வாயில்காப்போரை விட்டு அவர்களை வெளியே தள்ளச் சொன்னால், விருந்துக்கு இடையூறன்றோ? அவர்களுடைய சாபம் வானத்திலே கேட்காதோ?

கங்கா யமுனைகளின் புண்ய ஸங்கமும் போலே, இங்கிலீஷ், வங்காளி என்ற இரண்டு பாஷைகளின் மூலமாகவும் இரண்டு கல்வி யாறுகள் வந்து இங்கே கூடினால், அப்போது வங்காளத்து மாணாக்கர் எல்லோருக்கும் இது உண்மையிலே தீர்த்த யாத்திரை ஸ்தலம் போலாகும். இவற்றுள் ஒன்று கருநிற மாகவும், மற்றது வெண்ணிறமாகவும் பேதம் புலப் படத்தான் செய்யுமெனினும், இரண்டும் கூடிப் பாய்ந்து தேசத்தின் கல்வியை விசாலமாகவும் உண்மையாகவும் ஆழமாகவும் புரியும்.

ஒரு பட்டணத்தில் ஒரே வீதியிருந்தால் அது நெருக்குண்டுபோம். அதனாலேதான் பட்டணத் திருத்த ஏற்பாடுகளில் புதிய வீதிகள் போடுகிறார் கள். நமது ஸர்வகலாசாலைப் பயிற்சிக்கு மற்றொரு

பெரிய வீதி போடவேண்டுமென்று நான் சொல்லும் யோசனையை அனுஸரித்தால், பழைய ரஸ்தாவில் ஜன நெருக்க மதிகமென்பதாக இப்போதுண்டாகும் புகார் நின்று போம்.

உபாத்திமைத் தொழிலனுபவத்தில் நான் தெரிந்துகொண்ட விஷயம் யாதெனில், மாணுக்கரில் பலருக்கு பாஷைகள் கற்றுக்கொள்ளும் திறமை இயற்கையிலே குறைவு. அப்படிப்பட்டவர்கள் இங்கிலீஷ் சரியாகத் தெரியாமல் மிகவும் சிரமப் பட்டுப் பிரவேசப் பரீக்ஷை தேறுவார்கள். மேற்படி களிலே நொறுங்கிப் போவார்கள். வங்காளிப் பிள்ளைகளில் பெரும்பகுதி இங்கிலீஷ் பாஷையை வசப்படுத்த முடியாமலிருப்பதற்கு வேறு காரணங் களும் உள. வங்காளிகளுக்கு அந்த பாஷை முத லாவது மிகவும் கடினமானது. உடைவாளின் உறைக்குள் இங்கிலீஷ் கத்தியைப் போட முயல்வது போலே. இங்கிலீஷ் கற்றுக் கொடுக்கத் தக்க வாத்தி யார்களின் தொகை குறைவாதலால், சரியான இங்கிலீஷ் போதனை சில பிள்ளைகளுக்குத்தான் கிடைக்கிறது. ஏழைகளின் மக்களுக்கு கிடையாது.

ஆதலால் தான் தேடி வந்த மருந்து இன்ன தென்று தெரியாமல் மலையோடு தூக்கிக்கொண்டு போன அனுமானைப்போலே, இந்தப் பிள்ளைகள் அந்த பாஷையை நேரே உபயோகிக்கத் தெரியாமல் புஸ்தக முழுதையும் குட்டியுருப் போடும்படி நேரிடு கிறது. அஸாத்ய ஞாபக சக்தியுடையவர்கள் கடைசிவரை படிக்கிறார்கள். ஸாதாரண புத்தி யுடைய பிள்ளைகளாலே இயலவில்லை. பாஷைத் தடையின் கதவுகளை இவர்களால் திறக்கவும் முடி யாது, ஏறிக் குதிக்கவும் வழியில்லை.

ஜன்மக் குறையாலோ வேறு எவ்விதக் காரணத் தாலோ இங்ஙனம் இங்கிலீஷ் பாஷையில் தேர்ச்சி

10

பெற ஸாமர்த்தியமில்லாத பிள்ளைகளை நாம் பிரமாண்டமான குற்றவாளிகளாகக் கருதி ஸர்வ கலா சாலைக்குள் எக்காலத்திலும் புகக்கூடாதென்ற உத்தரவு போடுதல் நன்ளு? இங்கிலாந்தில் ஒரு காலத்தில் ஸாதாரணத் திருடரைத் தூக்கிலிட்டுக் கொல்வது வழக்கம். ஆனல் இந்த தண்டனை விதி அதனிலும் கொடிதாக இருக்கிறது. ஏமாற்ற முடியாததற்காகக் கடைசி தண்டனை விதிக்கிறது. ஆம்; குட்டி யுருப்போட்டுப் பரீக்ஷை தேறுவது ஏமாற்றுதல்தானே? புஸ்தகத்தைத் துணியில் மறைத்து வைத்துக்கொண்டு பரீக்ஷை மண்டபத்திலே பார்த்தெழுதுதல் வஞ்சனையென்ருல் மூளைக்குள் உருவேற்றி வைத்துக்கொண்டு போவதும் வஞ்சனைதானே?

இந்தக் குட்டியுருப் பேர்வழிகளின் மேலே நான் குற்றம் கொண்டு வந்ததாக நினைக்க வேண்டாம். ஆனல் பின்னே நிற்போருக்கு ஒரு வழிவிட வேண்டாமா? ஹூக்ளி நதிப் பாலத்தில் நடக்க அனுமதியில்லாதவர்கள் நதியைக் கடந்துவ்ர இங்கிலீஷ் புகைத் தோணி கொடுக்காவிட்டாலும் நாட்டுப் படகு கொடுக்கக் கூடாதா? அன்னிய பாஷை படிப்பதில் ஸாமர்த்தியமில்லாத பிள்ளைகள் அத்தனை பேருக்கும் உயர்தரக் கல்வியில்லாமல் செய்து அவர்களுக்குள்ள புத்தியையும், படிக்க வேண்டுமென்ற ஆவலையும் விழலாக்குவது தேசத்துக்கு பயங்கரமான பெரிய நஷ்டமன்ருே?

ஆதலால் நான் சொல்லும் யோசனை யாதெனில் பிரவேசப் பரீக்ஷைக்கு முந்தின வகுப்பு முதற் கொண்டே பாஷை வழியை இரண்டாக்கி, எந்தக் கதவு மூலமாக ஸர்வகலாசாலையில் புக விருப்பமோ அது வழியே புகலாமென்று வைக்க வேண்டும். நான் மேலே சொல்லியபடி, இதனல் பழைய ரஸ்தாவில்

பெருங் கூட்டம் கூடாமல் இருக்கும் நன்மை யொன்று மாத்திரமேயல்லாது உயர்தரக் கல்வியை மிகவும் விசாலமாகப் பரவச் செய்யும்.

இருந்த போதிலும் இங்கிலீஷ் வழிக்குத்தான் பெரும்பகுதியான பிள்ளைகள் சேருமென்பதையும், இரண்டு பாஷைகளுக்கும் ஸஹஜ மதிப்பேற்பட நெடுங்காலமாகுமென்பதையும் நானறிவேன். ராஜ பாஷைக்குப் பகட்டதிகம். அதற்கு வியாபாரச் சந்தையிலும் விவாகச் சந்தையிலும் அதிக கிராக்கி யிருக்கத்தான் செய்யும். இருக்கட்டும். தாய் பாஷையை அலக்ஷியம் பண்ணினாலும் பண்ணுங்கள். நிஷ்ப்ரயோஜன மாக்கிவிடாதேயுங்கள். பணமுள்ள வன் குழந்தை செவிலித் தாயின் பால் குடிக்கட்டும், ஏழையின் குழந்தைக்குத் தாயின் பால் இல்லாமல் செய்துவிடாதேயுங்கள்.

நானும் எனது வாழ்நாளில் பல சண்டைகளிலே குட்டுப் பட்டிருப்பதால், இப்போது வார்த்தை சொல்லும்போதெல்லாம் வெகு ஜாக்கிரதையுடன் சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டுதான் பேசு வேன். இருந்தாலும் வழக்கத்துக்கு சக்தி யதிகம். உண்மை கடைசிவரை வெளிப்படத்தான் செய்யும். ஓரத்தில் அடி வைக்க இடம் கேட்பது போலே கேட்டு வெகு தந்திரமாக ஆரம்பம் செய்தது பற்றி நானே என்னை மெச்சிக்கொண்டேன். வாங்காளி முதற்பாட புஸ்தகத்தில் வருகிற, கொடுத்ததை மாத்திரமே வாங்கி உண்ணும் கோபாலன் என்ற நல்ல பிள்ளை மாதிரி என்னை பாவித்தேன். அந்த யோசனையைக் கேட்டு யூனிவர்ஸிடி அதிகாரிகள் திரஸ்காரம் பண்ணுவார்களே யொழியக் கோபித் துக்கொள்ள மாட்டார்கள். ஆனல் மேற்படி நல்ல பிள்ளை கோபாலன் ஆரம்பத்திலே எவ்வளவு நல்ல வனுக இருந்தும் பசி அதிகப்பட அதிகப்பட இரைச்

போடத்தொடங்கிவிட்டான். நமதுபாஷைக்குச் சரிபாக எனது வேண்டுதலும் வளர்ந்துவிட்டது. அதனால் யோசனைக்கும் அது சொல்வோனுக்கும் விபத்தென்பதை நானறிவேன். இருந்தாலும் அது ஒன்றும் புதிதில்லை. குழந்தை மரணவிஹிதம் மிகவும் அதிகமாகிய இந்த நாட்டில், நூற்றுக் கிருபத்தைந்து புதிய யோசனைகள் சிசுப் பிராயத்திலேயே மடிகின்றன. மேலும் நான் விபத்துக்களுக்கு நெடுந்தூரம் பழக்கப்பட்டதினின்று அவை விபத்துக்களாகவே தோன்றவில்லை.

எதிர் விவகாரம் என்ன செல்வார்களென்பதை நானறிவேன். "வங்காளி பாஷையில் உயர்தரக் கல்வி கொடுக்க வேண்டுமென்று சொல்லுகிறீரேங்காணும்! அந்த பாஷையில் பாடப் புத்தகங்கள் இல்லையே" என்று கேட்பார்கள். அந்த பாஷையில் பாடப் புத்தகங்கள் இல்லையென்பதை நானறிவேன். ஆனால் அந்த பாஷையில் உயர்தரக் கல்வி கற்பிக்கத் தொடங்காவிட்டால் பாடப்புஸ்தகங்கள் எங்கிருந்துவரும்? அவை ரஸங்களைக் கருதி ரஸிகர்களாலே பயிர் செய்யப்படும் அலங்காரச் செடிகளல்லவே! கேவலம் ப்ராண பலத்தாலே பூமியை வந்து மேவுகிற களைப் பூண்டுகளுமல்லவே. உயர்தரக் கல்விப் பாடப் புஸ்தகத்துக்காகக் காத்திருந்தால் தழைக்குப் பின் நான் தோன்றுவேனென்று மரம் காத்திருக்கும். கரைக்குப் பின் நான் தோன்றுவேனென்று நதி காத்திருக்கும்.

வங்காளி பாஷையில் உயர்தரக் கல்விக்குத் தகுந்த பாடப் புஸ்தகங்களில்லையென்பதொரு குறையாயின், இந்த பாஷையைக் கல்விக்கு வாஹனமாக்குதலே அக் குறையை நீக்கும் வழியென்று நான் மீட்டும் சொல்லுகிறேன். வங்கிய ஸாஹித்ய பரிஷத் என்ற இலக்கியச் சங்கத்தார் சிறிது கால

மாகக் கல்வியின் வெவ்வேறு சாகைகளுக்குப் பயன் படத் தகுந்த ஸங்கேத மொழிகள் கண்டு பிடித்தும் உண்டாக்கியும் அஸ்திவாரத் தொழில் செய்து வருகிறார்கள். அதன் தொழில் மிகவும் மெதுவாக நடக்கிறதென்று சிலர் குறைகூறக் கேட்கிறோம். அது தொழில் செய்வதே வியப்பன்றோ? தூண்டுதலெங்கே? இந்த ஸங்கேத பதங்களை உபயோகப் படுத்த இடமெங்கே? ஒரு நாணய சாலைக்காரர் தங்கள் நாணயங்களை யாரும் வாங்கலாகாதென்று விதி ஏற்பட்ட பிறகு மேலே நாணயம் அடித்துக் கொண்டே போவார்களா? ஸர்வகலாசாலையார் வங்காளி மூலமாகக் கல்வி கற்பிக்க வழி திறந்தால் அப்போது பரிஷத்துக்குப் பயன் ஏற்படும்.

நமது பாஷையிலே கல்விப் பெரு விருந்துக்குரிய பண்டங்களும் உபகரணங்களு மிருக்கின்றன. ஆனால் ஸ்தானமில்லை. இது மிகவும் வருந்தத் தக்கது. நமக்குள்ளே ஜகதிச சந்திரவஸு, நமது ப்ரபுல்ல சந்த்ரராய், நமது வரஜேந்த்ர நாத சீல், நமது மஹா மஹோபாத்யாய சாஸ்திரி முதலிய பண்டிதர்கள் இருக்கிறார்கள். பகிரங்கமாகவும் மறைவாகவும் இன்னும் இவர்களைப்போல் எத்தனையோ வங்காளிகள் இருக்கிறார்கள். இருந்தும் வங்காளி மாத்திரம் தெரிந்தவர்களுடைய அறிவுப் பசியை நீக்க ஒருபோதும் வழிஏற்படாதா? அப்படிப் பட்ட மாணாக்கர்கள் இம் மஹான்கள் தமது தேசத்தாராக இருப்பது பற்றி கர்வப்பட மாத்திரம் இடம் வைத்துப் பயன்பெற இடமில்லாமல் வைத்து விடப் போகிறீர்களா? நமது ஸர்வகசாலையின் உதார குணத்தால் வெளி நாட்டு மாணாக்கர் கடல்களைத் தாண்டி வந்து இவர்களிடம் கல்வி கற்றுச் செல்லுகிறார்கள். ஆனால் தாய்மொழி மாத்திரமே அறிந்த வங்காளி மாணாக்கனுக்கு அவர்களுடன் உட்காரத் தகுதியில்லை!

ஜெர்மனியிலும், ப்ரான்சிலும், அமெரிக்காவிலும், ஜப்பானிலும் மனுஷ்யருடைய புத்தியைப் பக்குவப்படுத்தும் பொருட்டு நவீன ஸர்வகலாசாலைகள் தோன்றியிருக்கின்றன. அவை ஜனங்களின் அறிவையும் குணத்தையும் விருத்தி செய்து தமது நாடுகளைப் புதுமை செய்துகொண்டு வருகின்றன. அந்த விதமான புதிய ஸ்ருஷ்டி அன்ய பாஷை மூலமாகச் செய்ய முடியாது. இங்கே, நமது கல்வி நிஷ்ப்ரயோஜனமாகப் போவதன் முக்கிய காரணம் யாதெனில், நாம் சம்பாதிக்கும் அறிவினால் நமது பாஷை செழிப்படையவில்லை. எப்போதும் உயர்ந்த மதிக்குப் புறத்தே தள்ளப்படுவதால் நமது பாஷை நம் அறிவு முதிர்ச்சியுடன் தொடர்ந்து வளர இடமில்லாமல் போகிறது.

இந்த ஸ்திதியில் விளைந்த பயன் யாதென்றாலோ, நாம் உயர்ந்த கல்விப் பயிற்சி பெற்றோமேயல்லாது, உயர்ந்த யோசனைகள் பண்ணவில்லை. நமது காலேஜ் - உடுப்பைப் போலவே, காலேஜ் - பாஷையையும், மூளையிலே மாட்டிப் பாடசாலையில் படித்ததையெல்லாம் அந்தச் சட்டையின் பையிலே போட்டு வைக்கிறோம். பின்பு வம்பளப்பதும், தூற்றுவதும், ராஜா உண்டாக்குவதும், தள்ளுவதும் மொழி பெயர்ப்பதும், வசனந்திருடுவதும், பரிதாபத் துக்கிடமான கந்தை வர்த்தமானப் பத்திரிகைகளில் கோழைக் குப்பைகளெழுதுவதும் எல்லாம் தேச பாஷையில் செய்கிறோம்!

இப்படியிருந்தும் நம்முடைய இலக்கியம் கொஞ்சம் அபிவிருத்தி யடைந்திருக்கிறதென்பதை நான் மறுக்கவில்லை. இருந்தாலும் இன்னும் பல பசியடையாளம் காட்டத்தான் செய்கிறது. அளவில்லாமல் தின்றும் மெலிந்திருக்கும் அஜீர்ண நோயாளி போல் நமதிலக்கியம் நாம் படித்தன

யெல்லாம் நேரே ஜீர்ணமாக்கிக்கொள்ளவில்லை. நாம் விழுங்குவது நமது பிராணனை பலப்படுத்த வில்லை. அவற்றை நாம் நாவினால் ருசி பார்ப்ப தில்லை. தொண்டைக் குழி வழியே சரிக்கிறோம்; வயிற்றிலே பெரிய சுமை; உடம்புக்குப் போஷணை இல்லை.

நமது ஸர்வகலாசாலை லண்டன் நகரத்து ஸர்வ கலாசாலையின் மாதிரியைத் தழுவி ஆக்கப்பட்டது; அதாவது, இந்த ஸர்வகலாசாலை ஒரு பெரிய சாய முத்திரை போடுகிற யந்திரம். இதன் நோக்கம் மனுஷ்யரை உண்டாக்குவதன்று, அவர்களுக்கு முத்திரை போடுதல். சந்தை விலைகள் தெரிந்து கொள்வதில் வியாபாரிகளுக்குத் துணை செய்கிறது. படிப்பென்ன வந்ததென்பதைக் கவனியாமல் முத் திரை வாங்கிக்கொண்டு வருவதில் நாம் திருப்தி கொண்டோராயினோம்; இது நமக்கு மிகவும் எளிதா யிற்று. ஏனெனில் நெடுங்காலமாகவே நாம் ஆசார அனுஷ்டானங்களில் பூர்வ நியதமான முன் மாதிரியைக் குருட்டுத்தனமாகப் பின்பற்றி நடப் பதில் வழக்கப்பட்டுத் தேறியிருக்கிறோம். நாம் ஆராதனை செய்து வரும் புராதன மாதிரிகளைத் தவிர வேறு மாதிரிகள் உண்டாக்க முடியுமென்ற எண்ணமே நமக்கு உதிப்பது கிடையாது.

ஆதலால் நான் சொல்லும் யோசனை ஸாதா ரண வங்காளித் தகப்பனுக்கு ஸம்மதமாகா விடினும், இதை அனுசரித்தால் இங்கிலீஷ் வழியின் வலையைக் கடந்து செல்ல மாட்டாத பிள்ளைகளுக்குப் பயனுண்டென்பது மாத்திரமேயன்றி, அதைவிடப் பெரிய பயன் ஒன்றுண்டு. அதாவது இயற்கை வழி யிலே நமது பாஷை வளர விடுதலை பெறும். சந்தை மதிப்பில்லையென்ற காரணங்கொண்டே, அது சந்தை நிபந்தனைகளுக்கு அடிமைப் படாது பிழைக்

ரும். இக் காரணத்தால் லாபத்தைக் கருதி இங்கிலீஷ் பாஷையில் செல்ல உடன்பட்ட பலர் அத்துடன் அன்பு காரணமாகத் தேச பாஷை வழியையும் கொள்வர். மிகவும் சீக்கிரத்தில் தாய்ப் பாஷையில் உபந்யாஸகர்கள் தமது மேதை முழுதையும் வெளிப்படுத்துவார்களென்பது திண்ணம். இப்போது ப்ரதி பதங்களும், இங்கிலீஷ் பாடப் புஸ்தக வியாக்யானங்களுமாகிய குப்பையைக் கிளறிக் கொண்டிருப்போர் அப்போது பசித்திருக்கும் நாட்டில் உயிர் தரும் கொள்கைகளைப் பரவச் செய்வார்கள்.

இங்கிலீஷ் படித்த வங்காளி தனது புதிய ஸம்பாதனச் செருக்கினால் வங்காளி பாஷையை இகழ்ச்சியுடன் நோக்கிய காலம் ஒன்றிருந்தது. எனினும், ஏதோ மாய வழியால் வங்காளத்தின் ஹ்ருதயத்தினின்றும் நமதிலக்கிய விதை முளை விட்டது. ஆரம்பத்திலே அதன் சிறிய மெல்லிய முளையைக் கண்டு நகைத்தல் சுலபமாக இருந்தது. ஆனால் எவ்வளவு சிறிதாயினும் உயிருடைய வஸ்துவொன்றை நெடுங்காலம் ஏளனத்தால் அடக்கி வைக்க முடியாது. இன்று அதன் முடியை மிகவும் உயர்த்தி இங்கிலீஷ் படித்த வங்காளிகளின் ஆங்கிலேய உபந்யாஸங்களை நோக்கிப் புன்னகை செய்யும் நிலைமைக்கு வந்து விட்டது. இந்தப் பயன் அதிகாரிகளின் தயவு கலக்காமல் விளைந்தது. அவர்கள் புறக்கணித்தனர். சார்பு நாடுகளில் இது பெரிய கஷ்டம். அப்படியிருந்தும் தன் உயிரில் தான் மகிழ்ந்து வளர்ந்தது. இப்போது பூ மண்டலத்தின் அங்கிகாரம் பெற்று விட்டது.

நமது கையிலிருக்கும் ஸாதனங்களைக் கொண்டு இப்போதுள்ள ஸர்வகலா ஸங்கத்தின் யந்திரத்தை மாற்றுதல் ஸாத்யமில்லையென்று முன்னமே கூறி

னேன். இதன் காரணங்கள் இரண்டு. முதலாவது இந்த யந்திரம் ஒரு குறிப்பிட்ட நோக்கத்துக்குப் பயன்படுத்த வேண்டுமானால் இதைத் தலை முதல் கால்வரை மாற்றவேண்டும். இரண்டாவது, நமது வடிவாராதனைக்காரர் இந்த ஸர்வகலாசாலை ரூபத்தைக் கண்டு எவ்வளவோ தூரம் மயங்கிவிட்டார்களாகையால், அவர்கள் புதுமையாக ஜாதியக் கல்விச் சங்கங்களும், ஹிந்து ஸர்வகலாசாலைகளும் செய்யத் தொடங்கியபோதும் இதன் அழியாத முத்திரையை அவர்களால் மறக்க முடியவில்லை.

எனவே, இதனைச் சீர்திருத்த ஒரே வழி. இதன் யந்திரமனைக் கருகே ஓருயிர்ச் செடியை நட இடங் கேட்கவேண்டும். இப்போது சத்தமும் விவாதமுமில்லாமல் அந்தச் செடி ஒரு நாள் தலை தூக்கித் தழை, மலர்களின் வளத்தால் தனது பக்கத்திலுள்ள கோரமான யந்திரசாலையை நகைத்து நோக்கும். இங்ஙனம் கல்வி யந்திரசாலை இரைச்சலுடன் சந்தைக்கு மூட்டை தயார் செய்து போட்டுக்கொண்டிருக்க, அருகிலுள்ள ஜீவ விருக்ஷம் தேச முழுமைக்கும் பழமும் நிழலும் கொடுப்பதுடன் எண்ணிறந்த பாட்டுப் பக்ஷிகளுக்குத் தன் கிளைகளிலே வாஸம் தரும்.

இந்தக் குப்பையான பழைய யந்திரத்துடன் நான் ஸமாதானம் ஏன் பேச வேண்டும்? நமது நீதி ஸ்தலங்கள், கச்சேரிகள், போலீஸ் டாணுக்கள், சிறைச்சாலைகள், பைத்திய வைத்தியசாலைகள் முதலிய நம்முடைய நாகரிகக் கோலங்களுடன் அதுவும் ஒன்றாகச் சேர்த்துவிடுங்கள். தேசத்துக்குப் பழமும் நிழலும் வேண்டுமாயின், இந்தச் செங்கல் சுண்ணாம்புக் கட்டிடங்களை விட்டு வெறுந் தரைக்கு வருக. வேத காலத்தில் காட்டில் ஆசிரமங்களிலும் பௌத்த காலத்தில் நளந்தா, தக்ஷசிலா முதலிய

இடங்களிலும், இன்று நமது வீழ்ச்சிக் காலத்திலே கூடத் திண்ணைப் பள்ளிக்கூடங்கள், சாஸ்த்ரப் பாட சாலைகளிலும் பிள்ளைகள் கூடவில்லையா? அது போலே இப்போதும் நாம் ஸர்வகலாசாலை வைத்து நமது பிராண சக்தியால் போஷிப்போமென்று ஏன் தைரியத்துடன் சொல்லக் கூடாது? ஸ்ருஷ்டியில் முதற்படி விரும்புதல்; இன்று நமது தேசத்தில் அவ் வித விருப்பத்தின் சலனங்கள் இல்லையா? ஆராய்ச்சி யிலும் தியானத்திலும் படிப்பிலும் ஈடுபட்ட நமது நாட்டு வித்வான்கள் தமது வித்தையைப் பிறருக் குக் கொடுக்க வேண்டுமென்று இச்சைப் படுவது போல் அதை அவர்களிடம் பெறவேண்டுமென்று ஏறிச் செல்லும் நீராவியோடு கலந்து செழிப்பை யுண்டாக்கும் மழையாக விழுகின்ற மேகங்களைப் போலத் தாய்ப் பாஷையிற் கலந்து தாய் நாட்டி லுள்ள தாகங்கொண்டோருக்குத் தண்ணீராகவும், பசித்தோருக்கு ஆகாரமாகவும் பெருக்கெடுக்க ஆசை கொள்வோர் யாருமில்லையா?

கடைசியாகக் கூறிய எனது வார்த்தைகள் கிரி யாம்சையில் ஸாத்யமானவையல்ல; ஒரு கருத் தையே அவை வெளியிடுகின்றன. ஆனால் இந்தக் காலம் வரை கிரியாம்சையில் ஸாத்யமாகக் கூடிய ஆலோசனைகள் ஒட்டுப் போடுவதற்குத்தான் உதவி யிருக்கின்றன; கருத்துக்களே உண்மையான சிருஷ்டி செய்துள்ளன.

★

# இன்ப நிலையத்தின் இணையற்ற நாவல்கள்

### கவி. கா. மு. ஷெரீப் எழுதியவை

| | | |
|---|---|---|
| தஞ்சை இளவரசி | 3 | 00 |
| நல்ல மனைவி | 4 | 00 |
| விதியை வெல்வோம்! | 4 | 50 |

### கலைஞர் ஏ. பி. நாகராஜன் எழுதியது

| | | |
|---|---|---|
| கலையரசி | 3 | 00 |

### துமிலன் எழுதியவை

| | | |
|---|---|---|
| பந்தயத்துக்குப் போனாள் | 5 | 00 |
| கட்டாயக் கல்யாணம் | 2 | 00 |
| ஏ...டாக்ஸி! | 3 | 00 |
| புதிய நட்சத்திரம் | 6 | 00 |
| விவாக ரத்து | 4 | 00 |
| மிஸ்டர் சுப்பு | 3 | 00 |
| பம்பாய் குடித்தனம் | 2 | 00 |

### எஸ். கல்யாணி எழுதியவை

| | | |
|---|---|---|
| புகழ் ஏணி | 4 | 00 |
| வேண்டாத குழந்தை | 1 | 50 |

### "லக்ஷ்மி" எழுதியவை

| | | |
|---|---|---|
| மிதிலா விலாஸ் | 6 | 00 |
| பெண் மனம் | 3 | 50 |
| சூர்யகாந்தம் | 6 | 00 |
| லட்சியவாதி | 5 | 00 |
| காஞ்சனையின் கனவு | 4 | 50 |
| பவானி | 3 | 50 |
| வீரத்தேவன் கோட்டை | 1 | 00 |
| மரகதம் | 1 | 50 |

### ஆர். ஷண்முகசுந்தரம் எழுதியவை

| | | |
|---|---|---|
| நாகம்மாள் | 2 | 00 |
| பூவும் பிஞ்சும் | 2 | 00 |
| எண்ணம்போல் வாழ்வு | 2 | 00 |
| பனித்துளி | 1 | 50 |

### க. நா. சுப்ரமண்யம் எழுதியது

| | | |
|---|---|---|
| பட்டணத்து வாழ்வு | 4 | 00 |
| பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் —குயிலன் | 3 | 00 |
| எரி நட்சத்திரம் —புஷ்பா மகாதேவன் | 1 | 50 |

### விகரு. இராமநாதன் எழுதியவை

| | | |
|---|---|---|
| பெற்றால்தான் பிள்ளையா? | 3 | 00 |
| குடியிருந்த கோயில் | 2 | 50 |

# இன்ப நிலையத்தின் இலக்கிய நூல்கள்

★

| | | | |
|---|---|---|---|
| வீரக் கண்ணகி | —ம. பொ. சி. | ... | 2-50 |
| இலக்கியச் செல்வம் | ,, | ... | 2-00 |
| சிலப்பதிகாரமும் தமிழரும் | ,, | ... | 0-50 |
| வள்ளுவர் வகுத்த வழி | ,, | ... | 0-50 |
| கட்டுரைக் களஞ்சியம் | ,, | ... | 2-50 |
| திருக்குறள் புது உரை | —நாமக்கல் கவிஞர் | ... | 6-00 |
| கம்பரும் வால்மீகியும் | ,, | ... | 4-00 |
| திருவள்ளுவரும் பரிமேலழகரும் | ,, | ... | 1-50 |
| வள்ளுவரின் உள்ளம் | ,, | ... | 1-50 |
| திருவள்ளுவர் திடுக்கிடுவார் | ,, | ... | 1-50 |
| தமிழ்த் தேன் | ,, | ... | 2-00 |
| மின்னல் பூ | —பெ. தூரன் | ... | 3-00 |
| ஆதி அத்தி | ,, | ... | 1-50 |
| பல்சுவைக் கட்டுரைகள் | —சோமலெ | ... | 2-00 |
| பண்டிதமணி | ,, | ... | 3-00 |
| திருக்குறளின் பெருமை | —தொகுப்பு நூல் | ... | 3-50 |
| தமிழ் மறைக் கட்டுரைகள் | ,, | ... | 3-50 |
| தமிழ்ப் பெரியார் திரு. வி. க. | ,, | ... | 1-75 |
| தமிழ்த் தாத்தா உ. வே. சா. | ,, | ... | 1-75 |
| தளபதி வ. உ. சிதம்பரனார் | ,, | ... | 1-25 |
| தமிழ்ச் சுவை | —வலம்புரி அண்ணாமலை | ... | 2-00 |
| சங்கத் தமிழ்க் கதைகள் | ,, | ... | 1-00 |